ஐந்தாம் பாட புத்தகம்

சென்னை - துரைத்தன
மாதர் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும்
'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய
கா. நமச்சிவாய முதலியார்
எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை:
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

ரெஜிஸ்தர் செய்தது] 1917 [விலை 5 அணா

PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS

முகவுரை

இந்தப் பாட புத்தகத்தில் அடங்கியுள்ள பாடங்களிற் பெரும்பாலன நமது நாட்டிற்கு உரியனவே. நம் நாட்டிற்கு இன்றியமையாத பிறநாட்டு விஷயங்களிற் சிலவும் ஈண்டு இடம் பெற்றிருக்கின்றன.

2. பாடங்களில் ஆங்காங்கு, நீதிவாக்கியங்களும் பழமொழிகளும் கட்டுரைச் சொற்களும் மரபுச் சொற்களும் சமயநோக்கி அமைக்கப்பட்டு உள்ளன.

3. மிகக் கடினமான சந்திகள் ஒருவாறு நீக்கப்பட்டு இருப்பினும், வகுப்பை நோக்குமிடத்து அவ்வாறு நீக்கப்பட்டமை சாலச் சிறந்ததென்றே புலப்படும்.

4. செய்யுட் பாடங்கள் நீதிவாக்கியங்களாகவே யிருப்பின், மாணுக்கர்களுக்கு மனவெறுப்பு உண்டாகுமாதலின், நீதிக் கதைகள் இனிய பாடல் ரூபமாக அமைக்கப்பட்டுள்ளன.

5. உபாத்தியாயர்கள் பாட புத்தகங்களுக்குக் குறிப்புப் புத்தகங்களை உபயோகிக்கும் முறையை முற்றும் நீக்கக் கருதியே அரிய குறிப்புக்கள் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

கா. நம.

வித்தியா விதிப்படி நடத்தவேண்டிய

வாசக பாகம்

(*a*) வகுப்பில் அந்த வருடத்தில் வாசியாத, அங்கீ-கரிக்கப்பட்ட வாசக புத்தகத்திலிருந்து சிலவரிகளைக் கருத்து விளங்குமாறு திருத்தமாக வாசித்தல்; மிகத் திருத்தமாக எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதியை வாசித்தல்.

(*b*) சுலபமான செய்யுட் பாடத்தில் 100 வரிகளை மனப் பாடமாக ஒப்பித்தல்.

(*c*) வகுப்பில் உபயோகிக்கப்படும் வாசக புத்த-கத்திலிருந்து கேட்கப்படும் கடின பதங்களுக்கு அர்த்தமும் விஷய வினாக்களுக்கு விடையும் சொல்-லுதல்.

(*d*) மனப் பாடமாக ஒப்பித்த செய்யுட் பாடத்-தில் கடின பதங்களுக்கு அர்த்தமும் சொல்லமைதியும் விஷய வினாக்களுக்கு விடையும் சொல்லுதல்.

(*e*) அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் இலக்கண புத்த-கத்தில் சொல்லதிகாரத்தை அப்பியசித்தல்.

(*f*) இரண்டு முறை வாசிக்கப்பட்ட அல்லது சொல்லப்பட்ட ஒரு சிறு கதையின் விஷயத்தை ஞாபகம் வைத்து எழுதுவது. எழுத்துப் பிழை, இலக்கணப் பிழை, கையெழுத்து ஆகிய இவைகள் கவனிக்கத் தக்கவை.

பொருளடக்கம்

வாசக பாடங்கள்

செய்யுட் பாடங்கள்

வாசக பாடங்கள்



ஐந்தாம் பாட புத்தகம்

1. குடிகளிடத்து அன்புள்ள கொற்றவன்

இவ் வுலகத்தில் இறைவனாக இருந்து அரசுபுரிவதினும் ஏற்றமான பதவி ஒன்றுமே யில்லை. அவ்வகையான உயர்ந்த நிலையை அடைந்த அரசன், அறிவு ஆண்மை ஈகை இரக்கம் முதலிய நற்குணங்கள் வாய்ந்து, தன் குடிகளுக்கு எவ்வகையாலும் குறைவு நேராதபடி காக்கவேண்டும். குடிகள் கொற்றவ னிடத்தும் கொற்றவன் குடிகளிடத்தும் மாறுபாடு இல்லாத மனமுடையராக இருந்தால், அந்த அரசு நெடுங்காலம் நிலை பெற்று இருக்கும். இதை விளக்க உண்மையான சரித்திரம் ஒன்றை இங்கே கூறுவோம்.

2. முற்காலத்திலே இந்து தேசத்தில் அரசுபுரிந்த பாபர் சக்ரவர்த்தியின் பிரதாபத்தை விளக்கப் பல சரித்திரங்களுண்டு. பாபர் 1526ஹு முதல் ஐந்து ஆண்டு அரசாண்டு வந்தான். அக் காலத்தில் அம் மன்னன் சகலரையுஞ் சமமாகப் பாவித்து, திறமை யுள்ளோரைச் சிறந்த உத்தியோகத்தி லமைத்து நன்மை புரிந்து வந்தான். அவன், தன் குடிகளுக்கு நேருங் குறையைத் தனக்கே நேர்ந்ததாகக் கருதி, அதைப் பரிந்து நீக்கும் பண்புடையவன். எவ்வகையி-

னும் குடிகளுக்கு நன்மை புரிவதிலேயே நாட்டமுடையவன்; பூர்வ காலத்துத் தமிழரசரைப் போலவே தானும் மாறுவேடம்பூண்டு நகர சோதனை செய்து வரும் நல்லறிவுடையவன். தான் ஏற்படுத்திய சட்டதிட்டங்களில் கண்ணுங் கருத்துமாக இருந்து, குடிகள் அவற்றைக் கடைப்பிடித்து ஒழுகும்படி வற்புறுத்துவதோடு, அவற்றைத் தட்டி நடப்பவரைத் தண்டியாமல் விடாதவன். அதனால் சிலருக்கு அவனிடத்தில் அருவருப்பு உண்டாகி, நாளடைவில் பகைமையும் விளைந்தது.

3. பாபர் சக்ரவர்த்தி அரசு புரியும் நாளில் ஒரு நாள் ஒருவன் கங்கை நதிக் கரையில் நின்று, நீரோட்டத்தை உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தான். அவன், நீண்ட உருவமும் பருத்த வுடலும் கருத்த மேனியும் உடையவன். ஆயினும், அவனது தோற்றம் அவனொரு க்ஷத்திரியன் என்பதைத் தெரிவித்தது. அப்போது அவனைக் கண்டோர் எவரும் அவன் யாதோ வொன்றை ஆழ்ந்த கருத்துடன் ஆலோசிக்கின்றானென்று எண்ணமற் போகார்.

4. அதென்ன யோசனையென்றால், அது பாபர் சக்ரவர்த்தியின் பிராணனைக் கொள்ளை கொள்ளும் சதி யோசனையே. அவ் வீரன் 'ஆஹா! இந்தப் பாபர் பற்பல சட்டங்கள் ஏற்படுத்தி, நம்மை எந்நாளும் துன்புறுத்துகிறானே, இவன் கொடுங்கோலரசன் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை; அதனால், இவனை நாம் எவ் வகையிலாயினும் கொலை புரிந்து ஒழித்து, நமது நாட்டிற்கு நன்மை செய்யவேண்டும்' என்று தீர்மானித்துக்கொண்டு, திரும்பி நகரத்திற்குள் வந்தான். கொற்றவனைக் கொலை புரிந்தால்

தனக்கு சிரச்சேதம் நேரிடும் என்பதும், தான் எண்ணுவது முற்றும் ராஜத்துரோகம் என்பதும் அவனுக்கு எள்ளளவும் தோன்றவில்லை.

5. மெய்க் காவலரும் இல்லாமல், சாமானிய மனிதனைப்போல் உடுத்த உடையோடு நகரி சோதனை செய்யப் பாபர் சக்ரவர்த்தி போவது வழக்கமாதலால், அவ்வீரன் தன் கருத்தை முடிப்பதற்கு இடையூறொன்றும் இராதென்றே எண்ணியிருந்தான். அவன் கூரிய கொடுவாள் ஒன்றைத் தன் இடையிற் சொருகிக்கொண்டு கடைவீதியில் வந்து சேர்ந்தான்.

6. அப்போது, ஜனங்கள் திரண்ட கூட்டத்தில் பேரிரைச்சலுண்டாவது கண்டு, வீரன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். மதயானை யொன்று விடுபட்டு வெருண்டு, மூர்க்கமாகப் பிளிறிக்கொண்டே வந்தது. அது கண்ட ஆடவரும் பெண்டிரும் தத்தம் மக்களை யெடுத்து, மார்போடணைத்து, உயிர் தப்ப ஓடிக்கொண் டிருந்தார்கள். திக்கற்ற பிள்ளை யொன்று தட்டுத் தடுமாறி அப்படி ஓடுகையில் காலிடறிக் கீழே விழுந்தது. இதற்குள், யானையும் நெருங்கி வந்துவிட, இன்னும் அரை க்ஷணத்தில் அக் குழந்தை அதன் காலுக்கு இரையாகி விடும்போல் இருந்தது.

7. அப்போது அக் கூட்டத்தின் நடுவிலிருந்த வீரனொருவன் விரைந்து வந்து, குப்புறக் குனிந்து, குழந்தையை எடுத்து, அப்புறத் தோடி ஆதரித்தான். அங்கிருந்தவர்கள் அவ் வற்புதச் செய்கையைக் கண்டு, 'ஆ! இம்மகானுபாவன் யாவனோ! தூய்த்த மேனியும், பருத்த உடலும் உடையவனாக

நிற்கின்றான்; தன்னுயிரைத் துரும்பாக மதித்த தனி-வீரனே! பிறருயிரைத் தன்னுயிராக எண்ணும் பெருந்-தகையோ!' எனப் பலவாறு பேசிக்கொண்டு இருக்-கையில் அவனது முகப்பொலிவை மறைத்திருந்த தலைப்பாகை நழுவித் தரையில் விழுந்தது. அவன் முகத்தைப் பார்த்த பிறகு, அவன் பாபர் சக்ரவர்த்-தியே யெனக் கண்டார்கள். கண்டு ஜனங்கள் உள-நடுங்கி உடலொடுங்கி, 'ஆஹா! நம்மிறைவன் குடிக-ளிடத்துக் கொண்டிருக்கும் பெருங்கருணை எவ்வளவு!' என்று வியப்பும் ஆனந்தமும் கொண்டு நின்றனர். அவ்வளவில் அவ்வீரன் ஓடிவந்து, காவலன் முன் நின்று, கண்ணீர் விட்டுக் கதறிக் கூறுவான்:

8. 'அண்ணலே! அடியேன் தங்கள் பகைவன்: கொலைப் பாதகன்: ராஜத்துரோகி; கருணைக் கட-லாகிய தங்களை இன்று கொலைபுரியக் காத்திருந்தேன்: இதோ பாருங்கள் தங்களைக் கொல்ல வைத்திருந்த கொடுவாள்' என்றெடுத்துக் காட்டிப் பின்னுங் கூறு-வான்; 'தன்னுயிரைப்போல் மன்னுயிரை யெண்ணுந் தயாநிதியே! ஒருயிரை அழிப்பவனைவிட அதனைக் காப்பவனே பரம புருஷன், தெய்வ கடாக்ஷத்தைப் பூரணமாகப் பெற்றுள்ள தேவரீரைக் கொல்ல என் கை வலியதாகுமோ! இதோ, தங்களைக் கொல்ல வைத்திருந்த இந்தக் கத்தியைக் கொண்டே தமியே-னைக் கொன்றுவிடுங்கள்' என்று கத்தியை நீட்டினன்.

9. நீட்டவும், பாபர், அவ்வீரனுடைய ஆண்மை, உண்மை, செய்ந்நன்றியறிதல் முதலிய நற்குணங்-களைக் கண்டு, அவனைக் கட்டிக்கொடுத்து, 'அன்ப! தன் குற்றத்தை உணராதவனே தண்டனைக்கு உரிய-வன்: நீயோ உன் குற்றத்தை யுணர்ந்து பச்சாத்-

தாபப் படுகிறா யாதலால், உனக்குத் தண்டனை விதிப்பது தகுதி யன்று. அன்றியும், 'ஒருயிரைக் கொல்வதைவிட அதனைக் காப்பதே சிறந்தது' என்று இப்போது நீ கூறியபடியே, நான் உன்னுயிரைக் காப்பாற்றுகிறேன். என்னைக் கொல்ல வைத்திருந்த இந்தக் கொடுவாளை என் சத்துருக்களைக் கொல்ல நீயே வைத்திரு' என்று இதமான வார்த்தைகள் கூறித் தேற்றிய பின்பு, அவனைத் தன் சேனையில் உயர்நிலை யுத்தியோகத்தில் அமர்த்திக் கொண்டான். அந்த வீரனும் தன் எஜமானனிடத்தில் பேரன்பு பாராட்டி, உண்மையாக உழைத்து, பல யுத்தங்களில் அம்மன்னவனுக்கு வெற்றியை உண்டாக்கினான்.

விருத்தம்

தன்னது மக்கள் நோயைத்
    தவிர்த்திட மருந்த ளிக்கும்
அன்னையே போல வேந்தன்
    ஆனதன் குடிகட் கென்றும்
இன்னலை நீக்கு தற்கே
    இயற்றுவன் விதிக ளெல்லாம்
அந்நிலை யுணரா மடத்தார்
    அரசனை வெறுத்த லாமோ.



2. நீராவியின் நிலைமை

ஐரோப்பாக் கண்டத்தைச் சார்ந்த ஸ்காட்லந்து தேசத்தின் மேற்கில் கிரீனக் என்னும் நகரம் ஒன்றுண்டு. அந் நகரத்தில் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, ஓர் ஏழைக் குடும்பத்திற் பிறந்த இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் 1736 ஆம் ஆண்டிற் பிறந்தவன். ஜேம்ஸ் என்னும் பெயரினன். அவன் சிறு வயதிலேயே தன் கண்ணிற் கண்ட ஒவ்வொரு பொருளையும் கருத்துடன் உற்று நோக்கி, அதன் குணகுணங்களை ஆராய்ந்தறிவான். பொருளாராய்ச்சி செய்யும் அவனது அறிவு, இவ்வுலகத்தாரனைவருக்கும் இன்றியமையாத பெருங்கருவிகளை வகு-

ங்க ஏதுவாயிருந்ததோடு, முடிவில் அவனுக்கு என்றும் அழியாத பெரும் புகழையும் உண்டாக்கிற்று.

2. ஒரு நாள் மாலைப்பொழுதில் அடுப்பின்மேல் ஒரு கெண்டியில் நீர் காய்ந்துகொண்டு இருந்தது. நெருப்பு மிகவும் கனிந்து கொழுந்துவிட்டு எரியும்போது, வெந்நீர் அதிகமான உஷ்ணங்கொண்டு தளபளவென்று கொதிக்க ஆரம்பிக்கவே, கெண்டியின் மூக்கு வழியாக நீராவி உஸ் உஸ் என்று வெளிப்பட்டது. அப்பொழுது, பன்னிரண்டே பிராயமுள்ள ஜேம்ஸ், அடுப்பண்டையமர்ந்து, முழங்காலின்மேல் முழங்கையையூன்றி, அகங்கையிற் கன்னத்தை அமைத்துக்கொண்டு, நீராவியின் வேகத்தை, விழித்த கண் இமையாமல், வியப்புடன் பார்த்திருந்தான். தன் சிந்தனை முழுவதும் நீராவியின்மேல் செலுத்திக்கொண்டிருந்த அச் சிறுவனது செய்கையை அறியாமல், அவன் தாய், அவனை வீணனென்றெண்ணி வெறுத்துக் கூறலாயினள்.

3. ‘ஜெம்மீ! அடுப்பண்டையில் அசையாமல் உட்கார்ந்து என்ன சிந்திக்கிறாய்? அங்கென்ன ஆச்சரியமிருக்கிறது? கெண்டியின் மூக்கு வழியாக ஆவி வருவது ஓர் அதிசயமா? நான் அதைப் பாராத நாளில்லை, நீர் காயும்பொழுது ஆவி அப்படித்தான் வரும்’ என்றாள். அந்த மொழிகளுள் ஒன்றும் அவன் செவியில் விழவில்லை. அச் சிறுவன் சிறிதும் சலிக்காமல் நீராவியின் நிலையிலேயே நினைவாக இருந்தான்.

4. சிறிது நேரத்திற்குப் பின்பு அச் சிறுவன் ஒரு சிறு தட்டைக்கொண்டு நீராவி வெளிப்படும் வாய்ப்புறத்தை மூடினான். மூடவும், நீராவி மேல் நோக்கி, மூடியை மெல்ல மெல்ல அசைக்க ஆரம்பிக்-

தது. நீராவி குப் குப் என்று வருவதும், மூடிய தட்டு, படபடவென்று சத்தமிடுவதும் அவனுக்கு வியப்பையும் வேடிக்கையையும் விளைத்தன. ஜேம்ஸ் நீராவியின் வலிமையைக் கண்டபோது, இதைக் கொண்டு பஞ்ச பூதங்களையும் தன் வசமாக்கிக் கொள்ளத் தடை யொன்றும் இராது என்று எண்ணினான்.


5. ஜேம்ஸ் அந்த நீராவியின் நிலையைப்பற்றி நெடுநேரம் சிந்தித்தபோது, காற்றில்லாமலே கப்பல்கள் கடலில் ஓடுவதுபோலவும், நிர்மாநுஷ்யமான காடுகளிலும் மலைகளிலும் வண்டித் தொடர்கள் விரைந்து ஓடுவது போலவும் அவன் மனத்திற்பட்டது. அது மனோராஜ்யமாக மாறாமல் நாளடைவில் கைகண்ட காரியமாகவே முடிந்தது.

6. ஜேம்ஸ் நீராவியின் நிலைமையை முதல் முதல் யூகித்தறிந்து, பலர்க்கும் பயன்படக் காட்டினமையால், இன்றும் நாம் அவனை வாயார வாழ்த்திப் புகழ்கின்றோம். எழுத்துக் கூட்டி வாசிக்கும் வயதுள்ள சிறுவனுக்கு இவ் வகைய அபூர்வ புத்தி அமைவது எவ்வளவு ஆச்சரியம் !

7. அறிவு இயற்கையிலேயே யாவர்க்கும் அமைந்திருக்கிறது ; அதனை நல்ல வழியில் நடத்துவோர் பெருமையையும், தீய வழியில் நடத்துவோர் சிறுமையையும் அடைவர்.

3. அரபிக் குதிரையின் அன்பு

உத்தம ஜாதிக் குதிரைகளுக்கு உரிய இடமானது ஆசியா கண்டத்தின் தென்மேற்குத் திசையிலுள்ள அரபிதேசமே. அந்தத் தேசத்துக் குதிரைகளை எந்தத் தேசத்தாரும் புகழ்ந்து பேசுவது வழக்கம். அரபியர், அசுவங்களைத் தம் மக்களைப் போலவே பாராட்டிப் பாதுகாத்து வருகின்றனர். அதனால்,



அக் குதிரைகள் தம்மைக் காப்பவரிடத்தில் அன்பும் அடக்கமும் உடையனவாக இருப்பதோடு, அவர்கள் காட்டுங் குறிகளையும் அறிந்து, அவற்றிற்கு ஏற்க நடக்கத் தெரிந்து கொள்கின்றன. அரபிக் குதிரைகளின் சிறந்த குணங்களை விளக்கப் பல கதைகள் வழங்குவதுண்டு. அவற்றுள் ஒன்றை ஈண்டு எடுத்துக் கூறுவோம்.

2. அரபிய னொருவன் குதிரைக் குட்டி யொன்றை வளர்த்து வந்தான். அது இளமைப் பருவமுதல் அவனிடத்திலேயே வளர்ந்ததனால், அவன் எங்கே சென்றாலும் அக் குட்டியையும் தன்னோடு கூட்டிக்கொண்டே செல்வான். இதனால், அது தன் எஜமானன் குணங் குறிகளை நன்குணர்ந்து, அவனிடத்தில் அதிக விசுவாசம் வைத்திருந்தது. அரபியனும் அதனிடத்திற் குறையாத அன்புடையவன் ஆனான். அவன் அதனை ஒருபோதும் கட்டிவைப்பதில்லை. அது மேய்ச்சிலை நாடிச் சிறிது தூரம் சென்றுவிட்டாலும், எஜமானன் குரலோசையைக் கேட்டவுடன் விரைந்து ஓடிவரும்; இரவிலும் அது அவன் பக்கத்திலேயே படுத்து உறங்கும்.

3. ஒருநாள் அரபியன் தன் குதிரையைக் கூட்டிக்கொண்டு ஒரு காட்டின் வழியாகப் பிரயாணம் போனான். பொழுது சாய்ந்ததும், ஓர் இடத்தில் கூடாரமடித்து, அதில் தன் குதிரையோடு துயின்றுகொண்டிருந்தான். அக் காலத்தில், அவ்வழியாகச் சென்ற கள்ளர் சிலர், கூடாரத்தைக் கண்டு, உள்ளே புகுந்து, அரபியனிடமிருந்த அரும்பொருள் அனைத்தையும் அபகரித்ததுமன்றி, அவன் கைகளைக் கயிற்றாற் கட்டி, அவனையும் அவன் குதிரையையும் நடத்திக் கொண்டு போயினர். குதிரை தன்னை வளர்த்தவனைக் கண்டு கண்ணீர் விட்டது. அது பின்னை என்ன செய்யும்! கள்வர் நெடுந்தூரஞ் சென்று, ஓரிடத்தில் தங்கி, அரபியனது கையோடு காலையும் இறுகக் கட்டி, அவனை வெட்டவெளியில் உருட்டி விட்டு, குதிரையை மேயும்படி விட்டார்கள். எஜமானன் விஷயமாக ஏக்கங்கொண்டிருக்கும் குதிரை எவ்வாறு இரை எடுக்கும்! அது தன் அன்புள்ள எஜமானனை மீட்டுக்

கொண்டு போகும் காரியத்திலேயே கண்ணாக இருந்தது.

4. கள்வரெல்லாம் கண்ணுறங்கினர். குதிரை, 'இவர்கள் எழுந்திருக்கப் பொழுது விடியும்' என்று எண்ணி, சத்தமேயின்றி, எஜமானனைக் குறுகி, அவனைக் கட்டியிருந்த கயிற்றைத் தன் பற்களால் பற்றிக்கொண்டு பறந்தோடிற்று. மனிதரை முதுகிற் சுமந்து செல்லும் இயல்புடைய குதிரைக்கு ஒரு புருஷனை வாயாற் பற்றிச் செல்வது வருத்தமாகவே இருந்தது. ஆயினும் அது தன் எஜமானனைக் காக்கும் எண்ணத்தோடே விரைந்து ஓடி, அவனது நண்பனொருவனுடைய வீட்டை யடைந்தது. தன் எஜமானனுக்கு இடையூறென்றும் இனி நேராதென்று கண்ட குதிரை, அவனை அவ் வீட்டண்டை விட்டது. நெடுந்தூரம் பெரும் பாரத்தைப் பற்களாற் பற்றிவந்த வருத்தத்தாலும், அன்றெல்லாம் இரையின்றி இருந்த களைப்பினாலும், அக் குதிரை எஜமானனை இறக்கியவுடன், தன் ஆயாசத்தைத் தீர்த்துக்கொள்வதுபோல் மண்ணிற் புரண்டு மரணமடைந்தது.

5. அரபியனுடைய அரிய நண்பன் தற்செயலாக வெளிவந்தபோது, தன் உத்தம நண்பன் கட்டுண்டு கிடப்பதைக் கண்டு, திடுக்கிட்டோடி, கட்டையவிழ்த்து, அவனை விடுவித்தான். பிறகு, அரபியன் தனக்கு உதவி புரிந்த உத்தமக் குதிரையை அணைத்து முத்தமிட ஓடிப்பார்க்கையில், அது செத்துக் கிடந்ததைக் கண்டு, ஆறாத் துயரங் கொண்டு, அதன் சிறந்த குணங்களைத் தன் சிநேகர் பலர்க்குஞ் சொல்லி, கண்ணீர் விட்டுக் கவற்சி யடைந்தான்.

4. யானை

யானை காட்டு மிருகங்களில் ஒன்று. அது நிலத்தில் வாழும் பிராணிகள் எல்லாவற்றிலும் பருத்த உருவமுடையது. அறிவில் மனிதனுக்கு அடுத்தபடியில் யானையை வைக்கலாம். ஆண் யானைக்குக் **களிறு** என்றும், பெண் யானைக்குப் **பிடி** யென்றும் பெயர். இளமைப் பருவமுடைய யானையை '**யானைக் கன்று**' என்று கூறாமல், 'யானைக் குட்டி' என்று கூறுவது மரபு வழுவாம்.



2. பூர்ண வளர்ச்சியடைந்த யானை சற்றேறக்குறைய பதினொன்று அடி உயரமிருக்கும். சிலவகை யானைகள் எழெட்டடி உயரத்திற்குமேல் வளர்வதில்லை. யானை, பன்றி, காண்டாமிருகம் முதலியவை ஒரின விலங்குகளாம்.

3. சாதாரணமாக யானை கருமையானது. சில ஆண்டுகளுக்குமுன் பர்மா தேசத்தை யடுத்த ஐராவதிக் கரையில் வெள்ளை யானையும் இருந்தது.

4. யானையின் கால்கள், அதின் பெரிய உடலைத் தாங்கத் தக்கனவாய் பருத்துக் குறுகி யிருக்கின்றன. அதன் முன்னங்கால் ஒவ்வொன்றிலும் ஐந்து விரல்களும் பின்னங்கால் ஒவ்வொன்றிலும் நான்கு விரல்களும் இருக்கின்றன. அவ் விரல்கள் பிரிந்து இராமல் இணைந்திருக்கின்றன. யானை நடக்கையில் பூமியிற் பதியும் பாதச் சுவடு அதன் பாதத்தைப்போல் இருமடங்கு அகன்று இருத்தலை அளவிட்டு அறிந்திருக்கின்றனர்.

5. யானையின் தலை மிகப் பெரியது. அதன் மேற்பாகம் இரண்டு பிரிவுகளாகத் தோன்றும். அதற்கு **மஸ்தகம்** என்று பெயர். யானையின் உடலில் மிகவும் மிருதுவான பாகம் அதன் மஸ்தகமே. யானையின் தலை தோன்று மளவிற்கு அதற்குள் மூளை நிறைந்திருக்கவில்லை. யானையின் மூளையைக் காக்க, ஒன்றின்மே லொன்றாக இரண்டு மண்டை யோடுகள் இருக்கின்றன. அதனால், மேலே யுள்ள மண்டை யோட்டைப் பாகன் அங்குசத்தாற் குத்திக் காயப் படுத்தினாலும் அதற்கு அபாயம் நேரிடுவதில்லை. யானையின் பெருந்தலையைத் தாங்கும்படி அதன் கழுத்துப் பருத்துக் குறுகி யிருக்கின்றது. அதனால் யானையாவது அவ்வினத்திற்



சேர்ந்த வேறு விலங்காவது, தான் விரும்பியவாறு, வலம் இடம் திரும்ப வேண்டுமாயின் உடல் முழுவதையும் திருப்ப நேரிடும். கழுத்து அதிகமும் குறுகியிருப்பதனால் யானைக்குத் தன் இரையைக் குனிந்தெடுக்க முடியாது. அதனால், வேறெதற்கு மில்லாத அபூர்வமான அவயவ மொன்று யானைக்கு அமைந்திருக்கிறது; அதுதான் தும்பிக்கை.

6. துதிக்கை, யானைக்குக் கையும் நாசியுமாக உதவுகின்றது. துதிக்கையின் முனையில் விரல் போன்ற சிறிய உறுப்பு ஒன்று இருக்கிறது. அந்த உறுப்பினால் சிறிய தானியத்தையும் அது தப்பாமல் எடுக்கும். ஆண் யானைக்கு மேல் வாயின் இருபுறங்களிலும், துதிக்கையை ஒட்டினாற்போல், இரண்டு பற்கள் வளரும். அவை சிறிது மஞ்சள் கலந்த வெண்மை நிறமுடையன. அவைகளுக்குத் தந்தம் என்று பெயர். அறுக்காமல் வளர விட்டால், அவை ஆறடிக்கு அதிகமாகவும் நீண்டு வளரும். பிடி யானைக்குத் தந்தமில்லை. சிலவற்றிற்கு இருந்தாலும், அவை நீண்டு வளர்வதில்லை. நன்றாக முதிர்ந்த தந்தத்தில் முத்து உண்டாகும்; அந்த முத்து ஆயிரக் கணக்காக விலை பெறும்.



7. யானைகள் மரங்களடர்ந்த வனங்களில் மிகுதியாக வசிக்கும். இமயமலைச் சாரலை யடுத்த ஆரணியங்களில் அவை கூட்டங் கூட்டமாகச் சஞ்சரிக்கின்றன. பர்மா, சீனா, ஆவா, சிங்களம், பாரசீகம் முதலிய நாடுகளை யடுத்த காடுகளில் மிகுதியாக உண்டாம். நமது இந்து தேயத்தில் வங்காள நாட்-

டின் தென்கீழ்த் திசையிலுள்ள காடுகளிலும், தென் இந்தியாவில் மைசூர், திருவாங்கூர் முதலிய தேசங்களிலும் யானைகள் மிகுதியாக வசிக்கின்றன.

8. பிடியானை இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஈனும்; முறைக்கு ஒன்றுக்கு அதிகமாக ஈனாது. யானைக் கன்று முழு வளர்ச்சி யடையச் சுமார் முப்பது வருஷம் செல்லும். யானைக்கு ஆயுள் அதிகம். மனிதர் வசப்பட்ட யானை யொன்று நூற்று முப்பது வருஷங்களுக்கு மேலும் ஜீவித்திருந்ததாம். காட்டில் வசிப்பவை இருநூறு வருஷங்கள் ஜீவித்திருக்கும் என்று ஊகிக்கின்றனர்.

9. யானை சாந்தமும் நன்றி பாராட்டுங் குணமும் உள்ளது. அது, ஒருவர் தனக்குச் செய்த நன்மை தீமைகளை மறவாமல், நன்மைக்கு நன்மையும், தீமைக்குத் தீமையும் செய்யும் இயல்புடையது. மனிதர் கையிற் சிக்குண்ட யானை, எளிதில் சாதுவாகி, தன்னைப் பராமரிக்கும் பாகன், கைகால் முதலிய அவயவங்களாற் காட்டும் சைகைகளைக் கண்டுணர்ந்து, அவற்றிற் கேற்க நடந்துகொள்ளும். யானைகள் திரளாகச் சேர்ந்து பிரயாணம் செய்கையில், வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவை முன்னும், நடுவயதுள்ளவை பின்னும், கன்றுகளும் மெலிந்தவைகளும் இடையிலுமாகத் தம்மை அணி வகுத்துக்கொண்டு செல்லுமாம்.

10. யானை சாகபக்ஷணி. அது இலை, தளிர், காய், கனி, தானியம் முதலியவற்றையே ஆகாரமாகக் கொள்ளும். மச்ச மாமிசங்களைத் தொடுவதில்லை. யானை, இரை எடுப்பதிலும் பானம் பண்-

ணுவதிலும் துதிக்கையை உபயோகிக்கும். அது இரை யருந்தும்போது தன் உடலையும் துதிக்கையையும் அசைத்துக்கொண்டேயிருக்கும். இதனால், 'யானை அசைந்து தின்னும், வீடு அசையாமல் தின்னும்' என்னும் பழமொழி வழங்குவதாயிற்று.

11. யானை மிக்க உபயோகமுள்ளது. அரசர்களும், பிரபுக்களும் அலங்காரமாக யானைமேல் ஏறிச் செல்வார்கள். பண்டைக் காலத்தில் யானை இல்லாச் சேனையே கிடையாது. இக் காலத்தில், போருக்கு வேண்டிய ஆயுதங்களையும் சாமான்களையும் சுமந்து செல்ல யானையை உபயோகிக்கின்றனர். ஆபிரிக்காக் கண்டத்திலும் கீழ் இந்திய தேசங்களிலும் பெரும்பாலும் பாரங்களைச் சுமந்து செல்லுவது யானையே. காட்டில் வெட்டப்பட்ட பெரிய மரத்துண்டுகளைக் கொண்டுபோய்க் குறித்த இடத்தில் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்குவதில் யானை மிக்க திறமை வாய்ந்தது. தந்தம் அதிக விலையேறப் பெற்றதாதலால், அதைக் கொண்டு வேலைப்பாடுள்ள விநோதமான பொருள்கள் செய்கிறார்கள். சென்னை ராஜதானியிலுள்ள விசாகபட்டணம், மைசூர் நாடு முதலிய இடங்களில் தந்தவேலை மிகுதியாக நடைபெறுகின்றது.

5. புத்தியுள்ள காஜி

ஆபிரிக்காவின் வடகோடியிலுள்ள அல்ஜீரியா நாட்டை மகம்மதிய மன்னனொருவன் ஆண்டு வந்தான். அவன் தன் தேசத்தைப் பன்னிரண்டு பிரிவுகளாக வகுத்து, ஒவ்வொரு பிரிவிற்கும், நியாய விசாரணை செய்யுமாறு, ஒவ்வொரு பிரதிநிதியை அமைத்து

வைத்தான். அந்த நியாயாதிபதிகளில் ஒவ்வொரு-வருக்கும் காஜி என்னும் பட்டப்பெயர் உண்டு.

2. அந்தக் காஜிகளனைவரும் கூறிய புத்தியும் நீதி தவறாத நேர்மையும் உடையவர்கள். ஆயினும், ஒரு-வன் மற்றவர்களைவிட மிக்க மதிப்புடையவனாக இருந்-தான். அந்தக் காஜி எந்த வழக்கையும், 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல்' விளங்குமாறு உள்ளும் புறமும் உய்த்துணர்ந்து, தீர்ப்புச்சொல்லுந் திறமையுடைய-வன். அவனது கீர்த்தி அரசன் செவிக்கு எட்டியது. அரசன் அந்தக் காஜியின் அரிய குணத்தை ஆராய்ந்-தறிய ஆர்வங்கொண்டான்.

3. ஒருநாள், இறைவன், அரசனுக்குரிய ஆடை-யாபரண அலங்காரமும் மெய்க்காவலரும் இன்றி, சாமானிய மனிதனைபோல் உடைதரித்து ஓர் அழ-கிய அசுவத்தின் மேல் ஏறிக்கொண்டு, அந்தக் காஜி யிருக்கும் நகரத்தின் கோட்டை வாயிலைக் குறுகினான். அங்கு உட்கார்ந்திருந்த முடவனொருவன், மாறு வேஷம் பூண்ட மன்னனை நோக்கி, தனக்குச் சிறிது பிச்சையிட வேண்டினான். மன்னன் மனம் இரங்கி, ஒரு நாணயத்தை எடுத்துக் கொடுத்தான். பின்-னும் அப் பிச்சைக்காரன், 'ஐயா, பிரபுவே! நான் காலில்லா முடவன். இன்று இந் நகரத்தில் சந்தை கூடுகிறபடியால் வண்டிகளும் மிருகங்களும் திரளாகச் செல்கின்றன; நசுங்குபோக நடுக்கங்கொள்ளுகிறேன். ஆதலால், சற்றே கருணை கூர்ந்து இந்த எளியேனைத் தாங்கள் குதிரையின்மேல் ஏற்றிக்கொண்டுபோய், சந்தை-வீதியைக் கடந்து விட்டுவிட்டால், கட்டுத் தடுமாறி என் குடிசையைச் சேர்வேன்' என்று வணங்கிக் கேட்டுக் கொண்டான். வேற்றுருவங்கொண்ட வேந்-

தன், அவனது வேண்டுகோளுக்கு இரங்கி, அவனைத் தன் குதிரைமேல் ஏற்றிக்கொண்டு கடைவீதியைக்



கடந்து, 'இனி நீர் இறங்கிச் செல்லும்' என்று கூறி-னன். கூறவே அப்பிச்சைக்காரன், 'நான் ஏன் இறங்க வேண்டும்? என் குதிரைக்கே மோசம் வந்து விட்-

டாற்போல் காண்கிறதே. நீ நடக்கமாட்டாமல் பரிதபித்த நிலையைக் கண்டு உன்னைச் சிறிதுதூரம் ஏற்றிக்கொண்டு வந்தேன். இப்போது என்னையே ஏமாற்ற இடம் தேடுகிறாயோ ?' என்று சொல்ல, அதனால் இருவரும் சச்சரவுபட்டு நின்றார்கள். அரசன் இதுவும் ஒரு நன்மைக்குத்தான், இதன் மூலமாக நாம் எண்ணி வந்த கருத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்; இதுவே நமது காஜியைப் பரீக்ஷிக்க ஏற்றவழி என்றெண்ணி, இருவரும் நியாய ஸ்தலத்தை அடைந்தார்கள்.

4. இவர்கள் இருவரும் நியாய ஸ்தலத்தை அடைந்தபோது, வேறு இரண்டு வழக்காளிகளும் காஜியிடம் தீர்மானம் பெற வந்திருந்தனர். அந்த இரண்டு வழக்குகளில் —.

முதலாவது — ஒரு கவிவாணர் வீட்டிற்கு அடிமைப்பட்ட வேலைக்காரியை, சிறிது பொருள் கொடுத்து, கிருஷிகன் ஒருவன் தந்திரத்தால் தன்னிடம் அழைத்துக்கொண்டான். வித்துவான், வேலைக்காரி, கிருஷிகன் ஆகிய மூவரும் காஜியை யணுகி வழக்குரைத்தனர். வேலைக்காரி கிருஷிகனிடம் பொருள் பெற்றுக் கொண்டமையால், ஒன்றுஞ் சொல்லாமல், மௌனமாக இருந்தாள். காஜிக்கு இதன் கருத்தைக் கண்டறிவது கடினமாக இருந்தமையால், அப் பெண்ணைத் தன்னிடத்தில் இருத்திக்கொண்டு, மற்ற இருவரையும் மறுநாள் வரும்படி கட்டளையிட்டு அனுப்பினான்.

இரண்டாவது — எண்ணெய் வியாபாரியும் இரும்பு வியாபாரியும் காஜியிடம் வந்து தம் வழக்கைக் கூறினர். எண்ணெய் வாணியன் காஜியை

நோக்கி, 'ஐயா! இன்று எண்ணெய்க் கூடையைத் தலையிற்கொண்டு வீதிவீதியாகச் சென்று விற்றுவருகையில், இந்த இரும்பு வியாபாரி ரூபாய்க்குச் சில்லரை கேட்டார். கூடையிலிருந்து சில்லரையை எண்ணிக் கைநிறைய எடுத்ததும், திடீரென்று தட்டி எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டார். அதில் செப்பு நாணயங்களோடு வெள்ளி நாணயங்களும் விரவியிருந்தன. ஆகவே, என் பொருளை எனக்கு வாங்கிக் கொடுக்கவேண்டும்' என்று வாதாடினன். வியாபாரி மனந் திடுக்கிட்டு, 'இந்த அநியாயத்திற்கு என்ன சொல்வது! நீதிபதியே, இன்று இரும்பு விற்ற பணமே என்னிடத்திலிருக்கிறது' என்று தன்னிடத்திலிருந்த பணத்தை எடுத்துக் காஜிக்குக் காட்டினன். உடனே எண்ணெய் வியாபாரி, 'ஆஹா, அதுவே என் பணம்' என்றான். காஜி ஒன்றுந் சொல்லத் தோன்றாமல், அத் தொகையை எண்ணிப் பெற்றுக்கொண்டு, இருவரையும் மறுநாள் வரும்படி உத்தரவளித்தான்.

5. இவ்விரண்டு விஷயங்களையும் கண்ட இறைவன் தன் வழக்கையும் முறையிட்டான். முடவன் குதிரை தன்னுடையதே என்று சாதித்தான், மன்னன் தன்னுடையது என்றான். காஜி அவர்களையும் மறுதினமே வரும்படி கட்டளையிட்டு அனுப்பினன்.

6. இவைகளை யெல்லாம் கண்ணாரக் கண்டு சென்ற இறைவன், எப்பொழுது பொழுது விடியுமோ வென்று எண்ணங் கொண்டிருந்து, பொழுது புலர்ந்ததும் நியாய சபையை நாடிச் சென்றான். அங்கு, மற்றைய இரண்டு கக்ஷிக்காரரேயன்றி முடவனும் வந்து முன் நின்றான்.

7. காஜி, காலங் கடவாமல் நியாய ஸ்தலத்தை யடைந்து, முதல் கக்ஷிக்காரரைக் கூப்பிட்டு, வாதி பிரதிவாதிகளை நிறுத்தி, அவ் வேலைக்காரியை வித்து-வானுடன் போகும்படி திட்டஞ் செய்தான். இரண்-டாவதாக, வாணியனையும் இரும்பு வியாபாரியையும் அழைப்பித்துத் தொகையை இரும்பு வியாபாரியே அடையவேண்டுமென்று தீர்மானித்தான். மூன்றாவ-தாக, முடவனையும் மாற்றுருவங் கொண்ட மன்னனை-யும் கூப்பிட்டு, 'உங்கள் குதிரை வேறு சில குதிரைக-ளுக்கு இடையி லிருந்தால் அதை நீங்கள் கண்டறியக் கூடுமோ?' என்று வினவினான். அதற்கு அவ் விரு-வரும், 'ஆம், கூடும், கூடும்' என்றதோடு, முடவன் பின்னும் ஒருமுறை முடுகிக் கூறினான்.

8. பிறகு, காஜி அக் குதிரையைத் தன் குதிரைப் பந்தியில் விட்டு, இருவரையும் தனித்தனி வைத்து, அக் குதிரையைக் குறிப்பிடும்படி கேட்டான். முத-லில் அரசன் தன் அரிய குதிரையை அட்டியின்றிச் சுட்டிக் காட்டினான். பின்பு, முடவனும் சிறிதுநேரம் முயன்று அதனையே காட்டி நின்றான். ஆயினும், காஜி அக் குதிரை முடவனுடையது அன்றெனத் தீர்மா-னித்து, அதை மற்றவனே அடையவேண்டும் என்று அநுமதி யளித்தான்.

9. இவ் வரிய தீர்மானங்களைக் கண்ட அரசன் ஆச்சரியங் கொண்டு, அன்றிரவில் காஜியின் அரண்-மனையை அணுகி, தான் இன்னானெனவும், தன்னு-டைய கருத்து இன்னதெனவும் கூறினன். அது கண்ட காஜி, மன்னவனுக்குரிய மரியாதை அனைத்-தும் மனமுவந்து புரிந்து வணங்கினான். அரசன்

அகமகிழ்ந்து, காஜியை அருகில் அமரச் செய்து, 'ஐயா, நீர் இன்று செய்த அரிய தீர்மானங்களை எவ்வாறு அறிந்தீர்?' என்று வினவினான்.

10. அதன்மேல் காஜி, 'அரசே! முதலாவது — இன்று காலையில் யான் அப்பெண்ணை யழைத்து, மைப் புட்டியில் சிறிது மை விடும்படி உத்தரவளித்தேன்; அவள் அதைப் பலநாள் பழகினவளேபோல் செவ்வையாகச் செய்தாள். அதனால், அவள் வித்துவான் வீட்டு வேலைக்காரியே யெனக் கண்டேன். இரண்டாவது — அந்தப் பணத்தைத் தண்ணீரிற் போட்டு வைத்தேன்; அதில் சிறிது எண்ணெயும் காணவில்லை. அதனால், அது வாணியனுடையது அன்றெனத் தீர்மானித்தேன். மூன்றாவதாக — தாங்களும் முடவனும் ஒரே குதிரையைச் சுட்டிக் காட்டினாலும், முதலில் தேவரீர் போனபோது குதிரை பரிவோடு கனைத்து நின்றது. முடவன் சென்றபோதோ சும்மா இருந்தது. அதனால், அந்த அசுவம் தேவரீருடைய தென்றே தீர்மானித்தேன்' என்று சொன்னான்.

11. அரசன் இவை யனைத்துங் கேட்டு, அளவிறந்த ஆநந்த மடைந்து, 'கடவுளே! தேவரீர் இக்காஜியை எந்நாளும் காத்தருளக் கடவீர்' என்று தொழுது நின்று, காஜிகளனைவர்க்கும் தலைமைத் தன்மையை அவனுக்கு அளித்து தன்னிருப்பிடஞ் சேர்ந்தான்.

6. விசிறி வாழை

பிள்ளைகளே! நீங்கள் பின் படத்தைப் பார்க்கும்போதே இது ஒருவகை வாழைமரமென்று அறிவீர்கள். இம் மரத்தின் இலைகள் இருபுறத்திலும் பரந்து விரிந்திருப்பது, ஓலையாற் செய்த மடக்கு விசிறியை ஒத்திருக்கிற தென்பதுந் தோன்றும். இந்த விருக்ஷம் பார்வைக்கு விசித்திரமாக இருப்பதோடு, உபயோகத்திலும் சிறந்து விளங்குகிறது. இதனை, நீங்கள் முக்கியமாகச் சிங்கார வனங்களிலும், அயல் நாட்டுத் தாவர வர்க்கங்களைச் சேகரஞ் செய்து பாதுகாத்துவரும் சோலைகளிலும் அருமையாகக் கண்டிருக்கலாம். இதற்கு விசிறி வாழை, கல் வாழை முதலிய பல பெயர்களை நமது நாட்டார் வழங்குகிறார்கள். தென் ஆப்பிரிக்காவை யடுத்த மடகாஸ்கர் தீவிலுள்ளவர்களோ இதனை '**வழிப் போக்கர் மரம்**' என்கிறார்கள்.

2. விசிறி வாழை ஆதியில் மடகாஸ்கர் தீவில்தான் உற்பத்தியானது. ஆயினும் நாளடைவில் அது பற்பலதேசங்களிலும் பரவிவிட்டது. அது உஷ்ணப் பிரதேசங்களில் நன்றாய்ச் செழித்து வளரும் தன்மையுடையது. முற்றும் வளர்ந்த விசிறி வாழை மரம் பூமிமட்டத்தி லிருந்து அடிமட்டை வரையில் சுமார் முப்பதடி உயர மிருக்கும். அதன் இலைகள் நீண்டும் அகன்றும் இருப்பதோடு பருத்து நீண்ட நரம்புகளைப் பெற்றும் இருக்கின்றன. அந்த நரம்புகளின் நடுவில் கால்வாய் போன்ற இடைவெளி ஒன்று இருக்கிறது. இதனாலேதான் இம் மரம் பிரயாணிகளுக்குப் பிரயோஜனகரமாக இருக்கின்றது.

3. விசிறி வாழை, பிரயாணிகளுக்கு உபகாரியாவதெப்படி? சுற்றுப் புறங்களிலுள்ள நீர்நிலைகளிலிருக்கும் நீர் சூரிய வெப்பத்தால் முற்றும் வற்றிப் போகுங்காலத்திலும், இம் மரங்களில் மாத்திரம் நீர்



குறைவற நிறைந்திருக்கும். இரவு பட்டதும் ஆகாயத்தி லிருந்து விழும் பனித் துளிகள் இம் மரத்தி லிருந்து நிற்கும் இலையின் வழியாக அகணியிலுள்ள காம்பின் கால்வாயில் ஓடி அடிப்பாகத்தில் தேங்கி யிருக்கும். இவ்வகையாக மட்டைதோறும் தண்ணீர்

நிரம்பி நிற்பதனால் பகலில் அந்த விருக்ஷங்களுக்கு அருகில் வேலை செய்கிறவர்களுக்கும், அவ் வழியாகச் செல்லும் பிரயாணிகளுக்கும் அவை குளிர்ந்த நீரைக் குறைவின்றிக் கொடுக்கின்றன. இம் மரத்தில் தெள்ளிய தண்ணீர் அமுதமாகக் கிடைப்பதால், தூரத்திலிருக்கும் அருவிநீரையாயினும் குளத்துநீரையாயினும் ஜனங்கள் நாடிச் செல்லுவதில்லை.

4. விசிறி வாழை மரத்தில் ஒன்றின்மேலொன்றாகப் பக்கத்திற்குப் பத்துப் பன்னிரண்டு மட்டைகள் இணைத்துப் படிந்து விரிந்திருக்கும். ஒவ்வொரு மட்டையின் அடியிலுமுள்ள அகன்ற கால்வாயில் தங்கியிருக்கும் நீர், நீர்வேட்கையால் அடைந்தவர் தாகத்தைத் தணிப்பதுடன், பூமி மிகவும் வறண்ட காலத்திலும் மரம் பட்டுப்போகாமல் காப்பாற்றுகின்றது. விசிறி வாழையிலிருந்து நீர் பருகவேண்டுமாயின், கூறிய மரக் கழியைக்கொண்டு மட்டையின் அடிப்புறத்தில் குத்தினால் அதில் தங்கியிருக்கும் நீர் உடனே வெளிப்படும். அந்த நீர் குளிர்ந்தும் அம் மரத்தின் மணத்தில் சிறிது பொருந்தியும் இருக்கும். சுத்த ஜலத்திற்கும் இதற்கும் ருசியிற் சிறிது பேதமிருப்பினும், தாகத்தோடு பானஞ் செய்பவர்களுக்கு வெறுப்பை யுண்டாக்காது.

5. தென் இந்திய நாட்டில் பனையும் தெங்கும் பல வகையில் உபயோகமாவதுபோல், இவ் விசிறி வாழையும் பாலைநிலத்தில் பயன் தருவதாகின்றது. மடகாஸ்கர் முதலிய நாட்டில் இதன் இலைகள் வீட்டுக் கூரையாகவும், மட்டைகள் வாரைகளாகவும் பிரயோஜனப் படுகின்றன. மட்டைகளின் உட்புறத்தி-


னுள்ள சடைப்பற்றை வேருகப் பிரித்துவிட்டு, மேற்பாகத்தைத் தட்டையாக்கி, பாய்க்குப் பதிலாகப் பூமியில் விரிப்பார்கள். நமக்கு வாழையிலே உபயோகமாகிற காரியங்களுக் கெல்லாம் அவர்களுக்கு விசிறி வாழையின் இலைகள் உபயோகமாகின்றன.

7. பனிக்கட்டி

தண்ணீர் உறைந்தால் பனிக்கட்டி யாகும் என்பது அனைவரும் அறிந்த விஷயம். பனிக்கட்டியை நமது முகத்துக் கெதிராகப் பற்றிப் பார்த்தால், அது பளிங்கைப்போல ஒளி வீசும். இதனால் தண்ணீருக்கும் பனிக்கட்டிக்குமுள்ள வேற்றுமை நன்கு புலப்படும். திரவ பதார்த்தமாகிய தண்ணீர், குளிர்ச்சியினல் இறுகி, பனிக்கட்டியாகிய திடபதார்த்தமாகிறது; அதுவே வெப்பத்தினல் ஆவியாக மாறி வாயு பதார்த்தமாகின்றது. ஆகவே, தண்ணீர் என்னும் ஒரே பொருள் திரவ, திட, வாயு பதார்த்தங்களாக மாறுகின்றது.

2. நாம் வசிக்கும் இத் தென்னிந்தியா மிக்க வெப்பமுள்ள தாகையால், இங்கு இயற்கையான பனிக் கட்டிகளைப் பார்ப்பது அரிது; மிகக் குளிர்ச்சியான நாடுகளின் நீர்நிலைகளில் தண்ணீர் உறைந்து பனிக்கட்டிகளாக மிதந்துகொண்டு இருக்கும். சீத மண்டலத்திலுள்ள தேசங்களில் பனிக்கட்டித் தீவுகள் பல இருக்கின்றன. அவை சில சமயங்களில் உடைபட்டுத் தண்ணீரில் மிதக்கத் தலைப்படும். தண்ணீரிலேயே தண்ணீர் உறைந்து மலைபோல மிதப்பது என்-

வளவு ஆச்சரியம்; சில இடங்களில் அப் பனிக்கட்டித் தீவுகள் பத்துப் பன்னிரண்டு மைல் அளவிற்குப் பரந்தும் இருக்கும்.



3. பனிக்கட்டி நீரைவிட லேசானது. அது நீரின் எடையில் எழிலொருபங்கு குறைந்தது. இப் பனிக் கண்டங்கள் நீர் மட்டத்திற்குமேல் புலப்படும். அளவிற்கு ஆறுமடங்கு தண்ணீர்க்குள் அமிழ்ந்து

இருக்கும். இராக்காலத்தில், அதிவேகமாகச் செல்லும் நீராவிக் கப்பல்கள் இப் பனிக் கண்டங்களில் தாக்குண்டு சேதமுறுவதும் உண்டு. அதனால் மாலுமிகள் இது விஷயத்தில் அதிக ஜாக்கிரதையாக இருப்பார்கள்.

4. பனிக்கட்டியா லுண்டாகும் பயன் இவ்வளவவ்வளவன்று. மிகவும் உரத்த கற்களை உடைப்பதற்கு உதவும் மற்றக் கருவிகளைவிடப் பனிக்கட்டியே சாலச் சிறந்த ஆயுதமாம். அதெப்படியெனில், தண்ணீர் திரவ ரூபமாய் இருக்கும்போது, அது கொள்ளும் இடத்தைவிட, அது இறுகிப் பனிக்கட்டி யாகும்போது அதிக இடங்கொள்ளும். ஆதலால், கற்பிளவுகளில் விழுந்த தண்ணீர் இறுகும்போது அதற்கு வேண்டிய அளவு பரவுதற்கு இடம் இல்லாமையால், அவ்விடத்திலிருக்கும் கல் முதலியவைகளைப் பிளந்து உடைத்துவிடும்.

5. பனிக்கட்டி யொன்றை ஒரு புட்டித் தண்ணீரில் போட்டு வைத்தால், அது உருகுமளவும் அந்நீரைக் குளிர்ச்சியாக வைத்திருக்கும். பிறகு, அது படிப்படியாய் அவ்விடத்திலுள்ள சாதாரண ஜலத்திற்குச் சமமான சீதோஷ்ணத்தை யடையும். விஷஜ்வரம் முதலிய பிணிகளுக்குப் பனிக்கட்டி மிக்க உபயோகமுள்ள ஔஷதமாம். பனிக்கட்டி நமது நாட்டில் சாதாரணமாக எங்கும் கிடைப்பதரிது. ஆனால், யந்திர சகாயத்தால் இக்காலத்தில் வேண்டுமளவு பனிக்கட்டி செய்துவருகிறார்கள்.

6. பனிக்கட்டியை ஒரு துண்டு கம்பளத்தில் சுற்றிவைத்தால் அது உருகாம லிருக்கும். நமது

உடலில் உஷ்ணமுண்டாவதற்காக நாம் கம்பளத்தை உடுத்திக் கொள்ளுகிறோம். கம்பளம் உஷ்ணத்தை உண்டாக்குகிற தென்பதில்லை. ஆபினும், அது நமது தேகத்திலுள்ள உஷ்ணத்தை வெளிவிடாமலும், வெளியே யிருக்கும் உஷ்ணத்தை உள்ளே புகவொட்டாமலும் காக்கின்றது. அதுபோல, வெளியேயுள்ள உஷ்ணம் பனிக்கட்டியின்மேல் தாக்காமல் தடுத்துக் காக்கின்றமையால், கம்பளத்தில் சுற்றிய பனிக்கட்டி உருகாமல் இருக்கின்றது.

7. நமது இந்து தேசத்திலும் மழை பெய்யும்போது ஒவ்வொரு காலத்தில் வானத்தினின்றும் சிறு பனிக்கட்டிகள் விழுகின்றன. அவையே ஆலங்கட்டி எனப்படும்.

8. இந்தியாவின் வடக்கு எல்லையாக அமைந்துள்ள இமய பர்வதத்தின் சிகர முழுதும் பனிக்கட்டிகளே மிகுதியாக உறைந்திருப்பதனால் அம் மலைக்கு ஹிமாசலம் என்று பெயர் உண்டானது. (ஹிமம்= பனி, அசலம்=மலை). இந்தப் பர்வதத்திலிருந்து கங்கை, பிரமபுத்திரி, ஸிந்து முதலிய ஜீவநதிகள் உற்பத்தியாகின்றன. இந்நதிகளில் மாரிக் காலத்தைவிட வேனிற் காலத்தில் நீர்ப்பெருக்கு மிகுதி. இவை உற்பத்தியாகும் இமயமலையின் சிகரத்தில் உறைந்துள்ள பனிக்கட்டிகள் சூரிய கிரணத்தினால் மிகுதியும் உருகுவதே அதற்குக் காரணம்.

9. குரங்குப் பாலம்

புதியவுலகமென்று பெயர் பெற்ற அமெரிக்கா கண்டம் இரண்டு பிரிவுகளை யுடையது. அவை, தென் அமெரிக்கா, வட அமெரிக்கா என்பன. தென் அமெரிக்காவில் ஒரு வகை வானரம் வாழ்கின்றது: அது சிறிது செம்மை கலந்த நீலநிற முடையது. வால் மிகவும் நீண்டு உறுதியாக இருக்கும்.



2. ஒரு காலத்தில் இக் குரங்குகளில் பல ஒன்று-கூடி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பிரயாணஞ் செய்யத் தலைப்பட்டு, அமேஜான் நதியின் கரை வழியாகச் செல்லுகையில், வழியில் ஓடை யொன்று குறுக்கிட்டது. அவ் வோடையைக் கடந்து அக்கரை சேர்வது அவசியமென வானரங்களுக்குப் புலப்பட்-டது. அந்த நீரோடை சுமார் இருபத்தைந்து அடி அக-லமுள்ளதாய் இருந்தமையால், அவற்றிற்கு அதைக் கடக்கும் உபாயம் ஒன்றும் தோன்றவில்லை. அதனால் வானரங்கள் மனமுளைந்து ஒன்றுந் தோன்றாமல் மயங்கி நின்றன. நீரில் நீந்திச் செல்லும் வல்லமை வானரங்களுக்கு இல்லாமையால், அவை அந்த நீரோ-டையைக் கடந்து செல்ல முடியவே முடியாதெனத் தீர்மானித்தன.

3. சிறிது நேரத்தில் வானரங்களெல்லாம், ஒரே இடத்திற் கூடி, ஓடையைக் கடக்க ஒரு சூழ்ச்சி செய்-தன. சுமார் ஐம்பது வானரங்க ளிருந்த அக் கூட்-டத்தில் பெரும்பாலானவை பெண் குரங்குகள்; இவை-யன்றிச் சில குட்டிகளும் இருந்தன. பின்பு, அவை-யனைத்தும், அருகில் ஓங்கி உயர்ந்து நின்ற ஒரு விரு-க்ஷத்தின் உச்சியில் ஏறின. ஏறியபின், அவைகளில் தலைமை பூண்டிருந்த பெருவானரம் ஒன்று தன் தோழர்களை நோக்கி, ஏதோ சில விஷயங்கள் சொல்-லிற்று; மற்ற வானரங்கள் அவற்றை அமைதியோடு கேட்டுக்கொண்டு இருந்தன. சில மந்திகள் குட்டி-களின் வாயைத் தம் கையாற் புதைத்து, சிறிதும் அரவமின்றி அமைந்திருந்தன. தலைமைக் குரங்கு, தன் எண்ண முழுதும் வெளியிட்ட பின்பு, மற்றைய வானரங்களும் தம் கருத்துக்களைத் தலைவனுக்கு விண்-

ணப்பஞ் செய்வதுபோல் பேரிரைச்சலிட்டுக் கூவின. அக் கூட்டம் அரசனது ஆலோசனைச் சபையேபோல் காணப்பட்டது.

4. அந்த வானரங்கள் ஏறி யிருந்த மரத்தின் கிளைகளில் ஒன்று நீரோடையின்மேல் குறுக்கில் சென்றிருந்தது. அவ்வகையான மரம் எதிர்க் கரையிலும் ஒன்று இருந்தது. அவ் விரண்டு விருக்ஷங்களுக்கும் இடையில் சுமார் பதினைந்தடி இடைவெளி யிருக்கலாம். தலைமைக் குரங்கு எதிரெதிராயுள்ள அவ்விரண்டு கிளைகளையே நெடுநேரம் உற்றுநோக்கி நின்றது.

5. முடிவில், அத் தலைமைக் குரங்கு ஒரு கட்டளை யிட்டது. அதைக் கேட்ட வலிய குரங்குகளெல்லாம் அக் கிளையின் நுனியில் வந்து சேர்ந்தன. சேர்ந்தவுடன், ஒரு குரங்கு அக் கிளையில் தன் வாலைச் சுற்றிக் கொண்டு தலைகீழாய்த் தொங்கிற்று. பின்பு மற்றொரு குரங்கு முன்தொங்கிய குரங்கின் முன்னங் கால்களிலும் கழுத்திலும் தன் வாலைச் சுற்றிக் கொண்டு அதன் கீழே தொங்கிற்று. இவ்வாறே ஒன்றின் கழுத்தில் மற்றொன்றின் வாலைச் சுற்றிக் கொண்டு அடிவரையில் தலைகீழாய்த் தொங்கின. இவ்வாறமைந்த குரங்குச் சங்கிலி, கடிகாரயந்திரத்திலுள்ள லம்பகம்போல் சிறிது சிறிதாக அசைந்து ஆடத் தலைப்பட்டது. கடைசியில் ஊக்கமாய் ஊசலாடிச் சங்கிலியின் இறுதியிலிருந்த குரங்கு எதிர்க் கரையிலிருந்த மரக்கிளையைத் தாவிப்பிடித்துக்கொண்டது. இதனால், இரண்டு மரங்களுக்கும் இடையே குரங்குப் பாலம் ஒன்று ஏற்பட்டது. ஏற்படவே, மற்றக் குரங்குகள் குதூகலத்தால் கூத்தாடியுங் கூச்சலிடத் தலைப்பட்டன.

6. தன் கருத்து நிறைவேறியது கண்ட தலைமைக் குரங்கு அந்தப் பாலத்தின் வழியே நடந்து செல்லக் கட்டளையிடக் கேட்ட இரண்டொரு குரங்குகள், அப் பாலம் எவ்வளவு உறுதியுடைய தென்று பரிசோதிக்க அதன்மேல் நடந்து சென்றன. அதன் பின்னர், தாய்க் குரங்குகள் தம் குட்டிகளோடு நடக்க, மற்றவைகளும் பின்தொடர்ந்து சென்றன. அவை யனைத்தும் சென்ற பின்பு, தலைமைக் குரங்கு ஒரு பெரிய அரசன்போல் மிகவும் கம்பீரத்தோடு நடந்து கடந்தது.

7. குரங்குகள் யாவும் சென்று விட்டன. பாலமாயிருந்த குரங்குகள் அக் கரைசேர்வது எவ்வாறு! அவை ஒன்றும் தோன்றாமல் வருந்திக்கொண்டு தலைவன் கட்டளைக்கு எதிர்பார்த்தன. அக் காலத்தில் குரங்குத்தலைவன் பேரிரைச்சலிட்டு இரண்டாம் மரத்தைப் பற்றிக்கொண்டிருக்கும் வானரம் உறுதியாகப் பிடித்திருக்கவேண்டு மென்றும், முதல் மரத்திலுள்ள குரங்கு வாலை விரைவில் விட்டுவிட வேண்டுமென்றும் கட்டளையிட்டது. முதல்மரத்துக் குரங்கு தன் வாலைத் திடீரென அவிழ்த்துவிட்டது. குரங்குச் சங்கிலி உடனே இரண்டாம் மரத்தின் கிளையில் தொங்கத் தொடங்கிற்று. பின்பு, ஒவ்வொன்றும் முறையே தனக்கு இயன்றவாறு குதித்து ஒடிக் கூட்டத்திற் சேர்ந்துகொண்டது.

8. பிள்ளைகளே! எவ்வகையான அரிய காரியமும், நுட்பமாக ஆராய்ந்து செய்தால், அனுகூலமாக முடியுமென்பது இதனால் விளங்குகின்றதன்றோ.

9. ஆஷாடபூதி

பூர்வகாலத்தில் தேவசர்மா என்னும் பெயர் பூண்ட சந்நியாசி ஒருவனிருந்தான். அவன் தினமும் வீடு வீடாகச் சென்று இரந்து சிறிதுசிறிதாகப் பொருள் சேர்ப்பானானான். சந்நியாசி இவ்வாறு சேகரித்த பொருள் அனைத்தையும் பிறர் அறியாவண்ணம் தனது மேற்போர்வையில் பொதிந்து தைத்துப் போர்த்துக்கொண்டு இருந்தான்.

2. இவ்வாறு நாள் பல செல்ல, சந்நியாசியின் தந்திரச் செயலை ஒருவன் உணர்ந்து கொண்டான். அவன் பெயர் ஆஷாடபூதி, அந்தணர் குலத்தில் பிறந்தவன், தந்திரத்தில் கைதேர்ந்தவன். ஒருநாள் அவன் சந்நியாசியைச் சந்தித்தபோது, 'ஆஹா! இந்தப் போர்வையை நாம் அபகரித்துக் கொண்டோமானால், நமது தரித்திரம் தலைகாட்டாமல் ஒழியுமே! இதனை எவ்வாறு பெறலாம்? சந்நியாசியை யடுத்து அபகரிப்பதே உபாயம்' எனத் தீர்மானித்துக் கொண்டான். பின்பு, ஒருநாள் சந்நியாசியை ஆஷாடபூதி யணுகி, அவன் அடியில் அடியற்ற மரம்போல் விழுந்து, எழுந்து நின்று வணங்கி, 'பற்றற்று விளங்கும் பரமகுருவே! அடியேன் கடைத்தேறும் வண்ணம் கடாக்ஷித்தருளும். நானோ யாருமற்ற பெரும்பாவி. பரதுக்கஞ்சகியாத பரமபுருஷா! அடியேனை ஆதரிக்க வேண்டும்' எனக் கூறி சந்நியாசியின் மனங் கனியுமாறு அழுத கண்ணுஞ் சிந்திய மூக்குமாக நின்றான்.

3. ஆஷாடபூதியின் வஞ்சனையைச் சிறிதுமுணராத அந்தச் சந்நியாசி, அவன் சிரத்தில் தன் கரத்தை

வைத்து, 'அன்பனே! நீ சிறிதும் சிந்திக்கவேண்டாம். கடவுள் உன்னைக் காப்பார்' என்று இதவார்த்தைகள் பற்பல இயம்பித்தேற்றினன். ஆஷாடபூதி அன்று முதல் சந்நியாசி காலாற்காட்டிய வேலையைக் கையாற் செய்து, கந்தையைக் கைக்கொள்ள ஏற்ற சமயம் எதிர்பார்த்திருந்தான்.



4. இது இவ்வாறிருக்க, ஒரு நாள் அடியார் ஒருவர், குரு சீஷன் ஆகிய இருவருக்கும் அன்னமிட அவர்களை அழைத்துக்கொண்டு போனார். இவ்விருவரும் அவ் வடியவர் அகத்திற் சென்று, அவர் விருப்-

புடன் இட்ட விருந்தை விலாப்புடைக்க உண்டனர். பின்பு, வழக்கம்போல் வீடுதோறும் பிச்சை எடுத்துக்கொண்டே போனார்கள். போகும் வழியில் ஆஷாடபூதி ஒரு துரும்பை எடுத்து, சந்நியாசி யறியாமல், தன் தலைமேல் வைத்துக்கொண்டு, அதைத் தன் குருவிற்குக் காட்டி, 'ஐயா! பிச்சை கொடுத்த அன்பர் வீட்டுச் சிறு துரும்பு என் தலையில் ஒட்டிக்கொண்டு வந்து விட்டதே; என்ன செய்வேன்? "அன்னமிட்ட வீட்டில் கன்னமிடலாமா," "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்னும் தருமவாக்கியங்கள் தேவரீர் திருவாய்மலர்ந்தருள அடியேன் பல முறையுங் கேட்டிருக்கிறேனே' என உடல் நடுங்க வாய்குழறக் கூறி, சிறிதுநேரம் அசைவற்று இருந்தான். பின்பு, ஒருவாறு தேறினவன்போற் பாவனை காட்டி, 'சுவாமீ! ஓடிச் சென்று இந்தத் துரும்பை அந்த அன்ன தாதர் வீட்டிற் சேர்த்துவிட்டு, திரும்பி வருகிறேன்' என்று குருவின் அநுமதியைப் பெற்றுச் சென்றான்.

5. ஆஷாடபூதி, ஆசிரியர் கண்ணுக்கு எட்டுந் தூரம் காறும் பின்னிடக் கடந்து சென்று, பின்பு ஒரு செடி மறைவில் மறைந்திருந்து, தன் தலைமேல் இருந்த துரும்பைத் தொலைத்தபின், இரைக்க இரைக்க ஓடிவந்து சந்நியாசியைச் சார்ந்தான். அவன் ஓடிவந்த கோலத்தைக் கண்டு, சந்நியாசி, 'ஆஹா! இவனே பரசொத்தை நாடாத பரம புருஷன், இவனை எதற்கும் நம்பலாம்' எனத் தன்னுள் எண்ணி, அவனிடம் பூர்ண விசுவாசம் வைத்து விட்டான்.

6. மறுநாள் மாலைப்போதில் சந்நியாசி காலக்கடன் முடிக்கச் சென்றபோது, தன் உயிரைப்போல் ஓம்பி வந்த கந்தையைப் போலிச் சிஷனிடத்தில்

கொடுத்துப் போனான். போனவிடத்து, இரண்டு ஆடுகள் சண்டைபிடிகையில் அவற்றின் மண்டையிலிருந்து பெருகிய உதிரத்தை யுண்டுநின்ற ஒரு நரியின் தந்திரத்தைக் கண்டு, வியப்புடன் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றுவிட்டான். ஆசிரியர் வரத் தாமதித்ததைக் கண்ட ஆஷாடபூதி, 'இதுவே சமயம், இதுவே சமயம், காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும்' என்று கருதிக் கந்தையைச் சுருட்டி எடுத்துக்கொண்டு காற்றாகப் பறந்துபோய்விட்டான்.

7. சந்நியாசி திரும்பி வந்து சீஷனைக் காணாமல் திடுக்கிட்டுக் கை கால் நடுங்கி, 'ஐயையோ! என் பொன்னைப் பறிகொடுத்தேனே! என் புத்தி பாழாயிற்றே! என்ன செய்வேன்! கூட்டிக் கூட்டிக் கொள்ளை கொடுக்கும் தேனீ யானேனே!' என்று 'திருடனைத் தேள் கொட்டினாற்போல்' ஒருவரோடும் ஒன்றுஞ் சொல்லாமல் மனங் கவன்று மரணமடைந்தான்.

8. உலகத்தாரை ஏமாற்ற, உயர்ந்தவர்போல் வேஷந் தரித்துக்கொண்டு பொருள் தேடித் திரியும் வஞ்சகர், முடிவில் தாமே வருந்தி அழிந்துபடுவர். அதற்கு இந்தப் போலிச் சந்நியாசியே போதிய உதாரணமாவான்.

10. பருவக் காலங்கள்

உலகத்திலுள்ள ஜீவராசிகள் எல்லாவற்றிலு மனிதனே மாண்புடையவன். மனிதன் ஒருவனே மற்றெல்லாப் பிராணிகளையும் அடக்கியாளும் ஆற்றலுள்ளவன். ஆதலால், மானிட தேகமே மிகவும் சிறப்புடையது. இந்தத் தேகத்தைக்கொண்டு தனக்கும் பிறருக்கும் ஆன நன்மைகள் பல நாடலாம். இந்தக் காரணத்தினால் தாங்கள் உட்கொள்ளும் ஆகாயம், பானம், உணவு முதலான பொருள்கள் அசுத்தமின்றி இருக்க முயலவேண்டும். இவைகள் கெட்டால் நோய் உண்டாவதே யன்றி, அவ்வப்போது உண்டாகும் கால வேறுபாட்டினாலும் சுகா சுகங்கள் உண்டாகலாம். ஆதலால், கால வேறுபாட்டிற்குத் தக்கவாறு உணவையும் உடையையும் அமைத்துக் கொள்ளவேண்டும். கால வேறுபாடுகளைக் கவனிக்க நாடும்போது, ஒரு வருஷத்தில் வரும் பருவங்களின் தன்மைகளை ஆராய்ந் தறிவது அவசியமாகும்.

2. ஒரு நாளில் காலை, நடுப்பகல், மாலை, இரவு முதலிய கால வேறுபாடுகள் தோன்றுவதுபோல ஒரு வருஷத்திலும் கால வேறுபாடுகள் தோன்றும். அவ் வேறுபாடுகள் தேசந்தோறும் வேறுபடுகின்றன. தென்னிந்தியாவின் கிழக்குத் திசையாகிய நம்முடைய நாட்டில் வருஷத்திற்கு ஆறு பருவங்கள் வரும். அவை கார்ப் பருவம், குளிர்ப் பருவம், முன்பனிப் பருவம், பின்பனிப் பருவம், இளவேனிற் பருவம், முதுவேனிற் பருவம் என்பனவாம். இந்தியாவின் வடபாகம், ஐரோப்பா கண்டம், வட அமெரிக்கா முதலான நாடுகளிலோ வருஷத்திற்கு நான்கு பருவங்-

களே வழங்குகின்றன. அவை, வசந்தம், கோடை, வறளி, மாரி என்பனவாம்.

3. நம்முடைய நாட்டில் வழங்கும் பருவங்களில் ஒவ்வொன்றும் இவ்விரண்டு மாதங்கள் கொண்டது. அவற்றுள் கார்காலம் ஆவணி புரட்டாசி மாதங்களை-யும், குளிர்காலம் ஐப்பசி கார்த்திகை மாதங்களையும், முன்பனிக்காலம் மார்கழி தை மாதங்களையும், பின்-பனிக்காலம் மாசி பங்குனி மாதங்களையும், இளவே-னிற்காலம் சித்திரை வைகாசி மாதங்களையும், முது-வேனிற் காலம் ஆனி ஆடி மாதங்களையும் கொள்-கின்றன.



4. மேகங்கள் கூடி நல்ல மழை பொழியுங் காலமே கார்காலமாம். இக் காலத்தில் கொடி, செடி, மரங்களில் புஷ்பங்கள் இரா. மழை பெய்வ-தனால் இரை யகப்படாமல் பக்ஷிகளும் விலங்குகளும்

பசியினால் மெலிவதன்றி, ஈரத்தினால் இருப்பிடமும் பெறாமல் வருந்தும். குளிர் காலத்தில் குளிர் மிகுதியாகத் தோற்றும்; இக் காலத்திலும் மழை பெய்வதுண்டு. முன்பனிக் காலத்தில் செடி கொடிகளில் புஷ்பங்கள் பூத்து அழகாக நிறைந்திருக்கும். இக் காலத்தில் நெற்பயிர் முற்றிக் கதிர்களெல்லாம் தலைசாய்ந்து நிற்க, பயிரிடுவோர் அனைவரும் தாம் பட்ட பாட்டின் பலனை அநுபவிக்கும் பருவம் வந்ததைக் கண்டு களித்து, அறுவடை செய்ய ஆரம்பிப்பார்கள். ஆயினும், இப் பருவத்தில் குளிர் மிகுதியாக இருப்பதனால், வைக்கோல் கூரைவேய்ந்த வீட்டில் வசிப்பது சுகத்திற்கு அநுகூலமாயிருக்கும். இதனாலேயே, 'தையும் மாசியும் வையகத் துறங்கு' என்னும் அரிய வாக்கியத்தை ஒளவையார் அருளிச்செய் திருக்கின்றனர். இது ஐரோப்பியருக்கு இன்பமான காலம். இளவேனிற் பருவமே தமிழ் நாட்டாருக்கு இன்பம் விளைவிக்கத் தக்கது. இக் காலத்தில் பக்ஷி ஜாலங்கள் கூவிக் களித்துக் கூடுகட்டத் தொடங்கும். மரங்களெல்லாம் தளிர்த்துத் தழைத்து அரும்பி அலர்ந்து, மணம் வீசி நிற்கும். பின்னும் சில நாட்களில் இலைகளும் பூவிதழ்களும் மாறிப்போய் பிஞ்சுகள் தோன்றிக் காயாகி, வெப்பங் கொள்ளக் கொள்ளக் கனிகளாகும். இளவேனிற் காலத்தில் பறவைகளெல்லாம் பல பக்கங்களிலும் பறந்தோடிக் கூடுகட்டி முட்டை யிட்டுக் குஞ்சு பொரிக்கும். இப் பருவத்தில், பாடும் பக்ஷிகள் பலவும் மரங்களில் மறைந்திருந்து இன்னிசையாகப் பாடி, மனிதருக்கு மகிழ்ச்சியை விளைவிக்கும். முதுவேனிற் பருவத்திலோ வெய்யில் மிகுதியாகக் காயும்.

5. வட இந்தியாவில் வழங்கும் பருவங்கள் நான்கு. அவைகளில் ஒவ்வொன்றும் மும்மூன்று மாதங்கள் உள்ளது. சித்திரை வைகாசி ஆனி மாதங்கள் வசந்தம், ஆடி ஆவணி புரட்டாசி மாதங்கள் கோடை, ஐப்பசி கார்த்திகை மார்கழி மாதங்கள் வறளை, தை மாசி பங்குனி மாதங்கள் மாரியாகும்.

11. எல்லாரோடும் இணங்க முயலுதல்

ஒரு காரியத்தை முடிக்க முயலும்போது சிலர் தம் மனம் போனவாறு செய்யத் தலைப்படுகிறார்கள். சிலர் அந்நியர் அபிப்பிராயத்தை அநுசரிக்கிறார்கள். இவர்களைப் போல் நாம் எண்ணியவாறே செய்வதும் சரியன்று; பிறர் சொல்லுவதையே மேற்கொண்டு செய்வதும் சரியன்று. எந்தக் காரியத்தையும் செய்யு முன் நாமே தீர யோசிப்பதோடு, அநுபவம் உள்ளவர்களையும் அணுகி ஆராய்ந்து, உத்தம மார்க்கத்தை உணர்ந்து செய்வதே சிறப்பாகும். அவ்வாறின்றி, எல்லாரோடும் இணங்கி அவரவர்க்கு ஏற்றவாறு இயற்ற முயல்வது இயலாத காரியமேயாகும். அம் முயற்சி முடிவில் முயல்வோனுக்குத் துன்பத்தையே உண்டாக்கும். இதற்கு ஒரு திருஷ்டாந்தங் கூறுவோம்.

2. ஒரு சிற்றூரில் வறிய கிழவன் ஒருவனிருந்தான். அவன் அனைவர்க்கும் நல்லவனாக நடந்துகொள்ளும் நாட்டமுடையவன். அவன் தன்னிடத்திலிருந்த மட்டக் குதிரையொன்றை விற்றுவிட எண்ணங்கொண்டு, தன் ஊருக்கு அருகிலுள்ள நகரத்திற்கு நடத்திக்கொண்டுபோகப் புறப்பட்டான். போகும்போது அவன் குமாரனும் தந்தைக்கு உதவியாகப்

4 ஐ.



போனான். இருவரும் அக் குதிரையை நடத்திக்கொண்டு சென்றார்கள்.

3. செல்லும் மார்க்கத்தில் ஒருவன் இவர்களைக் கண்டு, 'ஆ, இதென்ன ஆச்சரியம்! இவர்களுக்குப் பயித்தியமோ! குதிரை சுமையின்றி வறிதே செல்ல, இவர்கள் கால் கடுக்கத் தள்ளாடி நடந்து போகிறார்களே!' என்றான். அந்த மொழியைக் கேட்ட கிழவன், சிறுவனைக் குதிரையின்மேல் ஏற்றிவிட்டு, தான் அதன் பக்கமாக நடந்து போனான்.

4. மற்றும் சிறிது தூரஞ் செல்ல, வேறொருவன் அவர்களைக் குறுக்கிட்டான். அவன் குதிரைமேல் இருந்த குமாரனைப் பார்த்து, 'ஐயையோ, இதென்ன காலக் கேடோ! கலிகாலக் கொடுமையோ! வயது முதிர்ந்த தகப்பன் தள்ளாடித் தள்ளாடி நடந்து வர, வாலிபனான இவன் குதிரை யூர்ந்து செல்வது கொடுமை யன்றோ' என்றான். அதைக்கேட்ட விருத்தன் தன் தனயனை இறக்கித் தரையில் விட்டு விட்டு, தான் அக் குதிரையின் மேல் ஏறிக்கொண்டனன்.

5. பின்னுஞ் சிறிது தூரம் போகையில், மூன்றாமான் ஒருவன் அவர்களை முன்னிட்டான். அவன் கிழவனைநோக்கி, 'ஆஹா! நன்று, நன்று, இதுவன்றோ நீதி! சின்னஞ் சிறுவனை நடக்கவிட்டு, இக் கிழவன் குதிரை யூர்ந்து செல்கிறானே, இதென்ன விசித்திரம்!' என்று வினாவினான். அம் மொழி காதில் விழுந்ததும் கிழவன் சிறுவனையும் தன்னோடு குதிரைமேல் ஏற்றிக்கொண்டு, 'இனி ஒருவரும் ஒன்றுஞ் சொல்வதற்கு இடமில்லை' என்று நினைத்துக் குதிரையை நடத்திச் சென்றான்.

6. நாலாவான் ஒருவன் அவர்களை யணுகி, 'ஐயோ, ஐயோ, வாயில்லாப் பிராணியை இப்படி-யும் வதைக்கலாமா! தன்னுயிரைப்போல் மன்னு-யிரை நினைப்பதன்றோ தருமம்; இருவர் ஏறுவதனால் இக் குதிரையின் முதுகும் முறிந்து விடும்போல் இருக்-கின்றதே. கன்னெஞ்ச முடையார்க்குக் கருணையும் உண்டோ!' என்று பரிதபித்துப் பகர்ந்தான். 'இரு-வரை இவ்விலங்கு சுமப்பதிலும் இவ்விருவரும் இவ் விலங்கைச் சுமப்பதே நியாயமாகும்' என்று வேறு சிலர் மொழிந்தனர். கிழவன் அக் கடு மொழிகளைக் கேட்டு, மனந் திடுக்கிட்டு வருந்தி, 'என்ன செய்-வேன்! ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாக உரைக்-கின்றனரே! எவர் மனப்படி நடப்பேன்' என்று எண்ணமிட்டு, முடிவில் கூறியவர் மொழிகள் முற்றும் சரியானவை என்றுன்னி, இருவரும் இறங்கிக் குதி-ரையின் கால்கள் நான்கையும் சேர்த்துக் கட்டி, இடையில் குறுந்தடி யொன்றை நுழைத்து, தந்தை ஒரு புறமும் தனயன் ஒரு புறமுமாகத் தோளின்மேல் தாங்கி, ஆற்றைக் கடக்கப் பாலத்தின்மேல் நடந்து சென்றனர்.

7. இம் மூடச் செய்கையைக் கண்ட சிலர் கை கொட்டிப் பேரிரைச்சலிட்டு நகைக்கவே, குதிரை வெருண்டு காலை யுதைத்துக்கொண்டது; கால்களைக் கட்டியிருந்த கயிறறுந்து, குதிரை ஆற்றில் விழுந்து இறந்து போயிற்று. அதுகண்ட விருத்தன், 'ஐயோ! நாம் ஒருவருக்கும் நல்லவனாக நடக்க முடியாமற் போனதுமன்றி, நமது பரியையும் பறிகொடுத்-தோமே' என்று சொல்லி, மனக் கவற்சியோடு வீட்டை யடைந்தான்.

12. தேயிலை

தேயிலை, அடர்ந்து வளரும் ஒரு வகைச் செடியின் இலை; முற்றும் வளரவிட்டால் இச்செடி எட்டடிக்கு மேலும் உயர்ந்து வளரும். ஓங்கி வளர்ந்து விட்டால்



இலையைப் பறிப்பதில் கஷ்டமுண்டாகும். இதைக் கருதியே தேயிலைத் தோட்டக்காரர் அச் செடியை மூன்று நான்கு அடிக்குமேல் வளரவிடுகிறதில்லை.

2. தேயிலைச் செடி பெரும்பாலும் தென்றற்-காற்று வீசும் மலைச் சாரல்களிலும், பள்ளத்தாக்கு-களிலும் செழித்து வளரும். இதற்குக் கரிய நிற-

முள்ள களிப்பு நிலமே யேற்றது. தேயிலைத் தோட்டக்காரர் வருஷந்தோறும், புரட்டாசி ஐப்பசி மாதங்களில் விதைகளை யெடுத்து, வசந்த காலம் வருமளவும் மணலில் அல்லது பூமியிற் புதைத்து வைப்பார்கள். வசந்த காலம் வந்ததும் அவ் விதைகளை எடுத்து ஓரிடத்தில் நாற்று விடுவார்கள். அது ஓரடி உயரமுள்ள நாற்றாக வளர ஓராண்டு செல்லும். பிறகு அந்த நாற்றுக்களைப் பிடுங்கிக் குழி யொன்றுக்கு ஐந்தாறாக நடுவார்கள். அவ்வாறு நடுவதற்கு முன், ஒன்றுக்கொன்று நாலைந்தடி தூரமிருக்க வரிசை வரிசையாகக் குழிகள் தோண்டி வைப்பது வழக்கம்.

3. வசந்த காலத்தில் பெய்யும் மழையே தேயிலைச் செடியை விருத்தி செய்ய ஏற்றதெனக் கருதி, கிருஷிகர் அந்தக் காலத்தில் நாற்று நடுவார்கள். அம்மழையினால் செடிகள் நன்றாய் வேரூன்றும். பின்பு, களை யெடுத்தல் ஒன்றே அதற்குச் செய்ய வேண்டிய காரியமாம்.

4. தேயிலைச் செடி, மூன்று வருஷமட்டும் பலன் கொடாது. பின்பு, வருஷத்திற்கு மூன்று முறையாக ஏழெட்டு வருஷம் வரையில் பலன் தரும். தேயிலை வகைகளில் இளஞ் செடியின் இலையே மிகச் சிறந்தது. மூன்றாம் வருஷம் முடிந்ததும் ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர் பலரும் சென்று இலை பறிப்பார்கள்: பறித்த இலையை முதலில் வெய்யிலில் காயவைப்பார்கள்: அல்லது தீயின் அனலில் வாட்டுவார்கள். தேயிலையில் கறுப்பிலை, பச்சையிலை என இரண்டு வகையுண்டு. இந்த இலையைச் சிப்பங்களாகக் கட்டி விற்பனைக்கு அனுப்புவார்கள்.

5. தேயிலை முதல் முதல் சீனா ஜப்பான் தேசங்களில் உண்டாயிற்று. இப்போது அது அத்தேசங்களில் அமிதமாகப் பயிரிடப்பட்டு, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அமெரிக்கா கண்டத்தின் சில பாகங்களிலும் ஜாவா, இலங்கை முதலான தீவுகளிலும், சென்னை ராஜதானியில் நீலகிரி, சேர்வராயமலை, பழனிமலை முதலான மலைச்சாரல்களிலும் தேயிலை மிகுதியும் பயிரிடப்படுகின்றது.

6. தேயிலையின் விலை அதன் மணத்திற்குத் தக்கவாறு அதிகப்படும். அதனால் பயிரிடுவோர் இலையைப் பதமாக்கி, விற்பனைக்கு அனுப்புமுன், அதன் மணம் அறாதபடி ஈயத்தகட்டை உள்ளீடிட்ட கடிதத்திலாவது தகர டப்பிகளிலாவது பக்குவமாகச் சேமித்து அனுப்புவார்கள். பதினாறாம் நூற்றாண்டின் இடையில் தேயிலை, முதல் முறையாக இங்கிலாந்திற்குப் போயிற்று. அக் காலத்திலே அது ராத்தல் முப்பது ரூபாய் வீதம் விலைபெற்றது. இப்போது அநேக தேயிலை ராத்தல் எட்டணா முதல் ஒரு ரூபாய் வரையில் விற்கிறது.

7. தேயிலையால் ஒரு வகை நறுமணமும் சுவையுமுள்ள கஷாயம் செய்யலாம். மிதமாகப் பானஞ் செய்தால் தேயிலைக் கஷாயம் இரைப்பைக்கும் குடலுக்கும் பலத்தைக் கொடுத்து, ஜீர்ண சக்தியை வளர்க்கும். அமிதமாக உட்கொண்டாலோ நித்திரையைக் கெடுத்து, வியாதியை வருவிக்கும்.

13. நன்மகன்

பிள்ளைகாள்! நீங்கள் இரண்டாம் வகுப்பில் வாசித்த போதே, 'தந்தைசொன் மிக்க மந்திரம் இல்லை', 'தாய் சொல் துறந்தால் வாசகமில்லை' என்னும் இரண்டு முதுமொழிகளை அறிந்திருக்கின்றீர்கள். இந்த நீதி வாக்கியங்களை நன்கு விளக்குஞ் சரித்திர மொன்றை இங்கே கூறுவோம்.

2. தசரத சக்கரவர்த்தி கைகேயி என்னும் தன் மனைவிக்குக் கொடுத்த வரத்தினால், ஸ்ரீராமன் களிப்போடு கானகஞ் செல்லத் தலைப்பட்டான். 'ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட் டொன்றாகும்' என்பது போல், நாளைய தினம் நாடாள இருந்த ஸ்ரீராமன் காடாள நேர்ந்ததை உன்னி யுன்னி நகரமாந்தர் அனைவரும் துயரக் கடலில் ஆழ்ந்திருந்தார்கள். ஸ்ரீராமன், ராஜ்யபாரம் தன்னைவிட்டு அகன்றதே என்றெண்ணி, சூரியனைக்கண்ட தாமரைபோல் அக மகிழ்ந்து, விரைந்து சென்று, ராஜ கோலத்துக்குரிய ஆடையாபரணங்களை எல்லாம் அகற்றிவிட்டு, மரவுரி தரித்து வெளியே வந்தான். தன் மகன் கொண்ட தவக் கோலத்தைக் கண்ட கோசலை ஒன்றுந் தோன்றப் பெறாமல் திகைத்து நின்றாள். பின்பு, ஒருவாறு தெளிந்து ஸ்ரீராமனை நோக்கி, 'என் செல்வமே! ஸ்ரீராமா! இதென்ன, தரணியாளும் கோலத்தை விடுத்தாய், தவத்தையாளும் கோலத்தை அடுத்தாய்!' என்று துக்கத்தோடு கேட்டாள்.

3. ஸ்ரீராமன் தாய் கூறிய இரக்க மொழிகளைக் கேட்டு, 'அம்மா! என் தந்தையார் நான் காட்டிற்கு ஏகக் கட்டளை யிட்டார். ஆதலால், அடியேன்

அவரிட்ட கட்டளையைக் கடவாது, காட்டிற்கேக விடை பெற்றுக் கொண்டு போக வந்தேன்' என்றான். 'ஆஹா, என் கண்மணே! ராமா, காட்டிற்கா, காட்டிற்கா!' என்று சொல்லிக்கொண்டே கோசலை சோகமுற்று மண்ணிற் சாய்ந்தாள். அது கண்டு பாங்கிமார் செய்த பலவகை உபசாரங்களால் ஒருவாறு தெளிந்து, 'அப்பா! மகனே காரணம் என்ன? அடாத காரியம் ஏதாவது செய்தையோ? என்ன மாயம்! என்ன சூது! எனக்கு ஒன்றும் தெரியவில்லையே! என் செல்வமே! என்ன நடந்தது? உள்ளதை உள்ளவாறு சொல்; ஒன்றும் ஒளியாதே' என்று கேட்டாள் கோசலை.

4. 'என் தாயே! எனக்கு ஒன்றும் தெரியாது. தந்தையார் என் சிற்றன்னையாகிய கைகேயிக்கு ஒரு காலத்தில் இரண்டு வரம் வழங்கினாராம். அவைகளை இப்போது கொடுக்கும்படி என் சிற்றன்னை கேட்டாராம். அதற்குச் சக்கரவர்த்தி இசைந்த பிறகு, "முதலாவது பரதனுக்குப் பட்டஞ் சூட்ட வேண்டும்; இரண்டாவது ராமனைப் பதினான்கு வருஷங்கள் காட்டிற்கு அனுப்ப வேண்டும்" என்று சிற்றன்னையார் கேட்டனராம். முன்பு கொடுப்பதாகச் சொன்ன வரங்களை என் தந்தையார் மறுத்துப் பேசமாட்டாமல், மனம் கலங்கி, மண்ணிற் சாய்ந்து விட்டாராம். பிறகு ஒருவாறு தெளிந்து,

"பெண்ணே வண்மைக் கேகயன் மாதே பெறுவாயேல்?
மண்ணே கொள்நீ மற்றைய தொன்றும் மற"

என்று மன்றாடினாராம். அதற்குச் சிற்றன்னை சிறிதும் உடம்படாமையால் மூர்ச்சை யடைந்து கீழே விழுந்து கிடக்கின்றார். பிறகு, என் சிறிய தாயார் தாமே

என்னை அழைப்பித்துக் காட்டிற்கு ஏகக் கட்டளையிட்டார்' என்றான்.

5. அதுகேட்ட கோசலை, குலை நடுக்கமுற்று, 'அந்தோ, அந்தோ! இதுவுந் தருமமோ! மூத்தவனிருக்க இளையவன் முறை செய்வது என்ன முறையோ! இந்த நாள் வரையில் இல்லாத செய்கை எப்படி வந்தது? அப்பா ராமா! நானே வந்து உன் தந்தையைக் கேட்கின்றேன்; சற்றிரு' என்று தடை கூறினாள்.

6. ஸ்ரீராமன், 'அன்னையே! வேண்டா, இதில் என் தந்தை செய்தது ஒன்றுமில்லை. தந்தை சொல்லுக்கு ஊனம் வருமாறு செய்பவன் தனயனாகான்; சத்துரு ஆவான். நான் காடு சென்றால் என்ன? என் தம்பி பரதன் நாடாள்கின்றான். தேவரீருக்கு வரும் குறையாது? என்னைவிடப் பரதனே ஏற்றமுள்ளவன் என்பது தங்கள் மனம் அறியாததோ? பரதன் என்னைவிடப் பத்து மடங்கு நல்லவன்: அவனுக்குப் பட்டஞ் சூட்டிப் பாராளச் செய்வதே சிறப்பு' என்று பல நியாயங்களைக் கூறக்கேட்டு, கோசலை அடியற்ற மரம்போல் படிமேல் சாய்ந்தாள்.

7. பின்பு, ஸ்ரீராமன் சுமித்திரையிடஞ் சென்று வணங்கி எழுந்து, நடந்தவை யாவும் சொல்லிக் காட்டிற்கு ஏக விடை யளிக்கும்படி கேட்டான். அவள் இந்த அநீதச் செய்கையைக் கேட்டுச் சிந்தை கலங்கி, 'செல்வ மகனே! ஸ்ரீராமா! நாம் என்ன செய்யலாம்! அரசன் கட்டளையைக் கடந்து நடக்க யாராலாகும்!' என்று கூறினாள். அவள் தன் இரண்டு குமாரரில் லக்ஷ்மணனைப் பார்த்து, 'மைந்தா! நீ ராமனை விட்டுப் பிரியாம லிருந்து அவன் ஏவும் ஏவல்களை முகம்

கோணாமல் அன்புடன் செய்வது உனக்குக் கடமை. ஆதலால், நீயும் அவனோடு காட்டிற்குச் செல், இதோ நிற்கும் உன் அண்ணியாரே உனக்கு அன்னையார்' என்று கூறி அனுப்பினாள்.

8. முடிவில் ஸ்ரீராமன் கைகேசியின் அரண்மனையை யடைந்து, விடை பெற்றுக்கொண்டு காட்டிற்குச் செல்லக் கடிதிற் புறப்பட்டான்.

14. வண்டுகள்

இவ் வுலகத்தில் மனிதர் கண்ணுக்குப்படாத பூபாகங்கள் இவ்வளவென்று சொல்ல முடியாது. அந்தப் பாகங்களில் அமைந்துள்ள பிராணிகளின் தொகைகளும் வகைகளும் இத்தனை என்று எண்ணமுடியாது. எவ் வகையான சிறிய பிராணியானாலும் அதனால் நமக்கு விளையும் நன்மைகளை யோசித்தால் வியப்பும் மகிழ்ச்சியும் உண்டாகின்றன. இவ் வகையான காரியங்களை இயற்றியுள்ள கடவுளின் பேரறிவையும் கருணையையும் புகழ்ந்து உரைக்க எவராலாகும்!

2. ஈ, தேனீ, வண்டு, குளவி முதலான பூச்சிகளைப் பற்றிய விஷயங்களைக் கேட்டால் நீங்கள் என்ன நினைப்பீர்கள்? இவைகளுள் ஏதாவது ஒன்றைக் கண்டால் என்ன செய்வீர்கள்! சித்திரவதை செய்து கொல்வீர்களென்று நினைக்கிறேன். அவைகளையும் ஆதரவோடு கடவுளே காத்து வருகிறார். மனிதராகிய நம்மைப் போலவே அவையும் சுகம் அனுபவித்துக் கொண்டு வாழவேண்டுமென்று கருதியே அவைகளும் படைக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளுக்கும் வீடு

உண்டு; குடும்ப முண்டு; நம்முடைய பெற்றோர் நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தேடுவது போலவே, அவைகளும் தம் குடும்பத்தின் பொருட்டு உணவுப் பண்டங்களைத் தேட வுழைக்கவேண்டி யிருக்கின்றது. எதிர்காலத்தை எண்ணி அவ்வப்போது வேண்டிய பொருளை ஜாக்கிரதையாக முன்னதாகவே தேடிச் சேமிக்கின்றன. நம்முடைய சிறுவர்களைப் போலவே, அவை ஒன்றையொன்று நேசிப்பதையும், ஒன்றோடொன்று கலகைப்பட்டுச் சண்டையிடுவதையும்



காணலாம். ஆயினும் அவை நம்மைவிட மிகச் சிறியவையாயும் பலவீன முள்ளவையாயும் இருப்பதால், நாம் அவற்றை மிகவும் அலக்ஷியம் செய்து, அவை கீழே கிடந்தாலும் மிதித்துக்கொண்டு போகின்றோம். அவைகளின் அரிய செய்கைகளை அறிந்திருந்தால் நாம் அவ்வாறு செய்யச் சற்றுந் துணியோம்.

3. இங்கு வண்டுகளைப்பற்றி விசாரிப்போம். அதன் நிறம் அனைவரும் பார்த்து அதிசயிக்கும்படி மிகவும் விநோதமாக இருக்கின்றது. அதை அதன் வயிற்றுப் புறமாகத் திருப்பிப் பார்த்தால் அங்கு

அது சிறந்த கவசமொன்றை அணிந்திருப்பதைக் காண்போம். அந்தக் கவசம் பார்வைக்கு நீல நிற-மான சதை போலவே தோன்றினாலும், மேற்புறத்-துத் தோலைக் காட்டிலும் மிகவும் சிறந்தது; அதற்கு ஆறு கால்களிருக்கின்றன. அவையல்லாமல் முகத்-தில் மிக்க பலமுள்ள மீசை மயிர்களிருக்கின்றன. அது கால்களால் நடப்பதுடன் சிறகுகளால் விரைவாகப் பறந்தும் செல்லும். அதன் கண்கள் மிகவும் அற்புத-மானவை. பூதக் கண்ணாடியைக் கொண்டு பார்த்தாலன்றி அவைகளிலுள்ள அதிசயங்கள் நமக்கு நன்று-கப் புலப்படா. அதற்குச் சாதாரணமா யுள்ள கண்கள் மாத்திரமே யல்ல, தலையின் பின்புறத்திலும் மிகச் சிறிய கண்களிருக்கின்றன. முதலில் இப் பூச்சி ஒரு சிறு புழு வடிவாயிருக்கும். கால்கள் மிகவும் குறுகி-யவை யாதலால், அப்போது அவற்றால் நடக்க முடி-யாது; விலாப்புறத்தால் மெல்ல மெல்ல நகர்ந்து செல்-லும். புழுக்களாக இருக்குங் காலத்தில் இருண்ட மரப் பொந்தில் மரத்தையே புசித்துக்கொண்டு வசித்-திருந்து, பின்பு அழகிய வடிவுடன் வண்டின் உருவை யடைவது எவ்வளவு ஆச்சரியம்!

4. வண்டுகளில் பலவகை யுண்டு. அத்தனை விதங்களையும் அறிந்துகொள்ள நம்மால் முடியாது. ஆயி-னும், மிகவும் சிரமப்பட்டு அவற்றின் இயற்கைகளைக் கற்றறிந்தவர்கள் அவைகளைப்பற்றி விசித்திரமான சரித்திரங்கள் சொல்லுகிறார்கள். ஒரு வகையான வண்டுக்குத் தன்னைத் தன் சத்துரு எதுவும் எதிர்க்கக் கூடாதபடி காத்துக் கொள்ளத்தக்க விசித்திரமான ஒருவகைப் போர்க் கருவி இருக்கின்றதாம். இவ்வகையான ஆயுதங் கொண்ட வண்டை அதற்கு

விரோதமான பெரிய வண்டு ஒன்று எதிர்த்துச் சண்-
டையிட வருமானல், அது தன் அருகில் வருமளவும்
சிறு வண்டு காத்திருந்து, பெரு வண்டு வந்தவுடனே
அது பயந்தோடிப் போகும்படி அதன் முகத்தில்
துப்பாக்கியால் சுடுவதுபோலச் சுடுமாம். இக் கருவி
அதற்கு எவ்வாறு கிடைத்ததெனில், அந்த வண்டின்
வயிற்றுக்குள் ஒருவகைத் திரவப் பொருள் உண்டா-
கும் பையொன்று இருக்கிறது. சுடும்போது அது
வெடித்துச் சிறிது சத்தத்தோடு புகையும் வெளி வரு-
கின்றது; அப்படிச் சுடும் சமயத்தில் அவ் வண்டு நமது
கையில் இருக்க நேர்ந்தால், அது வெடித்து விடுகிற
ஆவியால் நம்முடைய கை கறுத்துப்போகக் காண்-
போம். ஆயினும், அதனல் நமக்கு யாதொரு தீங்கும்
உண்டாகாது. அத் துப்பாக்கியின் ஓசை கேட்ட-
வுடனே பெரிய வண்டு பயந்து நடுக்கங் கொண்டு,
தான் நீட்டிய மீசைகளைப் பின்னுக்கு வாங்கிக்கொள்-
ளும். அப் பெரிய வண்டுக்கு இவ்விதமான துப்பாக்கி
இல்லை; ஆதலால், தன் சத்துரு செய்யும் செய்கை
இன்னதென்று அறியாமல் பயந்து ஓடிவிடுகின்றது.
பயம் தீர்ந்து மறுபடியும் தன்னை எதிர்க்கப் பெரு
வண்டு முயலுவதற்கு முன்பு சிறு வண்டு வெகு தூரம்
சென்றுவிடும்.

5. மற்றொரு வகையான வண்டுகளின் செய்கை-
யைக் கேட்டால் பின்னும் விசித்திரமாயிருக்கும்.
அவ்வண்டைப் புதைவண்டு என்பார்கள். ஏனெனில்
அது பறவை, தவளை, எலி முதலிய உணவுப் பொருள்-
களை பூமிக்குள் புதைத்து வைப்பதனல் அதற்கு அந்-
தப் பெயர் வழங்கலாயிற்று. இதைக் கேட்கும்போது

அவ்வண்டு மிகப் பெரிதாயிருக்குமென நீங்கள் நினைக்கக்கூடும்; அப்படி இல்லை; ஒரே அங்குல நீளமுள்ளதாக இருக்கிறது. எவ்வளவு நாழிகையானாலும் விடாமுயற்சியோடு உழைக்கும் ஊக்கமுடையதாக இருப்பதால், அது எவ்வளவு பெரிய ஜந்துவையும் கொண்டுபோய்ப் பூமிக்குள் புதைத்து விடுகின்றது. தன் கஷ்டகாலத்தில் தனக்கு உணவு குறைவில்லாமல் வேண்டுமென்றே இது இவ்வாறு பிராணிகளைக் கொண்டுபோய்ச் சேமித்து வைக்கின்றது. இப்படிச் சேர்க்கப்பட்ட பொருள்களின் மேலேயே பெடைவண்டு முட்டையிடுமாதலால், அம்முட்டைகளெல்லாம் புழுக்களானவுடனே அப் புழுக்களுக்கு உணவுக்குக் குறைவு உண்டாவதில்லை.

6. இவ் வண்டுகள், சிறிதும் தோண்டக் கூடாமல் மிகவும் உறுதியான தரையில் ஏதேனும் ஒரு பறவை செத்துக் கிடக்கக் கண்டால், சுலபமாகத் தோண்டக் கூடிய வேறோர் இடத்திற்கு அப் பிணத்தை இழுத்துக் கொண்டு போகும். பின்பு அதைப் புதைக்கும்படி ஆண் வண்டு பள்ளந் தோண்ட ஆரம்பித்து, அப் பிணமிருக்கும் இடத்திற்கு அரை யங்குலத்திற் கப்பால் அதைச் சுற்றிப் பள்ளம் கல்லும். பின்பு அப்படியே சிறிது சிறிதாக அப் பிணத்தின் கீழுள்ள மண்ணையெல்லாம் பறித்து அப்புறப் படுத்தி அதை அந்தப் பள்ளத்தில் விழுத்தும். அவ்வண்ணம் மூன்று மணி நேரம் வேலை செய்தபின் அவ்வண்டு வெளியே வந்து ஒரு மணி நேரம் இளைப்பாறும். பிறகு, தோண்டிய பள்ளம் அப் பறவை புதையப் போதுமானதுதானோ வென்று அறிய அதன் இறகைப் பற்றி இழுத்துப்

பார்க்கும்; போதாதென்று தோன்றினால், அக் குழி-யைப் பின்னும் ஆழமாகக் கல்ல ஆரம்பிக்கும். மூன்று மணி நேரம் வேலை செய்ததானால் மறுபடியும் வெளியே வந்து செத்த பிணம்போலச் சிறிதும் அசையாமல் ஒருமணி நேரம் அயர்ந்திருக்கும்; திரும்பவும் போய் வேலை செய்யும். அப் பள்ளம் அது புதையப் போது-மானதென்று தன் மனத்திற்குத் தோன்றிய பிறகு, அப் பறவையை இப்புறமும் அப்புறமும் இழுத்துப் பார்த்து, குழியில் செவ்வையாகப் பொருத்தி அதன் மேல் மண்ணைத் தள்ளி புதைத்துக் கெட்டி செய்து-விடும். இவை யெல்லாம் செய்து முடிந்த பிறகு, அப் பறவையின்மேல் மூடிய மண்ணில் ஒரு சிறு வளை தோண்டிக்கொண்டு அதில் அவ் வண்டு தன் பெடை-யோடு சந்தோஷமாக வசித்திருக்கும். பெடை வண்டு முட்டையிட்ட வுடனே அம் முட்டைகளை அந்த இடத்-திலேயே விட்டுவிட்டு மற்றும் உணவுப் பொருளைத் தேடிக் கொண்டுவர வேறோர் இடத்திற்குச் செல்லும்.

7. பிள்ளைகளே! இந்தச் சரித்திரங்கள் எவ்வளவு விசித்திரமானவை! இது வாஸ்தவமாக நடக்கும் விஷ-யமே. பள்ளம் தோண்டுவதற்கும், அதில் பறவை, எலி, தவளை முதலானவைகளைக் கொண்டு போய்ப் புதைப்பதற்கும் இவ்வண்டுக்கு முக்கியமாயுள்ள கருவி அதன் தலை யொன்றுதான். இறந்த சிறு பிராணிகளை இவ்வாறு பூமிக்குள் புதைத்துவிட்டு அவைகளின் துர்க்கந்தம் வெளிவர வொட்டாமற் செய்து, நம்மைக் காப்பாற்றுகின்ற இவைகளினிடத்தில் நாம் மிக்க அன்பு பாராட்ட வேண்டுவது அவசியமன்றோ? வரு-ஷந்தோறும் கோடிக் கணக்கான பிராணிகள் இப்-

பூமியில் இறக்கின்றன. ஆயினும் நாம் வெளிகளில் சஞ்சரிக்கும் பொழுது பார்க்க அருவருப்பாகவேனும் துர்க்கந்தம் வீசிக்கொண்டேனும் இருக்கவிடாமல் இறந்த அவைகளை அடக்கஞ் செய்வதனால் பூமியைச் சுத்தி செய்து, நமக்கு உபகாரம் செய்கின்ற இந்தச் சிறு பிராணிகளுக்குக் கைம்மாறாக நாம் யாது செய்யலாம்? அவைகளைப் பிடித்துத் துன்பப் படுத்தாமல் இருப்பதுதான் அவைகளுக்கு நாம் செய்ய வேண்டிய பிரதி யுபகாரம்.

15. போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து

உலகத்தில் செல்வம் உள்ளவர்களைச் செல்வர் என்றும், அது இல்லாதவர்களை வறியர் என்றும் சொல்வது வழக்கம். செல்வ முள்ளவர்கள் செய்ய நாடிய எவ்வகைக் காரியத்தையும் நாடியவாறே செய்து முடிக்கும் சக்தி யுடையவர் ஆவர். இந்த உண்மையை, 'ஈட்டி எட்டியவரையில் பாயும், பணம் பாதாளம் வரையில் பாயும்' என்னும் பழமொழி நமக்குக் காட்டுகின்றது. செல்வர், தாங் கருதிய காரியங்களைத் தடையின்றி முடிப்பர். வறியவனோ, முடவனிடத்தில் எழுந்த வளர்ந்த சினத்தைப்போல், தன் மனத்தி லெழுந்த எண்ணங்களை முடிக்கும் சக்தியின்றி வருந்தி நிற்பான். வறியன் நற்குணமுடையவனே யாயினும் அவன் வையத்தில் மாட்சிமை யடையான். செல்வன் துர்க்குணமே உடையவனாயினும் அவன் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்புறுவான். 'குணம் குப்பையிலே பணம் பந்தியிலே' என்னும் பழமொழியே இதற்குச் சாக்ஷியாக விளங்குகின்றது.

2. உலகத்தின் தன்மை இதுவே யாயினும், திருப்தி இல்லாத செல்வனைவிட அதை யடையப் பழகிய வறியவனே சந்தோஷம் உள்ளவனாவான். இதை விளக்கத் திருஷ்டாந்தக் கதை ஒன்று இங்கே கூறுவோம்.



3. செல்வபுரி என்னும் நகரத்தில் தனபதி என்னும் வைசியனொருவ னிருந்தான். அவன் அரசனே யென்ன அனைவருங் கொண்டாடத்தக்க அளவிலாச் செல்வமுடையவன். அவன் அப்பொருளைக்கொண்டு திருப்தியை யடையாமல், மற்றும் பெரு நிதி தேட ஆவல்கொண்டு வர்த்தகம் புரிபவனாய் வளமுள்ள நாடுகள் பலவற்றை நாடிச் சென்றான். செல்லும் மார்க்கத்தில் ஓர் உழவனைக் கண்டான். அவ் வுழவன், 'பெற்றதே பாக்கியம்' என்னும் பேரறிவு வாய்ந்தவன். அவன் தன் உழவுத் தொழிலைச் செவ்வையாகச்

செய்துகொண்டு பெருமகிழ்ச்சி பெற்றிருப்பதை வணிகன் கண்டு, தன்னுள் ஆலோசிப்பான் ஆனான். 'ஆஹா! இவ் வுழவனைவிட நமக்குத் திரண்ட செல்வ-முண்டென்பதில் சிறிதும் ஐயமில்லை; ஆயினும் இவ-னுக்குள்ள அகமகிழ்ச்சியில் அணுவளவும் நமக்கு அமையவில்லையே. இது எதனாலோ? அவனை அணு-கிக் கேட்டறிவோம்' என்று உழவன் அருகில் போனான்.

வணிகன் — ஐயா உழவரே! நீர் பாடுபட்டு உழைக்கிறீரே, இந்த நிலம் உம்முடையதுதானோ?

உழவன் — ஐயா! இந்த நிலம் எனக்குச் சொந்த மன்று; எனக்கு அவ்வளவு பணமேது? கூலிக்கு உழுகிறேன்.

வணிகன் — தினந்தோறும் உமக்கு எவ்வளவு கிடைக்கிறது?

உழவன் — ஐயா, எனக்கு நாளுக்கு ஏழணாக் கிடைக்கிறது.

வணிகன் — ஏழணாத்தானா! இதைக் கொண்டு நீர் எவ்வாறு ஜீவனம் செய்து வருகிறீர்?

உழவன் — 'அதென்ன ஏழணாத்தானா?' என்-கிறீர்களே. இதைக்கொண்டு என் குடும்பத்தாரும் நானும் தினந்தோறும் உண்பதோடு சிறிது சேர்த்தும் வைக்கிறேன்.

வணிகன் — ஆஹா! இதென்ன ஆச்சரியமாக இருக்கிறது; 'அரைப் பணத்திற் கலியாணம், அதிலே

கொஞ்சம் பாணவேடிக்கை' என்பதைப்போல இருக்கிறது என்றெண்ணி, ஐயா, ஏழணாவைக்கொண்டு தினமும் நீரும் உமது குடும்பத்தாரும் ஜீவனஞ் செய்வதோடு கொஞ்சம் சேர்த்தும் வைப்பது எப்படி ?

உழவன் — என் குடும்பத்திற்கு நாளுக்கு மூன்றணு; பழைய கடனுக்கு இரண்டணு; தருமம் ஓரணு; ஆக ஆறணுப் போக நிற்கிற ஓரணுவைச் சேர்த்து வைக்கிறேன்.

வணிகன் — நீர் இப்படித் தினவரும்படியைக்கொண்டு ஜாக்கிரதையோடு ஜீவனம் செய்து வரும்போது கடன் எப்படி வந்தது.

உழவன் — ஓஹோ, அப்படியா நினைக்கிறீர்! என் சிறு வயதில் என்னைப் பலவருஷம் போஷித்த என் மாதா பிதாக்களுக்கு நான் செய்யவேண்டிய கடமைகள் எனக்குள்ள பழைய கடன்; அவர்கட்கு தினம் இரண்டணுத் தருகிறேன். தருமம் என்பது என் சகோதரிக்குக் கொடுப்பது; என் சகோதரி என்னினும் வறியள்; அவள் பிணியால் பீடிக்கப்படுகிறுள்; அவள் நிமித்தம் ஓரணுச் செலவிடுகிறேன். சேர்த்து வைக்கிறேன் என்றது என் புத்திரனுக்குக் கல்வி கற்பிக்கும் செலவு. ஏனெனில், முன்பு என்னைப் பாதுகாத்த என் இரு முதுகுரவரை யான் காப்பாற்றக் கடமைப்பட் டிருப்பதுபோல, நான் இப்போது என் மைந்தனைக் காப்பாற்றினுல், அவன் என் முதுமைப் பருவத்தில் எனக்கு அன்னபானுதிகள் அளித்துப் பாதுகாக்கக் கடமையுள்ளவனுவான். இதுவே எனது வாழ்க்கை. இவ்வளவு ஊதியத்தைக்

தினந்தோறும் ஈசுவரன் எனக்குக் கட்டளையிட்டால் போதும்.

வணிகன் — ஆஹா! நமக்குத் திரண்ட செல்வமிருந்தும் பயன் என்ன! இவ் வுழவன் பெற்றுள்ள திருப்தியே திருப்தி; நித்தியானந்தம் இவனை விட்டு நீங்காது. நமக்கு உள்ளது போதும் என்னும் மன நிறைவு உண்டாகுந்தனையும் சந்தோஷ மென்பது அணுவளவும் நமக்கு உண்டாகாது. இனியாகிலும் மன நிறைவை அடைந்து அது தரும் மகிழ்ச்சியை அடைவோம் என்று தான் கருதியவை அனைத்தையும் அந்த உழவனுக்கு உரைத்தான்.

4. பின்பு, அவ்விருவரும் அளவளாவிச் சம்பாஷித்தபோது, உழவன், 'ஐயா! "போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து" என்னும் உறுதி மொழியை உற்று நோக்கும்' என்றான். அது கேட்ட வணிகன் உழவனுக்கு வந்தனம் புரிந்து, தன் நாட்டிற்குத் திரும்பிவந்து, நிறைமன முடையவனாகி நல் வாழ்வு வாழ்ந்து வந்தான்.

16. உலோக வகைகள்

(i) செம்பு — செம்பு, மங்கிய சிவப்பு நிறமுடைய உலோகம். அது தாமிரம் என்றும் பெயர் பெறும். செம்பு, நீரைவிட ஒன்பது மடங்கு கனமுள்ளது. செம்பு கனிஜ வஸ்து. தாமிரக் கனிகள், இங்கிலாந்து ஷில்லி ரஷியா ஆஸ்திரேலியா தென் ஆப்பிரிக்கா

ஸ்பெயின் முதலான தேசங்களில் மிகுதியாக இருக்கின்றன. இங்கிலந்து வேல்ஸ் ஸ்காத்லந்து அயர்லந்து முதலான தேசங்களின் கனிகளிலிருந்து வருஷந்தோறும் சுமார் 67,200 பாரம் எடையுள்ள செம்பு கிடைப்பதாக மதிப்பிட்டிருக்கிறார்கள்; இதன் விலை கொஞ்சங் குறைய ஒன்றரைக்கோடி ரூபாயாகிறது.

2. நயப்பில் பொன்னுக்கும் வெள்ளிக்கும் பிற்பட்டது தாமிரம். அதை தகடாக அடிக்கவும், கம்பியாக நீட்டவுங் கூடும். தாமிரம் மற்ற உலோகங்களை விட மிகுந்த ஓசையுள்ளது. பொன் வெள்ளிகளை விடச் செம்பு மிகுதியாகக் கிடைப்பதனால், அதன் விலை அவைகளின் விலைக்குக் குறைந்தது. ஒரு பலம் பொன்னின் விலைக்குச் சற்றேறக்குறைய ஆயிரம் பலம் செம்பு வாங்கலாம். செம்பு பலவகையாக உபயோகப்படுகிறது. அதைத் தகடுகளாக்கி, கப்பல்கள், கடல்நீரால் பழுது படாதபடி அவைகளின் அடிப்புறத்திற்கு அடிக்கிறார்கள். தவலை, கொப்பரை முதலான பலவகைப் பாத்திரங்கள் செய்கிறார்கள். செம்பில் புளிப்புள்ள பண்டம் பட்டவுடன் களிம்பு வெளிப்படும். அக் களிம்பு பசுமை நிறமும் அதிக விஷத் தன்மையும் உள்ளது. ஆகையால், செம்பினால் செய்யப்படும் போஜன பாத்திரங்களுக்கு வெள்ளீயம் பூசுவது அவசியம். ஈயம் பூசப்படாத செப்புப் பாத்திரங்களில் வைத்த உணவுப் பண்டங்களைத் தின்று இறந்தவர் எண்ணில்லாதவர். செப்புப் பாத்திரங்களுள் உண்டாகும் களிம்பாகிய விஷத்திற்கு முட்டையிலுள்ள வெள்ளைக்கரு மாற்று என்கிறார்கள். செப்புக் களிம்புக்குத் துருசு என்று பெயர். தாமிரத்தினால்

சில ஔஷதங்கள் செய்வதும் உண்டு. அவை தாமிர பஸ்மம், தாமிரச் சுன்னம் முதலானவை. அரையணு, காலணு, ை இம் மூன்றுவகை நாணயங்களும் செப்பு நாணயங்கள்.

(ii) **ஈயம்** — ஈயம், சாம்பல் நிறமுள்ள உலோகம். அது வங்கமென்றும் சொல்லப்படுகிறது. அது ஜலத்தைவிடப் பதினொரு மடங்கு கனமுள்ளது. ஈயம் வெட்டினவுடனே வெட்டுவாயில் மிகப் பளபளப்பாக இருக்கும்; காற்று படப்பட அதன் நிறம் மங்கிப்போகும். அது உலோகங்களிலெல்லாம் மிகவும் நயப்புள்ளது. ஆகையால், அதை சுலபமாக அடித்துத் தகடாக்கலாம். அதைக் கத்தியினாலும் அறுத்துத் துண்டாக்கலாம். விரலால் அதைத் தேய்த்தால் விரலில் கறை படியும். உலோகங்களுக்குள், ஈயமும் தகரமும் சிறிது அனல் கொண்டவுடனே உருகுந் தன்மையுடையவை. மற்றவைகளோ சிவக்கக் காய்ந்து மிகவும் சூடுகொண்ட பிறகுதான் உருகும். ஈயம் கனிகளிலிருந்து வெட்டி யெடுக்கப்படும்போது வேறு பல பொருள்களோடு கலந்திருக்கும்; அந்தக் கலவைப் பொருள்களில் மிகுதியானது கந்தகம். சில இடங்களில் சிறிது வெள்ளியும் கலந்திருக்கும்.

2. ஈயம், ஸ்பெயின் இங்கிலாந்து ஐக்கியமாகாணம் முதலிய இடங்களிலுள்ள கனிகளில் மிகுதியாக வெட்டி யெடுக்கப்படுகிறது. ஐரோப்பாக் கண்ட முழுவதும் உபயோகப்படும் ஈயத்தில் பெரும்பாகம் ஸ்பெயின் தேசத்தில் கிடைக்கிற ஈயமாம். ஈயத்தினால் நீர்க்குழைகள் முதலிய பல கருவிகளும் சாமான்களும் துப்பாக்கி ரவைகளும் குண்டுகளும் செய்யப்படுகின்றன. பாஷாணம் கலந்த ஈயத்தை உருக்கிச் சல்ல-

டைக்கண் போன்ற சிறு துவாரங்களை யுடைய தட்டுக்களில் வார்க்க, அது உயரத்திலிருந்து விழும் வழியில் ஆறி இறுகி ரவைகளாகக் கீழே விழும். அச்சு எழுத்துக்கள் வார்க்கும் ஈயத்தோடு நாலுக்கு ஒன்றுவீதம் நிமிளை யென்னும் ஓர் உலோகம் சேர்க்கப்படுகின்றது.

3. ஈயத்தில் புளிப்புப் பட்டால் களிம்பு பிடிக்கும். ஈயக் களிம்பும் விஷத்தன்மையுள்ளது. ஈயமும் ஔஷதங்கள் செய்வதற்கு உபயோகப்படுகிறது. வங்க பஸ்மம் முதலானவைகள் ஈயத்தினால் ஆனவை.

(iii) தகரம் — தகரம், வெள்ளியைப்போல் மிக்க வெண்மையுள்ள ஓர் உலோகம். அது ஜலத்தைவிட ஏழுமடங்கு கனமுள்ளது. அதை வெள்ளீயம் என்றும் சொல்வதுண்டு. கடைகளில் விற்கிற வெள்ளீயத்தில் சிறிதளவே ஈயம் கலந்திருக்கும். தகரம் களிம்பு உள்ளது அன்று; அது அதிக நயப்புள்ளதோர் உலோக மானபடியால், தனியே அதைக் கொண்டு பாத்திரம் முதலியவை செய்ய முடியாது. அதனோடு ஈயத்தையாவது துத்தநாகத்தையாவது கலந்து பாத்திரங்கள் செய்வார்கள். அதனுடைய முக்கியப் பிரயோஜனம், செம்பு பித்தளை இரும்பு ஆகிய இவைகளாற் செய்யப்படும் பாத்திரங்களில் களிம்பு பிடியாமல் இருக்கும்படி மேற்பூச்சுப் பூசுவதே. அதைச் செம்போடு கலந்தால் வெண்கலமாகின்றது. சுத்தமான தகரத்தை உருக்கி, அச்சமாக அடித்த இரும்புத் தகடுகளை அதில் தோய்ப்பார்கள். இத் தகடுகளையே சாதாரணமாகத் தகரத் தகடு என்கிறார்கள். இந்தத் தகடுகளால் ஜோடுதவலை பெட்டி விளக்குக்கூடு முதலிய பலவகைச் சாமான்கள் செய்யப்படும். இத்

தகடுகளின்மீது ஒட்டியிருக்கும் தகரம் தேய்ந்தாவது உதிர்ந்தாவது போனால் உட்புறத்திலிருக்கும் இருப்புத் தகடு வெளிப்படும். முகம் பார்க்கும் கண்ணாடிகளுக்கு பின்புறத்தில் ரசம் போடுவதற்கு அச்சமான தகரத் தகடு உபயோகப்படுகிறது. கண்ணாடி யளவிற்குச் சரியான தகட்டைச் சமமான பலகை ஒன்றின்மேல் வைத்து அதில் ரசத்தை வார்த்து, அந்த ரசத்தின் மேல் கண்ணாடியை வைத்தால், சிறிது பொழுதிற்குள் ரசம் தகரத்தோடு சேர்ந்து இறுகிவிடும்.

2. தகரம் இங்கிலந்து, ஸ்பெயின், சுமித்திரா தீவையடுத்த பான்கா, மலயா, ஆஸ்திரேலியா முதலான பிரதேசங்களிலுள்ள கனிகளி லிருந்து மிகுதியாக எடுக்கப்படுகிறது.

(iv) **துத்தநாகம்** — துத்தநாகம் சிறிது நீலங் கலந்த வெண்ணிறமுள்ள ஓர் உலோகம்; அது ஈயத்தை விடச் சிறிது ஒளி மிக்கது. அது கடினமா யிருப்பினும் அடித்தால் நீளத்தக்கதே யன்றி உடையாது. அது ஜலத்தைவிட ஏழுமடங்கு கனமுள்ளது. அது அமெரிக்காவில் ஐக்கிய மாகாணங்களிலும், ஐரோப்பாவில் இங்கிலந்திலும் உள்ள கனிகளில் ஏராளமாக வெட்டி யெடுக்கப்படுகிறது. அது எளிதில் களிம்பேறாத உலோகமாதலால், போஜன பதார்த்தங்கள் வைப்பதற்குரிய பாத்திரங்கள் அதனால் செய்யப்படுகின்றன. அதைத் தகடுகளாக்கிக் கட்டடங்களுக்குக் கூரையாக வேய்வதுடன் வேறு பலவித வேலைகளுக்கும் உபயோகிக்கிறார்கள்.

(v) **பித்தளை** — இரண்டு பங்கு செம்பும் ஒரு பங்கு துத்தநாகமும் கலந்த கலப்பே பித்தளையாகி-

றது. அது அழகான மஞ்சள் நிறமுடையது. அதை உருக்கி வார்ப்பதும், கடைச்சல் பிடிப்பதும் எளிதாக இருப்பதனாலும், அது நல்ல மெருகை ஏற்றுக் கொள்வதனாலும், தத்துவ சாஸ்திர உபகரணங்களைச் செய்வதற்கு அதிகமாக உபயோகப்படுகின்றது. போஜன பாத்திரங்களும், தவலை, கொப்பரை, குத்துவிளக்கு முதலிய தட்டுமுட்டுகளும் பித்தளையினால் செய்யப்படுகின்றன. பித்தளை, செம்பைப்போல் சீக்கிரத்தில் களிம்பு பிடியாவிட்டாலும், போஜன பதார்த்தங்களைப் பித்தளைப் பாத்திரங்களில் சமைப்பது ஆரோக்கியத்திற்கு அநுகூலமானதன்று. ஆகையால், பித்தளைப் பாத்திரங்களுக்கும் வெள்ளீயம் பூசிச் சமையல் செய்ய வைத்துக்கொள்வது நல்லது.

(vi) வெண்கலம் — செம்பும் வெள்ளீயமும் சேர்ந்து வெண்கலமாகிறது. அவைகளோடு சிறிது துத்தநாகமும் சேர்ப்ப துண்டு. வெண்கலத்தில் களிம்பு ஏறாது. ஆகையால், அது போஜன பாத்திரங்கள் செய்யவும் பிரதிமைகள் வார்க்கவும் உதவும். நான்கு பங்கு செம்பும் ஒரு பங்கு வெள்ளீயமும் சேர்ந்தால் நல்ல நாதமுள்ள வெண்கலமாகும். வெண்கலத்தால் மணிகள் வார்க்கப்படுகின்றன. வெண்கலம் மிக்க கடினமானதாகையால் அதை அடித்து வேண்டிய உருவங்கள் செய்துகொள்ள இயலாது; அதை உருக்கியே அச்சுகளில் வார்க்கவேண்டும்.

17. தந்தை தநயனுக்குக் கூறிய புத்தி

ஒரு மகம்மதியனுக்கு மைந்தனொருவ னிருந்தான். அவன் தனக்கேற்ற புத்திமதிகளைப் போதிக்கும்படி தன் தந்தையைத் தினமும் கேட்டுவந்தான். தந்தை, மரணகாலத்தில் தன் தநயனைப் பக்கத்தி லிருத்திக்கொண்டு, பின் வருமாறு புத்தி புகட்டலானான்.

2. என் அருமந்த மகனே! நீ தினந்தோறும் கேட்டுக்கொண்டு வந்தபடியால், நான் இத் தருணத்தில் உனக்கு சில புத்திமதிகள் சொல்ல விரும்புகிறேன்; அவைகளை நீ அசட்டை செய்து கைசோர விடாமல் ஜாக்ரதையோடு கேட்டுக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும். சொல்கிறேன் கேள்:

(1) நமது வீட்டிலிருந்து உன் உத்தியோகசாலை வரைக்கும் பந்தல் அமைத்துக்கொண்டே செல்லவேண்டும்.

(2) அநுதினமும் பால் பருகவேண்டும்.

(3) குளிக்காமல் உண்ணலாகாது.

என்று சொல்லிக்கொண்டே கண்ணை மூடிக்கொண்டான்.

3. இவைகளைக் கேட்ட குமாரன், 'நாமோ நாளுக்கு நாலணைக்குக் கூலிவேலை செய்கிறோம்; இந்த நாலணையில் வீட்டிலிருந்து உத்தியோகசாலை வரைக்கும் பந்தலமைத்துக் கொள்வதெவ்வாறு! பால் பருகுவது எப்படி! குளிப்பது மாத்திரங் குறைவின்றிச் செய்யக் கூடியதே' என்று இப்படிப் பலவாறு சிந்-

தித்து சிந்தித்து, ஒன்றுந் தோன்றாமல் திகைத்து, தந்தை சொல்லைத் தட்டி நடப்பது தகாதே! இதன் கருத்து நமக்கொன்றும் புலப்படவில்லையே! என்று வருந்திக்கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் ஒரு வித்துவானை அடுத்து, தன் தந்தை தனக்குக் கூறிய



புத்திமதிகளை அவருக்குத் தெரிவித்து, அவற்றின் கருத்துக்களை விளக்கும்படி வேண்டிக் கொண்டான். அவர் கீழ் வருமாறு விடை கூறினர்.

4. 'வீட்டிலிருந்து உத்தியோகசாலை வரைக்கும் பந்தல் போடுமென்பது, நீ நிழலில் போகவேண்டு மென்பதைக் குறித்துச் சொல்லியது. சூரியன் புறப்-

படு முன் நீ உன் வேலைக்குப் போகவேண்டும் என்பது அதன் கருத்தாகும்.

5. 'அநுதினமும் பால் பருகவேண்டும் என்பது, மிகுந்த பசியாக இருக்கும்போது உப்பில்லாக் கஞ்சியை உண்டாலும் அது அமுதமாகவே யிருக்கும். ஆகையால், பசி யெடுத்தபோதுதான் சாப்பிட வேண்டு மென்பது அதன் பொருள்.

6. 'தினந்தோறும் குளிக்கவேண்டு மென்பது, தேகஞ் சுத்தமாயிருந்தால் யாதொரு பிணியும் வாராது என்பதாம். உடலின் சுத்தத்தைக் கருதுவோர் உடையின் சுத்தத்தையுங் கருதுவா ராதலால், "கூழானாலுங் குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்னும் பழமொழியை வலியுறுத்திக் காட்டியதாகும்' என்றனர்.

7. அப் புதை பொருளைக் கேட்ட சிறுவன் பேரானந்தங் கொண்டு, வீட்டுக்குச் சென்று, அன்று முதல் தன் தந்தை கூறிய கட்டளைகளை மறவாது கடைப்பிடித்து ஒழுகி வந்தான். அதனால், அவன் செல்வத்திற் சிறந்த சீமானாகி வாழ்ந்ததுமன்றி, திடகாத்திர முடையவனாகவும் ஜீவித்திருந்தான்.

18. புகையிலை

புகையிலை, இலை தழைத்து அடர்ந்து வளரும் ஒரு வகைச் செடி. அது சுமார் ஆறடி உயரம் ஓங்கி வளரும். இதன் இலை ஏறக்குறைய இரண்டடி நீளமும்



ஓரடி யகலமும் இருக்கும். இச் செடி வெண்மை நிறம் வாய்ந்த சிறு புஷ்பங்கள் உள்ளது. அப் புஷ்பங்களை கிள்ளிவிட்டால் அவ்விடத்தில் வேறு சில இலைகள்

விடும். புகையிலைச் செடியில் மிக்க உபயோகமானது அதன் இலையே. பயிரிடுகிறவர்கள் விதைக்கென்று சில செடிகளை வளர விடுவார்கள். அதன் விதை பெரும்பாலுங் கடுகை ஒத்திருக்கும். இலைகள் ஆரம்பத்திற் பசுமை நிறமாக இருந்து, முற்றும் காலத்தில் வெண்மை நிறத்தை யடையும்.

2. புகையிலை ஆதியில் அமெரிக்காவி லிருந்து கொண்டுபோய் மற்றத் தேசங்களில் பயிரிடப்பட்டதென்று பெரும்பான்மையோர் எண்ணுகிறார்கள். இப்போது அச் செடி உஷ்ணப் பிரதேசங்களில் எல்லாம் மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. இப்போது, புகையிலை ஆசியா கண்டத்தில் இந்தியா, சீனா, பிலிப்பயன் தீவுகள், ஜாவா, பாரசீகம், துருக்கி முதலான இடங்களில் மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. நமது சென்னை ராஜதானியில் கோதாவரி, கிருஷ்ணா நதிகள் பாயு மிடங்களிலும் தென் நாட்டு ஜில்லாக்களில் பெரும்பாலும் புன்செய் நிலங்களிலும் அமிதமாகப் பயிர் செய்யப்படுகின்றது. திண்டுகல், திரிசிராப்பள்ளி முதலான இடங்களிலும் பிலிப்பயன் தீவிலுள்ள மனில்லா நகரத்திலும் ஜாவாத் தீவிலும் பயிரிடப்படும் புகையிலையே மேலானதாகக் கொள்ளப்படுகின்றது.

3. புகையிலை புன்செய்ப் பயிர், புகையிலையைப் பயிரிடுவோர் நிலத்தைப் பாங்குபெற உழுது நில மெங்குஞ் செவ்வையாக நீர் பாயும் வண்ணம் பாத்தி கட்டி, அப் பாத்திகளை யடுத்துக் கால்வாய் வாங்கிச் சீர்படுத்தியபின், விதையைத் தூவி விதைத்து நீர் பாய்ச்சுவார்கள். விதைத்த விதைகள் நாலைந்து தினங்களில் முளைவிடும். அக்காலத்தில் ஈரங் குன்றுதபடி

காலமும் அளவும் அறிந்து தண்ணீர் பாய்ச்சுதல் வேண்டும். பின்பு இலைகள் அகன்று நீண்டு வளருங் காலத்தில், பூமியிலுள்ள மர வுணவு சாரத்தை வேறு பயிர்கள் உண்டுவிடாதபடி களைகளை எடுப்பார்கள். இலைகள் நீண்டு வளரும்போது அவைகளுக்குயாதொரு பழுதும் நேரிடாதபடி பாதுகாக்க வேண்டும். சமயங்களில் மிகுந்த காற்றினால் செடிக்குச் சேதம் நேரி-



டும். அதனால் கிருஷிகர் பயிரைச் சுற்றிலும் வேலி கட்டுவது முண்டு. புகையிலை நன்றாய் வளருங் காலத்தில் பூக்கள் உண்டாகும். இவைகளைக் கிருஷிகர் பெரும்பாலுங் கிள்ளி விடுவார்கள். அவ்விடத்தே வேறு சில இலைகள் தோன்றித் தழைக்கும். இப்படிச் செய்வதனால் இலைகளுக்கும் மிக்க மணமுண்டாகும். விதைக்கு விடப்பட்ட செடிகளில் மாத்திரம் பூவைச்

கிள்ளாமலே விட்டு வைப்பார்கள். இலைகள் முதிர முதிர வெண்ணிறமேறி முடிவில் பழுத்துப்போகும். அந்தக் காலத்தில் கிருஷிகர் செடிகளைப் பிடுங்கி ஓரிடத்தில் தொகுதியாக இரண்டொரு நாள் போட்டு வைத்து, பிறகு இளவெயிலில் உலர்த்திப் பதஞ்செய்து விற்பனை செய்வார்கள். பதஞ் செய்யப்பட்ட புகையிலை கருமை நிறமாக இருக்கும்.

4. புகையிலை நெடி நாற்றமும் காரமுமுள்ளதும் மயக்கந் தருவதுமாகிய இலை. இதனை நமது நாட்டாரில் அநேகர் பலவகையாக உபயோகிக்கிறார்கள். சிலர் இப் புகையிலையை அடைக்காயோடு அடைத்துக்கொண்டும், சிலர் பொடியாக்கி நாசியில் போட்டுக்கொண்டும், வேறு சிலர் சுருட்டிச் சுருட்டாக உபயோகித்துக்கொண்டும், அதன் கெடுதிக்கு ஆளாகிறார்கள்; இவை யனைத்திலும் சுருட்டாக உபயோகிப்பதே இதன் பயனென் றெண்ணி, இதற்குப் புகையிலை என்று பெயரிட்டனர் போலும்.

5. குளிர் மிகுந்த நாட்டில் உள்ளவர்களுக்கு இது இன்றியமையாத மருந்தாக இருக்கின்றது. ஆயினும், புகையிலையை எவ்வகையாக உபயோகிப்பினும் அது கெட்ட வழக்கமே. இதையும் அபினி கஞ்சா முதலான லாகிரி வஸ்துக்களையும் தீண்டாதிருப்பதே உத்தமமாம்.

19. நீர் நிலைகள்

கடவுளால் படைக்கப்பட்ட இவ்வுலகத்தில் மிகுதியாகப் பரந்துள்ளவைகளுள் நீர் ஒன்று. நீர் சற்றேறக்குறைய பூகோளத்தில் முக்காற் பங்கை மூடிக்கொண்டிருக்கிறது. இவ்வாறு நிலமெங்கும் நீர் பரவியிருப்பதை, ஜீவவர்க்கங்களிடத்தில் ஈசுவரனுக்குள்ள கருணையைக் காட்டுங் கண்ணாடி என்னலாம். சகலவிதப் பிராணிகளுக்கும் விருக்ஷ வர்க்கங்களுக்கும் இன்றி-



யமையாத பொருள்களில் நீர் ஒன்று. அன்றியும், இந் நீர் ஆறுகளாகவும் ஏரிகளாகவும் கடல்களாகவும் இருந்து, நிலத்தில் வாழும் பற்பல ஜாதியாரும் ஒருவரிடம் ஒருவர் போக்கு வரவு செய்வதற்கு முக்கிய சாதனமாக இருக்கிறது. மாறாக நீர்நிலையான சமுத்திரத்தைப் பூமியைச் சுற்றி அமைத்திருப்பதற்காகவும் பூமியில் பல இடங்களில் மழை பெய்து, செடி கொடி மரங்களும் பிராணிகளும் வாழ வகைசெய்திருப்பதற்-

காகவும் கருணாநிதியாகிய கடவுளிடத்தில் நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

'விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உண்ணின் றுடற்றும் பசி.'

2. பூமியிலுள்ள ஆறுகளைவிட ஆயிரமடங்கு பெரிய ஆறுகள் ஆகாயத்தில் அநேகம் இருக்கின்றனவாம். அவை வசந்தத் தூறல்களாகவும், கோடை மழைகளாகவும், மாரிக்காலத்துப் பெருமழைகளாகவும், பனிகளாகவும் பூமிக்கு வருகின்றன. இவ்விதமாக ஆகாயத்திலிருந்து வந்து பூமியை ஆதரிக்கும் நீர் சம நிலத்தில் ஐந்தாறடி ஆழம்வரையில் நன்றாய்ச் சுவறிப் போகின்றது.

3. இப்பொழுது நமக்குள்ள ஆறு ஏரி குளம் கிணறு முதலானவைகளில் நீர் இருப்பதற்கு மேகங்களே காரணம். மேகங்களெல்லாம், சூரியன் தனது உஷ்ணத்தினால் பல நீர்நிலைகளிலிருந்து ஆகாயத்தில் ஆகர்ஷித்துக் கொண்ட நீராவியின் பெருங் கூட்டமேயன்றி வேறன்று. அந்த நீராவி கடலிலிருந்து ஆகாயத்திற் சென்றவுடன், குளிர்காற்றுப் பட்டு மேகமாகிறது. ஆனபின், காற்று அவைகளை அடித்துக்கொண்டுபோய், மலை மேடு குன்று முதலிய இடங்களில் சேர்க்கின்றது. இப்படி இடம் மாறுகின்ற மேகம், பூமி பசுமையாகச் செழித்துச் சிங்காரமாயிருக்கும்படி, வயல்களிலும் மேய்சல் தரைகளிலும் பழத்தோட்டங்களிலும் மற்றுமுள்ள பலவிடங்களிலும் மழையாக இறங்குகிறது.

4. பளபளப்பான பனித்துளிகளாக வந்து விழுந்து, பூமியைக் குளிரச் செய்வதும் சமுத்திரமே. மழையாகப் பெய்வதும் சமுத்திரமே. புற்களை வளர்ப்-

பதும் அழகான பூஞ்செடிகளைப் புஷ்பிக்கச் செய்வதும் சமுத்திரமே. விருக்ஷங்களைப் பழங்களாலும் புலங்களைப் பயிர்களாலும் அலங்கரிப்பதும் சமுத்திரமே. நூல் நூற்றுத் துணி நெய்வதும் சமுத்திரமே. பல்லாயிரம் மனிதர்களாலும் குதிரைகளாலும் இழுக்க முடியாத பெரிய ரதங்களை நடத்துவதும் சமுத்திரமே. உத்திரங்களை அறுப்பதும் பூமியின் உள்ளே இருக்கும் நிலக்கரிகளைப் பெயர்ப்பதும் இருப்புக் குதிரைகளில் ஆவியாக எழுவதும் சமுத்திரமே. சமுத்திரம் நமக்கு ஆடையுடுத்திக் குளிர்ச்சி யுண்டாக்கி வேண்டுமிடத்திற்கு நம்மை ஏற்றிக்கொண்டு போவதும் அல்லாமல், நமக்காகப் பல வேலைகளையுஞ் செய்கின்றது. பனித்துளியும் உறைபனியும் மூடுபனியும் மழைத்துளியும் பெருமழையும் உண்டாவதற்கு முதற்காரணம் கடலே.

5. கடல்களிலாவது குளங்களிலாவது ஆறுகளிலாவது ஊற்றுக்களிலாவது மற்றெங்கேயாவது உள்ள நீர் ஒரே தன்மையானது; அதற்கு வேற்றுமை ஒருபோதுமில்லை. கடலின் நீர் மற்றெல்லா நீர்களுக்கும் வேறுபட்ட சுவையுடையதாக இருக்கின்றதேயென்றால், அது நீரிலுள்ள வேறுபாடு அன்று; அதனுடன் கலந்த பொருள்களின் சேர்க்கையால் உண்டான வேறுபாடே.

6. ஜலத்தில் பிராணவாயு, ஜலவாயு என்னும் இரண்டுவகை வாயுக்கள் கலந்திருக்கின்றன. நீரை நிறுத்துப் பார்த்தால் ஒருபங்கு ஜலவாயுவுக்கு எட்டுப்பங்கு பிராணவாயு வீதம் கலந்திருப்பது தெளிவாகும். பரிமாணத்திலோ பிராண வாயுவைவிட

ஜலவாயு இரண்டு மடங்கு இருக்கும். ஜலவாயு தீயை எளிதில் வளர்ப்பதற்கும், பிராணவாயு அதைத் தாங்குவதற்கும் முக்கியக் கருவியா யிருக்க, இவ்விரண்டும் கலந்ததான நீர் தீயை உடனே தணித்துவிடுவது வெகு விசித்திரமான செய்கையே யன்றோ?

7. சுத்த ஜலத்திற்கு நிறமும் ருசியும் மணமும் இல்லை; ஆயினும் அவ்விதமான நிலையில் அதைக் காண்பது அரிது. அது எப்போதும் பற்பல பொருள்களோடு கலந்தேயிருக்கும். பூமியின் சம்பந்தமடையாத மழைநீர், கலப்பொன்றும் இல்லாமையால் வடிகட்டின நீர்போல் அதிக லேசாயிருக்கும்; மற்ற நீர்கள் கடிப்பாகவே யிருக்கும்.

8. பூமியிலுள்ள நீர், முக்கியமாக நன்னீர் என்றும், உவர்நீர் என்றும் இருவகைப்படும். ஆறு ஏரி குளம் குட்டை கிணறு ஊற்று முதலான இடங்களிலுள்ள நீர் நன்னீரே. ஜலத்தின் உபயோகத்தைக் கெடுக்கும் உவர்ப்பு அவைகளில் கலந்திராமையால் அவை நன்னீர் எனப்படுகின்றன. கடல்களிலும் சமுத்திரங்களிலும் உள்ள நீர் உவர் நீரே. அதில் நூற்றுக்கு மூன்றரைப்பங்கு உப்புக் கலப்பாம். குறைந்தபக்ஷம் கடலெங்கும் ஆயிரம் அடி ஆழமுள்ளது என்று வைத்துக்கொண்டால் அதிலுள்ள உப்பு ஹிமாசலத்தில் மூன்றிலொரு பாகம் இருக்குமென்று கணக்கிடுகிறார்கள்.

9. பூமியின் மத்தியத்திற்கு அருகிலும் துருவத்திற்கு எதிரிலும் உள்ள கடல்களில், மற்ற இடங்களைப் பார்க்க உவர்ப்பு வெகு கொஞ்சம். ஏனெனில், பூமத்தியில் அதிக மழை பெய்வதனாலும் துருவத்திற்

கடுத்த தேசங்களில் உறைந்த பனிக்கட்டிகள் உருகு-வதனாலும் அங்குள்ள உவர்ப்பு குறைந்துபோகின்றது.

10. கடல்நீரில் உவர்ப்பு வஸ்துக்கள் கலந்து இருப்பதனால், அது மற்ற நீர்களைவிடக் கனத்திருக்-கின்றது. அதனால், அது கப்பல்கள் மிதந்து செல்ல மிகவும் அநுகூலமாக இருக்கிறது. கடல்நீர் இப்-போது ஓயாமல் அசைந்துகொண் டிருப்பதுபோல் இராமல், ஓரிடத்திலேயே நிலைத்துத் தேங்கியிருக்கு-மாயின், உலகத்துப் பிராணிகளுக்கு அளவற்ற கெடு-திகளை யுண்டாக்குமாம்.

20. தன் மொழியே தனக்குத் தீர்ப்பு

ஓர் ஊரில் குடியானவன் ஒருவனிருந்தான். அவன் பயிரிட்டு ஜீவனம் செய்பவன். அவனுக்கு ஒரே குமாரன் இருந்தான். அவன் சிறுவனாக இருந்த-போதே தகப்பனை இறந்துவிட்டான். அந்தத் தகப்-பன் இறக்கும் தருவாயில் தன் உயிர்த்தோழன் ஒரு-வனைத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, 'என் அன்பனே! நாம் இருவரும் உயிரும் உடலும், மலரும் மணமும் போல ஒத்து மனப்பட்டு இவ்வுலகில் நேசித்திருந்தோம். இப்போது, நான் உன்னைவிட்டுப் பிரியுங் காலம் வந்துவிட்டது. மரணத்தின்முன் எவர் வல்லமையும் பலிக்காது. நான் மரணத்திற்குச் சித்-தமாக இருக்கிறேன். ஆயினும், ஒன்று என் மனத்-தில் ஊசலாடுகின்றது. அது என்னவெனில், என் புத்திரன் மிகச் சிறியவன்; அவனை நல்வழிப்படுத்தி, எனக்குள்ள சிறிது திரவியத்தைக் காப்பாற்றி, அவ-னுக்குச் சரியான வயது வரும்போது அதை அவனி-

டம் ஒப்பிக்க ஒருவரையும் காணேன். நடுக்கடலில் திசை தப்பி மயங்கும் மாலுமிக்கு ஒரு துறை தோன்றினாற்போல், உன் விஷயம் என் மனத்தில் பட்டது. ஆதலால் உன்னை வரவழைத்தேன். நீ எனக்குப் பிறகு என் புத்திரனைப் படிப்பித்து, நல்வழிப்படுத்தி, இதோ இருக்கும் என் திரவியம் பதினாயிரம் ரூபாயில் உனக்கிஷ்டமானதை அவனுக்குக் கொடு; மற்றதை உன் சிரமத்திற்காக நீ வைத்துக்கொள்' என்றான். சிறிதுநேரத்திற் கெல்லாம் அவன் இறந்துபோனான்.

2. இறந்தவன் நண்பன் அந்தத் திரவியத்தைக் கைக்கொண்டு சிறுவனைக் கொஞ்சகாலம் படிப்பித்துவந்தான். சிறுவனும் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டு, வியவகாரதசையை அடைந்தான். பிறகு தன் தந்தை தேடிவைத்த திரவியம், அவனது நண்பனிடத்தி லிருப்பதைக் கேள்விப்பட்டு, அதைத் தனக்குக் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டான். அப்போது, இவன் தந்தையின் நண்பனுக்குத் தொகை முழுவதையும் அபகரித்துவிட வேண்டும் என்னும் பேராசை பிறந்திருந்தது. ஆயினும், பலர் தன்னை நகைப்பர், பலர் தன்னைப் பகைப்பர் என்று உலகத்தாருக்குச் சிறிது அஞ்சினான். ஆகையால், அச் சிறுவனை நோக்கி, 'அப்பா! உன் தந்தை இறக்குந் தருணத்தில் அவர் தேடிய பொருளை என்னிடம் ஒப்பித்தது மெய்யே; உன்னைப் படிப்பித்து, உனக்குத் தகுந்த வயது வந்த பிறகு, அந்த திரவியத்தில் எனக்கு இஷ்டமான அளவு உனக்குக் கொடுக்கச் சொன்னதும் உண்மையே; அவர் சொன்னபடியே உனக்குக் கொடுக்கிறேன்' என்று சொன்னான். பணத்தைக் காத்துவந்தவன், பதினாயிரம் ரூபாயில்

ஓராயிரம் ரூபாயைப் பையனுக்குக் கொடுக்கப்-போனான். பையன் திடுக்கிட்டு, மனம் பதறி, ஓர் ஆயிரம் ரூபாயைப் பெற்றுக்கொள்ளச் சம்மதியா-மல், நீதிபதியிடம் போய் முறையிட்டான்.

3. நீதிபதி அவனை வரவழைத்து, சிறுவன் முன் நிறுத்தி விசாரித்தார். அவன் நீதிபதியை நோக்கி, 'துரையே! இப் பிள்ளையின் தந்தை, பதினாயிரம் ரூபாயில் எனக்கு இஷ்டமானதை இவனுக்குக் கொடுக்கச் சொன்னார்; அப்படியே ஆயிரம் ரூபாய் இச் சிறுவனுக்குக் கொடுக்கிறேன்' என்றான். நீதி-பதி அவனது பேராசையை நன்குணர்ந்து தீர யோசித்துத் தீர்ப்புச் சொல்ல ஆரம்பித்தார்.

நீதிபதி — நல்லது இருக்கட்டும், இச் சிறுவனது தந்தை உன்னிடம் கொடுத்தது பதினாயிரம் ரூபாய்-தானே?

நண்பன் — ஆம் ஐயா, பதினாயிரம் ரூபாய்-தான்.

நீதிபதி — இறக்கும்போது அவன் உனக்கு என்ன சொன்னான்?

நண்பன் — எனக்கு இஷ்டமானதை இச் சிறு-வனுக்குக் கொடுக்கச் சொன்னான்.

நீதிபதி — நல்லது, நீ இந்தச் சிறுவனுக்கு எவ்-வளவு கொடுக்கச் சம்மதிக்கிறாய்?

நண்பன் — ஆயிரம் ரூபாய்.

நீதிபதி — நீ எவ்வளவு எடுத்துக்கொள்ள இஷ்-டப்படுகிறாய்?

நண்பன் — ஒன்பதினாயிரம் ரூபாய்.

நீதிபதி — ஆனால், உனக்கு இஷ்டமான தொகை ஒன்பதினாயிரமோ?

நண்பன் — ஆமாம், ஆமாம்.

நீதிபதி — 'நீ இஷ்டப்பட்டதைத் தன் மகனுக்குக் கொடுக்கச் சொன்னான் உனது நண்பன்; உனக்கு இஷ்டமானதோ ஒன்பதினாயிரம் ரூபாய்; ஆகையால், அதை இச் சிறுவனுக்குக் கொடுத்துவிட வேண்டும். மற்ற ஓராயிரத்தை நீ அடையவேண்டும்' என்று தீர்மானித்தார்.

4. அதைக் கேட்ட மோசக்காரன், 'பேராசை பெரு நஷ்டத்தை விளைத்ததே' என்று எண்ணி, மனம் வாடி வீடு போய்ச் சேர்ந்தான். சிறுவனோ ஒன்பதினாயிரம் ரூபாயைப் பெற்றுத் தன் தகப்பனையும் கடவுளையும் புகழ்ந்து, நீதிபதியை வாழ்த்திக்கொண்டே திரும்பிச் சென்றான்.

21. துஷ்ட மனைவி

ஔவையார் இன்னாரென்று நீங்கள் அறிவீர்களன்றோ? அவர் ஒரு மாது சிரோமணி; நமது நாட்டில் கல்வி கற்ற பெண்பாலார் அனைவரினும் சிறந்தவர். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை முதலான அற நூல்களை இயற்றினவர் நமது ஔவையாரே.

2. இந்த ஔவையார் ஒரு நாட்டிலும் ஒரு வீட்டிலும் தங்கி வசியாமல், பல இடங்களிலும் சென்று, கல்வி நலம் பரவுமாறு செய்துவருவதையே தம் வழக்கமாகக் கொண்டிருந்தனர். அவ்வாறு

செல்லுமிடங்களில் வேந்தர், வறிஞர் என்னும் வேற்றுமையின்றி, யாவரையும் ஒரு படித்தாக எண்ணி யடைந்து வந்தார். அவர்கள் அன்போடு இட்டது கூழேயாயினும் அருந்தி அகமகிழ்வர்.

3. ஒரு காலத்தில், ஔவையார் ஒரு கிராமத்துக்குப் போனபோது, அவருக்குப் பசிப்பிணி அதிகரித்தது. அதனால் அந்த மூதாட்டியார்,

'ஒருநா ளுணவை ஒழியென்றா லொழியாய்
இருநாளுக் கேலென்றால் ஏலாய் — ஒருநாளும்
என்னோ வறியாய் இடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது'

என்று தம்முடைய வயிற்றைப் பழித்துக்கொண்டே போய், அங்கோர் குடியானவன் வீட்டைக் கண்டு, தெருத் திண்ணையின்மேல் சோர்வுடன் சாய்ந்து கிடந்தனர்.

4. அக் குடியானவன் பசித்தோர் முகத்தைப் பார்க்கச் சகியாத பண்புடையவன். அவனுக்குத் துணைவியான மனைவியோ ஈகை இரக்கம் முதலான நற்குணங்கள் எள்ளளவும் இல்லாதவள். அவன் அவளுடைய அவகுணத்தைக் கண்டும் பேயோடு பழகி வாழ்பவன்போல், மிகவும் வெறுப்புடன் காலம் தள்ளிவந்தான்.

5. குடியானவன் தன் வயலுக்குப் போக வெளியே வந்தபோது, நரைத்த தலையும், பழுத்த உடலும், குழிந்த கண்களும் உடையவளாய், தன் தெருத் திண்ணையில் சாய்ந்து கிடந்த ஔவையாரைக் கண்டான். கண்டு, மனமிரங்கி, 'அம்மா! தாங்கள் யார்? தமக்கு என்ன நேரிட்டது?' என்று வினவினான்.

6. அவ் வினிய மொழியைக் கேட்ட ஔவையார் அவன் முகத்தை நோக்கி, 'அன்பனே! பசி காதை யடைக்கிறது; சிறிது நேரத்திற் பிராணனே பறந்து போய்விடும்போல் இருக்கிறது; கூழாவது ஒருகை கொடுத்தால், குடித்துக் களைதீர்வேன்' என்றார். அதுகேட்ட குடியானவன் மனமிரங்கி, 'ஐயோ! என்ன செய்வேன்! பிடாரியைப் பெண்டாகக்கொண்டிருக்கிறேனே' என்று நடுங்கினான். 'இனிய சொல்லைக் கொண்டு அவளை ஒருவாறு சரிப்படுத்துவோம். ஔவையின் ஸ்திதியை யெண்ணி, இக் கிழவியை பட்டினியோடே அனுப்புவதைவிட வேறு பாவம் இல்லை' என்று எண்ணிக்கொண்டான். தான் மாத்திரம் மனைவியிடம் சென்றான். சென்றவன் தன் மனையாளுக்குக் களிப்புண்டாக்க இச்சகம் பல பேசி, அருகிலிருந்து, அவள் தலையில் ஈருருவி, பேன் பார்த்து, காதருகில் தன் வாயை வைத்து, மெய்நடுங்க, நாக்குழற, உதடோடு உதடு அசைய, 'பெண்மணீ! பழுத்த கிழவி ஒருத்தி சிறிது கூழுக்கு உயிர்விடுகின்றாள்' என்றான்.

7. என்றவுடனே, அப் பெண்பேய் எழுந்து, பேரிடி முழக்கம்போல் பல கூறி இரைந்து, நாயே போல் உறுமி, 'அட பாவி! உனக்கு விருந்தாளியும் வேண்டுமா! "குடிப்பது கூழ், கொப்பளிப்பது பனிநீரா" உனக்கு அழுவதல்லாமல் ஊருக்கும் அறமா!' என்று கத்தி, கழுநீர்ப் பானையைக் கையிற் கொண்டு அவன் தலையில் அபிஷேகஞ் செய்து, திருவலகு கொண்டு வெண்சாமரை வீசி, தளைகெடுத்து ஆலவட்டம் பரிமாறி, பரிவேட்டை விடுவதுபோல் அவனை வீட்டிற்கும் தெருவிற்குமாகத் துரத்தித் துரத்தி

அடித்தாள். அது கண்ட ஔவையார், பெண்ணல்லாதவளைப் பெண்டாகக் கொண்டு திண்டாடும் அப்பேதைக்கு இரங்கி,

> ‘இருந்து முகந்திருத்தி ஈரொடு பேன் வாங்கி
> விருந்து வந்ததென்று விளம்ப — வருந்திமிக
> ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
> சாடினா ளோடோடத் தான்’

என்றொரு வெண்பாவைப் பாடினார். அதைக்கேட்ட குடியானவன் இவர் ஔவையார் என்றறிந்து, பின்னும் தன் மனைவி காலில் விழுந்து, விருந்தாக வந்து வருந்தும் கிழவியின் பெருமையைக் கூறி வேண்ட, அவளும் ஒருவாறு மனமிரங்கி ஔவையாரை வீட்டிற்குள் அழைத்து அன்னமிட்டாள். அப்போது, அத் தமிழ் மூதாட்டியார்,

> ‘காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
> மாணொக்க வாய்திறக்க மாட்டாதே — வீணுக்கென்
> என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
> அன்பில்லாள் இட்ட அமுது’

என்றொரு பாட்டைப் பாடினார். அப்பாட்டைக் கேட்ட குடியானவன் பரிந்து ஔவையாரைப் பணிந்தான். அதன்மேல் ஔவையார் அவன் இல்வாழ்க்கையைப் பழித்து, இப்படிப்பட்டவன் இல்லறத்தை விட்டுத் துறவறத்தைக் கைக்கொள்வதே நலம் என்னுங் கருத்தால்,

> ‘பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
> எத்தாலுங் கூடி யிருக்கலாம் — சற்றேனும்
> ஏறுமா றாக இருப்பளே யாமாயின்
> கூறாமற் சந்நியாசங் கொள்’

'ஏசி யிடலின் இடாமையே நன்றெதிர்
பேசு மனையாளிற் பேய்நன்று — நேசமிலா
வங்கணத்தி னன்று வலியபகை வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாவதே நன்று'

என்னும் அரிய பாக்களை இயம்பிச் சென்றனர். அவனும் அந்தத் துஷ்ட மனைவியை அகன்று, துறவறம் பூண்டு இன்ப மடைந்திருந்தான்.

22. பசியும் தாகமும்

'சேவித்துஞ் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும் — போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம்,'

என்னும் முதுமொழிக் கிணங்க, சாணளவு வயிறு வளர்க்க நாம் படும்பாடு இவ்வள வவ்வள வன்று; பசிப் பிணி ஒருவரையும் விட்டகன்று ; அப் பிணி வந்த காலத்தில் ஏதும் தோன்றாது ; யாதும் செய்ய முடியாது. இதனாலேயே, 'பசி ருசி யறியாது' என்னும் பழமொழியும் வழங்குகின்றது. 'பசித்தவன் தின்னாததில்லை, பகைத்தவன் சொல்லாததில்லை' என்றபடி, பசிப் பிணி நேர்ந்த காலத்து யாதேனும் ஓர் ஆகாரத்தை வயிற்றுக் கிட்டாலன்றி வாதை யடங்காது.

2. அடுப்பெரிவதற்கு விறகு இன்றியமையாத பொருளா யிருப்பது போல, பிராணிகளின் பசித் தழலைத் தணிப்பதற்கு ஆகாரம் அவசியமானது. நமது தேகம் தினமும் சில பொருள்களைக் கொள்ளுகின்றது ; சில பொருள்களைக் கழித்துத் தள்ளுகின்றது. நாம் ஆகாரம் உட்கொள்ளாமற் பலநாளிருந்-

தால் உயிர் நீங்குவது நிச்சயம். நாம் கண்ணை இமைக்கும் பொழுதும் விரல்கள் முதலிய உறுப்புக்களை அசைக்கும் பொழுதும் யாதேனு மொன்றை நினைக்கும் பொழுதும் நுட்பமான சில பதார்த்தங்கள் இடைவிடாது நமது தேகத்திலிருந்து கழிந்து கொண்டே இருக்கின்றன. ஆகாரமின்மை பசிக்கு முதற் காரணமென்றாலும், அதிக சந்தோஷம், அதிக துக்கம், வைத்தியம் முதலான சில காரணங்களால் பசி தோன்றாமலிருப்பது முண்டு. அபினி, புகையிலை முதலானவைகளைச் சிறிது உட்கொள்வதினாலும் பசி மந்தப்படும்.

3. அமெரிக்கா தேசத்தில் மந்ததரமான ஒருவகைப் பெரும் பாம்புகள் மாதமொன்றுக்கு ஒரே முறை இரைகொள்ளுமாம். சுறுசுறுப்புள்ள முயல் நாளொன்றுக்கு இருபது முறைக்கு மேலும் ஆகாரமுட்கொள்ளும். மிகக் குளிர்ச்சியான தேசங்களிலுள்ள பிராணிகளில் சில மாரிக்கால முழுதும் ஆகாரமின்றிப் படுத்துறங்கும். அக்காலத்தில் அவைகளின் அவயவங்களெல்லாம் அசைவற்றுக் கிடந்து இளைத்து ஒடுங்கிப்போம். சிலருக்கு வியாதியின் குணத்தால் அடங்காப் பசி எடுப்பதுமுண்டு. மனிதர் அவரவர் தேகத்தின் கூறுபாட்டிற்குத் தக்கவாறு சிலநாள் வரையில் ஆகாரமின்றி உயிர் வாழ்ந்திருக்கவுங் கூடும். சிலர் எவ்வகையான ஆகாரமுமின்றி ஒரு மண்டலத்திற்கு மேலும் ஜீவித்திருக்கிறார்கள்.

4. நமது தேகநிறையில் ஐந்தில் இரண்டுபங்கு குறைந்துவிட்டால் உடனே மரணத்திற்கு இடமுண்டாகும். ஆகாரமில்லாவிடில், மற்றவைகளுள் சிலவற்றினால் ப்ரகாரமாக ஆதாரங்களில் ஐந்தில்

இரண்டுபங்கு கழிந்துவிடும் ; தவளைகளுக்கு மாத்திரம் அவ்வாறுவதற்கு 23 வாரஞ் செல்லுமாம். சாதாரணமாக மிருகங்களின் தேகத்திலிருந்து நாள்தோறும் 24 இல் ஒரு பங்கு கழியுமாகையால் தேகத்தின் 23 இல் ஒரு பங்கு எடையுள்ள ஆகாரம் நாளொன்றிற்குத் திரேகத்திற்குள்ளே செல்லாவிடின் வரவர தேகம் தேய்ந்து மெலிந்துபோம்.

5. சாகபக்ஷணஞ் செய்யும் மிருகங்களுக்கு, மாம்ஸ பக்ஷணஞ்செய்யும் மிருகங்களைவிட அடிக்கடி ஆகாரம் வேண்டும். இதனாலேயே ஆடு மாடு முதலான மிருகங்கள் எப்பொழுதும் தீனி தின்றவண்ணமே யிருக்கின்றன. ஊனுண்டு உயிர்வாழும் பிராணிகளுக்கு எப்பொழுதும் ஊன் அகப்படாதாகையால், ஆகாரங் கிடைத்த காலத்தில் அவை ஒரே முறையாக ஆவலோடு அருந்திவிட்டு, சிலநாள் வரைக்கும் பசி யறியாதிருக்கும். சிலந்தி பாம்பு முதலான சில ஜந்துக்கள் ஆகாரமின்றிப் பல மாதங்கள் வரையிலும், சில மிருகங்கள் பல வருஷங்கள் வரையிலும், உயிர் வாழ்ந்திருந்ததாக அநேகர் எழுதியிருக்கின்றனர். ஆயினும், அவையனைத்தும் முற்றும் நம்பக்கூடியவை அல்ல. சிறிதும் ஆகாரமில்லாவிட்டால், 9 நாளில் இறந்துபோகும் பறவைக்குத் தண்ணீர் மாத்திரங் கொடுத்துக்கொண்டு வந்தால், இருபது நாள் வரையில் உயிரோடிருக்கும். பஞ்சம், முற்றுகை, கப்பற் சேதம் முதலான கஷ்டங்கள் நேர்ந்த காலத்தில் ஆகாரமின்றி மெலிந்து நலிந்தவர்களுக்கு நல்ல உணவுப் பொருளைக் கொடுத்து முன்னிருந்த நிலைமைக்குக் கொண்டுவாராவிடின், அவர்களில் பெரும்பான்மையோருக்கு உயிர்ச் சேதம் உண்டாகும்.

6. பசியின் கொடுமையால் தேகம் மெலிந்து, முகம் வெளுத்து, கண் பஞ்சடைந்து, குரல் கம்மி, அறிவு கலங்கி, இறுதியில் மரணம் உண்டாகும். மிகுந்த கவலை அல்லது சந்தோஷம் ஜீர்ணசக்தியையும் இரத்தவோட்டத்தையும் கெடுத்து, நோயில்லா உடம்புக்கு நோயை வருவிக்கும். வயிற்றில் ஆகாரமில்லாவிடின் ஜடராக்னி ஜலாசயத்தையும் அன்னாசயத்தையும் எரித்துப் பசியை உண்டாக்குகின்றது.

7. தாகமும் சற்றேறக்குறையப் பசியை யொத்ததே. தொண்டையும் வாயும் உலர்ந்து போவதினாலே தாகமெடுக்கிறது என்பது யாவரும் அறிந்த விஷயமே. நமது சரீரத்தில் வேண்டிய அளவிற்கு ஜலமிருந்தால் நமக்குத் தாகமுண்டாகாது; அந்த அளவிற்குக் குறைந்திருந்தால் நீர்வேட்கை யுண்டாகும். அதிக தாகமுடைய ஒருவன் தண்ணீரை அருந்தாவிடினும், அவன் நரம்பின் வழியாகத் தண்ணீரை உடம்பிற்குள்ளே செலுத்தினால் உடனே தாகந் தீரும். அன்றியும், ஆகாயம் குளிர்ந்திருப்பதினாலும் ஸ்நாநம் பண்ணுவதினாலும் தாகமடங்கும். இப்படிச் செய்வதினால் ஜலம், வேண்டிய அளவிற்கு வெகு விரைவாகத் தேகத்திற்குட் சென்று தாகத்தை யடக்கித் தாகசாந்தியை உண்டாக்கும்.


8. நாம் சுவாசம் விடுகையில் ஒவ்வொரு மூச்சின் வழியாயும் உள்ளிருக்கும் ஜலம் ஆவியாகப் பரிணமித்து வெளியே வருகின்றது. குளிர்ச்சியான காலங்களில் இந்த ஆவி புகைபோல் வெளிப்படுவதை நாம் நன்றாகக் காணலாம். நமது தேகத்தின் மேற்புற மெல்லாம் சல்லடைக் கண்கள்போல வெகு நுட்பமான துவாரங்கள் அமைந்திருக்கின்றன.

இத் துவாரங்களின் வழியாகவே உட்புறத்திலுள்ள ஜலம், தோலின் அடிப்புறத்திலுள்ள ஸ்வேத கோளங்களில் தங்கியிருந்து, அவற்றோடு தொடுக்கப்பட்டிருக்கும் ஸ்வேதக் குழாய்களின் வழியே வியர்வையாகக் கழிகின்றது. ஒரு மனிதன் தன் மேலுள்ள இந்தக் குழாய்களை மாத்திரம் ஒன்றின்பின் ஒன்றாக ஒழுங்குபெற எடுத்து வைக்கக்கூடுமாயின், அக்குழை சுமார் 28 மைல் நீளத்திற்குக் குறையாதாம்.

9. நமது தேகத்தை நூறு சம பாகங்களாகப் பகுத்தால் அவற்றுள் எழுபது பங்கு நீராக நிற்கும். ஒருவன் ஆகாரமின்றிச் சில நாட்கள் மட்டும் பிழைத்திருக்கக் கூடுமாயினும், தண்ணீரின்றி ஜீவித்திருப்பது கூடாது. ஆகாயம் அதிக சீதளமாக இருந்தாலன்றி எவனும் மூன்று நாட்களுக்கு மேல் நீர் பருகாமல் பிழைத்திருப்ப தரிது. அதெப்படி யென்பீர்களோ, தாகத்தினாலே வாயும் அண்ணமும் தொண்டையும் உலர்ந்துபோய், உமிழ்நீர் மட்டுப்படும். வாயெல்லாம் பசைகொண்டு பல்லும் உதடும் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்வதோடு குரலும் கம்மிவரும். இவையேயன்றி வெந்தழல்போல் கண் சிவந்து, மூச்சு விடமுடியாமல் சுரநோய் கொண்டவர்களைப் போல் பெருமயக்கம் உண்டாகும். தூக்கங் கெட்டு அடிக்கடி பேய்க்கனவும் தோன்றும்.

23. ஆலமரம்

விருக்ஷ வகைகள் எல்லாவற்றிலும் பெரியது ஆலமரம். அதன் அடிமரம் மிகப் பருத்திருக்கும். ஒவ்வொரு கிளையிலும் அநேக விழுதுகள் கீழிறங்கி பூமியில் வேரூன்றி நிலைத்து நிற்கும். அவ்விழுதுகள் அவ்வாறு வேரூன்றித் தனித்தனி ஒவ்வொரு தூண்போல் நின்று தாங்குவதனால், தாய் மரமும் அதன் கிளைகளும் மிக்க



உறுதியடைந்து சுமார் ஒரு மைல் அளவிற்கும் பரந்து வளர்கின்றன. அப்படிப் பரந்து வளர்ந்த ஆலமரம், பல தூண்கள் நிறுத்திக் கட்டிய பெரியதோர் மாளிகையை ஒத்து விளங்கும். ஆலமரத்தின் பட்டை கரடு முரடானது. மரத்தின் பட்டையைச் சீவினால் சீவின இடத்தில் பால்வடியும். ஆலிலை உருவத்-

கில், நமது விரல்களை இடைவெளியின்றிச் சேர்த்து நீட்டி உள்ளங்கைப் புறமாகப் பார்த்தால் இருப்பதை ஒத்திருக்கும். இலையின் உட்புறம் வழுவழுப்பாகவும், பின்புறம் நரம்புகளோடிச் சொரசொரப்பாகவும் இருக்கும். இலையின் அடியில் சுமார் ஓரங்குல நீளமுள்ள காம்பு ஒன்று உண்டு. ஆலங்காய் ஒரு கோலியின் அளவாக செம்மை நிறம் உடையது; காய்க்குள் கசகசா அல்லது மீன் சினையைப்போல் சிறியவையான விதைகள் நிறைந்திருக்கின்றன. இவ்வளவு சிறிய விதையிலிருந்து மிகப் பெரியதும், அதிக உபயோகமுள்ளதுமான மரமொன்று தோன்றுவது எவ்வளவு ஆச்சரியகரமானது! பிள்ளைகளே, இம்மரத்தைப்பற்றி நீங்கள் நறுந்தொகையில் வாசித்திருக்கும் பாடலை நினைத்துக்கொள்ளுங்கள். அது எது என்பீர்களோ —

'தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே'

என்னும் பாடல்தான். ஆலமரம் அழுத்தமான மரமன்று; ஆதலால் கட்டடங்களுக்குப் பலகைகளாக அறுக்கவும், தூலம் தூண் முதலானவைகளாகச் செய்துகொள்ளவும் உதவுகிறதில்லை. இலை, குருத்து முதலானவைகளைக் கிள்ளினால், கிள்ளின இடத்தே பால் வடியும்.

2. ஆலமரத்தின் வேர்கள் பூமிக்குள் பல பக்கங்களிலும் ஓடி ஆழப் பாய்ந்திருப்பதனால் பலமான

காற்று வீசி யடித்தாலும் மரம் நிலை பெயர்ந்து விழுந்து விடாமல் நிலைத்து நிற்கும். கிளைகள் மிகவும் நீண்டு வளர்ந்தாலும் அவைகளிலிருந்து உண்டாகும் விழுதுகள் பூமியிலிறங்கித் தூண்கள்போல் நின்று அக் கிளைகளைத் தாங்கும்.

3. மரங்களில் சில மேற்புறமாக வளர்கின்றன. அவை, மா, பலா, பூவரசு முதலானவை. ஏனெனில், இம் மரங்களின் மேற்புறம் மெதுவாகவும் உட்புறம் கடினமாகவும் காணப்படும். சில மரங்கள் உட்புறமாகவே வளர்கின்றன. அவை, பனை, தென்னை, கமுகு முதலானவை. ஏனென்றால் இம்மரங்களின் மேற்புறம் கடினமாகவும் உட்புறம் மிருதுவாகவும் இருக்கின்றன. ஆலமரம் மேற்புறத்தில் வளரும் விருக்ஷவர்க்கத்தில் சேர்ந்தது.

4. ஆலமரம் ஆசியா கண்டத்தில் இந்து தேசத்தில் மாத்திரம் அமிதமாக இருக்கிறது. கிளைகளை வெட்டிவிட்டு அடிமரத்தை மாத்திரம் விட்டுவிட்டால் மறுபடியும் தளிர்க்கும். சிலவகை மரங்களைப்போல் ஆலமரம் தளிர்ப்பது உண்டு. பறவைகள் ஆலங் கனியைத் தின்று,வேறு மரத்திற்போ யமர்ந்து எச்சமிட்டால், அதன் மலத்திலுள்ள ஆலம் விதை, விழுந்த மரத்தில் தங்கி, முளைத்து வேரூன்றி அதனோடு சேர்ந்து வளரும். ஆலும் வேம்பும் சேர்ந்து வளர்ந்திருப்பதை இந்தியாவில் பலவிடங்களில் காணலாம்.

5. வெய்யிற்காலத்தில் மனிதர்களும் மிருகங்களும் தங்கி இளைப்பாறுவதற்கு ஆலமரம் குளிர்ந்த நிழலைக் கொடுக்கும்.

'ஆலிலை பூவுங் காயும் அளிதரு பழமு முண்டேல்
சாலவே பட்சி சாலந் தன்குடி யென்றே வாழும்
வாலிபர் வந்து தேடி வந்திப்பார் கோடி கோடி
ஆலிலை யாதி போனல் அங்குவந் திருப்பா ருண்டோ'

ஆலிலையைத் தைத்துப் போஜன பாத்திரமாக உபயோகித்துக் கொள்கிறோம். வேடர், ஆலம்பாலைப் பிசினக்கிப் பறவைகளைப் பிடிக்க உபயோகிக்கிறார்கள். ஆலமரத்தின் பால், பிசின், விதை, பட்டை முதலானவைகள் ஔஷதங்களுக்கு உதவும்.

6. ஆலம் விழுதைப் பற்குச்சியாக உபயோகிப்பது நல்லது. இவ் வுண்மையை, 'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்னும் பழமொழியினுல் அறியலாம்.

24. அணில்

அணில், நாற்கால் பிராணி வர்க்கத்தில் ஒன்று. அது சாதாரணமாக, காட்டகங்களிலும் தோட்டங்களிலும் வீட்டையடுத்த விருக்ஷங்களிலும் வசிக்கும்.

2. அணில், சிறிய உருவமும் அழகான அங்கமும் உள்ளது. அணில் எப்பொழுதும் களிப்புடன் சோம்பலற்று இருப்பதைக் காணலாம். அதனுல் அதிக சுறுசுறுப்புள்ள சிறுவர்களை அணிலுக்கு ஒப்பிடுவது வழக்கம்.

3. அணில் பூர்ண வளர்ச்சி யடைந்தால் சிறு பூனையை அல்லது குழிமுயலை ஒத்திருக்கும். அதன் தேக முழுதும் மெல்லிய உரோமம் அடர்ந்து குவிந்திருக்கும். அணில் பெரும்பாலும் சாம்பல் நிறமாக

இருக்கும். அதன் வயிற்றுப் புறத்திலுள்ள உரோமம் மிகவும் வெண்மையானது. அணிலின் உடல் சிறுத்து, எட்டு முதல் பத்தங்குலம் வரையில் நீண்டிருக்கும். அதன் வால் உடலைவிட மயிர் அடர்த்தாக இருக்கிறது. அது தன் தேகத்தின் நீளத்தைவிட நீண்டிருப்பதும் உண்டு. சாதாரணமாக அணில் தன் வாலை மேற்புறமாக உயர்த்திக் கொண்டு, அங்குமிங்கும் ஓடித் திரியும்.



4. அணிலின் தலை உருண்டை வடிவானது. அதன் காதுகள் மேலுக்கு உயர்ந்தும் முனை குவிந்தும் இருக்கும். கண்கள் பெருத்தவை. ஒளி மிகுந்தவை. பூனை நாய் முயல் முதலான பிராணிகளுக்கு இருப்பதுபோல அணிலுக்கும் மீசைமயிருண்டு. அம் மீசைமயிரின் உதவியால் அது நெருக்கமான இடுக்கிலும் வழியுணர்ந்து போக்குவரவு செய்யும்.

5. அணில், முயலின் இனத்தைச்சேர்ந்த பிராணி. இவ்வினத்திற்கு இயற்கையாக அமைந்துள்ள முன்னம் பற்கள் அணிலுக்கும் இருக்கின்றன. இப் பற்களின் உதவியால் அணில் கடினமான கவசமுள்ள கொட்டைகளையும் கொத்தித் தின்னும். இம் முன்னம் பற்களேயல்லாமல், உணவை மென்று தின்பதற்கான அகன்ற தட்டையாய்ப் பற்களும் அமைந்திருக்கின்றன.

6. கொட்டைகளைக் கோதும் பற்கள், தச்சனது உளியைப்போல் நீண்டு அகன்று கூர்மையாக இருக்கும். அப் பற்கள் அணிலுக்கு மிகுதியும் உபயோகப்படுவதால் அவை தேய்வதுமில்லை, கூர்மை குறைவதுமில்லை. அப் பற்களின் மேற்புறத்தைப் பார்க்கிலும், அடிப்புறம் விரைவில் தேய்ந்துவிடுமாயினும், அதனால் கெடுதி யொன்றும் நேரிடாது. அணிலின் பற்கள் அதன் வாழ்நாள் முழுவதும் வளர்ச்சியடைவதனால் தேய்ந்த பாகம் கூடிக்கொண்டே வருகின்றது. அணிலுக்கு மேலுதடு பிளவுபட்டிருப்பதனால், அதன் முன்னம் பற்கள் மேலுதட்டினின்றும் வெளிப்பட்டு உதவுகின்றன.

7. அணிலின் முன்னங் கால்கள், பின்னங் கால்களைவிடக் குறுகியவை. அதனால், அது பூமியின்மேல் நன்றாக நடப்பதில்லை. முயலைப்போல் குதித்துக் குதித்துப் பாய்ந்தோடும். அணிலின் முன்னங்கால் ஒவ்வொன்றிலும் ஐந்து விரல்களும் பின்னங்கால் ஒவ்வொன்றிலும் நான்கு விரல்களும் இருக்கின்றன. அவ் விரல்களின் நுனியிற் கூரிய நகங்கள் அமைந்திருக்கின்றன. அணில் விதைகளையாவது கனியைக் கதிரையாவது தின்னும்போது தன் பின்னங்கால்களின்

மேல் உட்கார்ந்து, வாலை வளைத்து உயர்த்திக்கொண்டு முன்னங்கால்கள் இரண்டினாலும் பற்றிக்கொண்டு தின்னும். இதனால் அதற்கு அதன் முன்னங்கால்கள் கைகளாக உபயோகப்படுவதை அறியலாம்.

8. பெரும்பாலும் அணில் தரைமீது தவழ்ந்து செல்வதில்லை. பறவைகளைப்போல் மரங்களில் வசிக்கிறது. ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குக் கிளைகள் மூலமாகப் பாய்ந்து செல்லும். இவ்வாறு அது தரையில் இறங்காமலே நெடுந் தூரம் மரக் கிளைகளிலேயே செல்லும் சுபாவமுடையது.

9. அணில் உருவத்திற் சிறியதாக இருப்பதனால் விரைந்து விருக்ஷங்களின் மேலே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எளிதிற் பாயும் தன்மையைப் பெற்றிருக்கின்றது. பக்ஷிகளைப்போல் பறக்குஞ் சக்தி அதற்கு இல்லையாயினும், அது தன் வாலை எற்றவாறு அசைத்து அசைத்து குறித்த இடத்தில் தப்பாமல் தாண்டிக் குதிக்கும். சிறு கொடிகளின்மேல் செல்லும்போதும் அது தவறி விழுந்துவிடாதபடி தன் வாலினுதவியால் உடலின் பாரத்தைச் சமப்படுத்திக் கொள்கின்றது.

10. வேறு சில நாடுகளில் வேறு வகையான அணில் உண்டு. அதற்குப் பறக்கும் அணில் என்று பெயர். அதற்கு அப் பெயர் இருந்தும், அது உண்மையில் பறக்கும் சக்தி யுடையதன்று. அது சாதாரணமாக, மரங்களின் இடையிலுள்ள இடைவெளியில் யாதோர் ஆதாரமின்றித் தாவிச் செல்லும். இதன் இரு பக்கங்களிலும் முன்னங் காலுக்கும் பின்னங் காலுக்கும் இடையில் அமைந்துள்ள மிருதுவான தோலே தாவிப் பாய்வதற்குத் தக்கவாறு உதவுகிறது.

11. மரப் பொந்திலும் கவர்கிளைகள் இணைந்துள்ள இடுக்குகளிலும் அணில் தன் கூட்டை அமைக்கும். இது சருகு, புல், கொடி முதலானவற்றைக் கொண்டு கூடுகட்டி, கந்தை, மயிர், பஞ்சி, பாசி முதலானவைகளை வைத்து உள்ளீடான இடத்தை மெதுவாக்கும். அணில் பெரும்பாலும் நாலைந்து பிள்ளைகளை யீனும். அணிற் பிள்ளைகள் பிறந்த ஒன்பது நாட்களுக்குப் பிறகு கண் திறக்கும்.

12. மாரிக்காலத்தில் அணில் தன் கூட்டில் நெடுநேரம் நித்திரை செய்யும். பசி அதிகமானால் எழுந்து அங்கும் இங்கும் பாய்ந்தோடி இரையைத் தேடித் தின்று, திரும்பி வந்து உறக்கங் கொள்ளும்.

13. அணில் பெரும்பாலும், கதிர், கொட்டை, பழவகை, மரப்பட்டை, தளிர் முதலியவைகளை இரையாகக் கொள்ளும். கனி வர்க்கங்கள் அமிதமாகக் கிடைக்கக்கூடிய வேனிற்காலத்தில் மாரிக்காலத்திற்கு உபயோகமாகும்படி சில விதைகளையும் கொட்டைகளையும் சேமித்துக்கொள்ளும்.

14. சிலர் அணிற் பிள்ளையைக் கூட்டில்வைத்து வளர்ப்பதுண்டு. சித்திரம் எழுதுகிறவர்களுக்கு வேண்டிய தூரிகை (Brush) அணிலின் வால்மயிரால் கட்டப்படுகின்றது.

25. வாக்கியம்

மனிதர் தங்களுடைய கருத்தை மற்றொருவருக்குத் தெரிவிப்பதற்குப் பாஷை இன்றியமையாததாக இருக்கின்றது. பாஷைக்கு ஒலிவடிவென்றும், வரிவடிவென்றும் இருவகை வடிவுண்டு. ஒலிவடிவு பேசுவது, வரிவடிவு எழுதுவது. எழுதுவதற்கு எழுத்தே முதற்காரணமாம். அவ்வெழுத்தினால் சொற்களும், சொற்களால் வாக்கியங்களும் ஆகின்றன.

2. ஒரு கருத்தைப் பூரணமாகத் தெரிவிப்பதற்கு அமைத்த சொற்களின் தொடர்ச்சியே வாக்கியம் எனப்படும். அர்த்தம் சம்பூர்ணமாகாமல் பலசொற்கள் சேர்ந்து நிற்கலாம். எப்படியெனில்:

‘நான் வீட்டை யடைந்து தந்தையைக் கண்டு’ என்பதில் பல சொற்கள் ஒன்றுசேர்ந்து நின்றன. கருத்து முற்றுப் பெறாமையால் அவை வாக்கியமாகவில்லை.

‘நான் வீட்டையடைந்து தந்தையைக் கண்டு பேசினேன்’ என்பதில் ஒரு விஷயம் முடிவுற்றதென்பது விளங்குகின்றது. அதனால், இவை வாக்கியத்தின் லக்ஷணம் பெற்றது என்கிறோம்.

3. எந்த வாக்கியத்திலும் முக்கியமாய் மூன்று அங்கங்கள் நிற்கும். அவைகள்,

1. ஒரு தொழிலைச் செய்ய முயல முன் நிற்கும் முதல்வன்,

2. அவன் செய்யுந் தொழில்,

3. அத் தொழிலின் பயனை ஏற்கும் பொருள் என்பனவாம்.

(1) காரியம் செய்ய முதன்மையாக நின்றவனை எழுவாய் என்றும்,

(2) அவன் செய்த தொழிலைப் பயனிலை என்றும்,

(3) அவன் செய்த தொழிலின் பயனை யடைந்த பொருளைச் செயப்படு பொருள் என்றும் இலக்கண நூல் கூறுகின்றது.

எழுவாய் என்பது (எழு = உண்டாகும், வாய் = இடம்) உண்டாகுமிடம் எனப் பொருள்படும். அதாவது, வாக்கியம் உண்டாவதற்கு முதலிடம் என்பதாம்.

பயனிலை என்பது (பயன் = பிரயோஜனம், நிலை = நின்றவிடம்) பிரயோஜனம் நின்றவிடம் என்பதாம். அதாவது, எழுவாய் செய்த காரியத்தின் நிலை என்பதாம்.

செயப்படு பொருள் என்பது (செயப்படு = செய்தலை யடையும், பொருள் = வஸ்து) கர்த்தா செய்யும் காரியத்தின் பயனை யடையும் பொருள் என்பதாம்.

வாக்கியத்தின் பிரிவுகளாகிய மேற்கூறிய மூன்றில் எழுவாயும், பயனிலையு மில்லாமல் வாக்கியம் பிறக்காது. செயப்படுபொருள் வருதலுமுண்டு வாராமையு முண்டு. இது எழுவாய் செய்யுஞ் செய்கையின் தன்மையைப் பொறுத்தது.

'முருகன் வந்தான்' என்னும் வாக்கியத்தில் கர்த்தாவும் அவன் செய்த தொழிலுமே காணப்படுகின்றன. அவையாவன —

முருகன் — எழுவாய், வந்தான் — பயனிலை.

4. சில வினைச்சொற்களுக்குச் செயப்படு பொருள் வேண்டும். வேறு சில வினைச்சொற்களுக்குச் செயப்படு பொருள் வேண்டியதில்லை. செயப்படு பொருளை வேண்டி நிற்கும் வினைச்சொல்லைச் **'செயப்படு பொருள் குன்றாவினை'** என்றும், செயப்படுபொருளை வேண்டாமல் வரும் வினைச்சொல்லைச் **'செயப்படு பொருள் குன்றியவினை'** என்றும் சொல்கிறோம். **யாரை** அல்லது **எதை** என்னும் பதங்களில் ஏற்ற ஒன்றை வைத்துக் கேள்வி கேட்டால், விடை வரக்கூடிய வினைகள் செயப்படு பொருள் குன்றாத வினைகளாம்.

படித்தான் — (எதைப் படித்தான் ?—)

தைத்தாள் — (எதைத் தைத்தாள் ?—)

மேய்ந்தது — (எதை மேய்ந்தது ?—)

பார்த்தான் — (யாரைப் பார்த்தான் ?—)

இந்தக் கேள்விகள் முறையே, பாடத்தை, சட்டையை, புல்லை, சினேகனை முதலானவைகளைப் போன்ற **விடையை** அவாவி நிற்கின்றன. ஆகையால், இவை செயப்படு பொருள் குன்றாவினைகளாம்.

5. யாரை, எதை என்னும் பதங்களில் ஏற்ற ஒன்றை வைத்து வினவினால், விடை பெறக்கூடாதவைகள் செயப்படு பொருள் குன்றியவினைகளாம்.

6. நடந்தேன், வந்தான், நின்றீர், தூங்கினான் இவைகளை யாரை, எதை என்பவைகளில் ஒன்றைக்கொண்டு கேள்வி கேட்டால், விடை யொன்றும் ஏற்படாது. ஆகையினால், இவைகள் செயப்படு பொருள் குன்றியவினைகளாம். இதனால், செயப்படு பொருள் குன்றியவினைக்குச் செயப்படு பொருள்

கிடையாது என்பதும், செயப்படு பொருள் குன்றா வினைக்குச் செயப்படு பொருள் உண்டென்பதும் உறுதியாகின்றன.

7. எழுவாயும், செயப்படு பொருளும் பெயர்ச் சொற்களாகவும், பயனிலை வினைச்சொல்லாகவும் இருக்கும். அதனால், ஒரு வாக்கியத்தில் (1) எழுவாய், (2) பயனிலை, (3) செயப்படு பொருள் ஆகிய மூன்று உறுப்புக்களைக் காணவேண்டுமாயின், முதலில் பயனிலையையும் பின் எழுவாய் செயப்படு பொருள்களையும் ஆராய்வதே ஏற்ற முறையாகும். ஒரு வாக்கியத்தில் முற்று வினையே பயனிலையாகும் ஆதலால், முதலில், பயனிலையை எடுத்துக்கொண்டு அதன் முன் யார் அல்லது எது என்பவைகளில் ஏற்ற ஒன்றை வைத்து வினவினால், வரும் விடையே எழுவாய்; அவ்வினைக்கு முன் யாரை, எதை என்பவைகளில் ஏற்றவொன்றை வைத்து வினவினால் வரும் விடையே செயப்படு பொருளாம்.

8. 'ராமன் மிதிலையில் ஜானகியை மணந்தான்' என்னும் வாக்கியத்தில், 'மணந்தான்' என்பது முற்று வினையாதலால், **மணந்தான்** என்பதே **பயனிலை.** மணந்தான் என்பதன்முன் 'யார்?' என்கிற வினாப் பெயரை வைத்து வினவினால், வரும் விடை **ராமன்** என்பது. ஆகையால், **'ராமன்'** என்பது **எழுவாய்.** மணந்தான் என்பதன் முன் **'யாரை?'** என்பதை வைத்து வினவினால், வரும் விடை 'ஜானகி' ஆதலால், **ஜானகியை** என்பது செயப்படு பொருள்.

9. உயர்திணைக்கு 'யார், யாரை' என்பவைகளையும், அஃறிணைக்கு 'எது, எதை' என்பவைகளையும் வைத்துக் கேள்விகள் கேட்கவேண்டும்.

26. பாடல்

கொக்கும் நண்டும்

மீனொன்றையு மேநின்றுடல் மிகவேவளர் கொக்கு
தானங்கொரு பால்நண்டு தனைக்கண்டிரை கொள்ள
ஞானந்தரு மோனங்கொடு நண்ணும்படி கண்டப்
பானண்டதை நீயிங்குறை பண்பேதுரை யென்ன. (1)

என்னென்றுரை செய்வேனினி யானெங்ஙன முய்வேன்
கொன்னுந்திய வலைகாரர்கள் கூடிக்குள மேகின்
மன்னுந்தட மெல்லாமிக வளைந்தே வலைவீசிச்
சின்னஞ்சிறுபொடி மீன்முதற் சேரப்பிடிக் தாரே. (2)

இந்தக்குளம் நாளைக்கென எண்ணிக் கொடுபோனார்
அந்தப்படி வந்தேபிடித் தவர்காவினி லெடுத்தே
சந்தைக்கடை கொடு மீன்விலை தானேயென விற்பார்
எந்தப்படி யிவர்கட்புல தெனவெண்ணி யிருந்தேன்.

அந்தப்பழி காரர்வரு முனமேயொரு பாயம்
சிந்தித்தன னப்படி செய்தாலவை யுய்யும்
எந்தப்படி யானும் மறைத் திங்கேவரு வாயேல்
இந்தக்குளம் விட்டோர்குளம் எய்தும்படி செய்வேன்

என்றேபக ராசன்சொல இந்நண்டதை நம்பிச்,
சென்றேபல மீனோடிரை செயவேயவை கூடி, நன்றே
யென வரவேயோர் நண்டக் கொன்றேகொண் டேகிக்,
கொன்றேசில தின்றே சிலகொடும்பாறையி லுலர்த்தி

அலைவென்றவை தனையுண்டிட அதையுங்கொடு செலவந்
நிலைமெங்கணு மீனென்புகள் நிறைகொண்டது கண்டே
நலதிங்கிது பலமீனையும் நலிகின்றது நமையும்
தொலைந்தது நாமிங்கிது கொலுமுன் கொலுவோமே.

நம்மால்வரு பிழையேயிது நாமும்மந்த மீன்போல்
சும்மாவிருந் தனமேற்கொளு மதிலேயொரு சூழ்ச்சி
எம்மால்வகை வருமாறினிச் செய்வோமென வெண்ணி
அம்மாபகன் கழுத்தைக் கவையடியா னெருக்கியதே.

நெருக்குண்டற வீழ்ந்தேபகம் நீங்கிற்றுயி ரலவன்
இருக்குந்தல மேகித்தன தினத்தோடிருந் ததுவே
செருக்கும்பகை பெரிதாகிலுஞ் சிலதந்திர வகையால்
முருக்கும்படி நினைந்தாலதில் முடியாததது முளதோ.()

(பஞ்சதந்திரப் பாடல்)

செய்யுட் பாடங்கள்

ஔவையார் அருளிச்செய்த

I. நல்வழி

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள் — எண்ணுங்
கால், ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர்சொல்
லும், தீதொழிய நன்மை செயல். (1)

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் — மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. (2)

எண்ணி யொரு கருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்தும் போதல்லால் - கண்ணிலான்
மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே
ஆங்கால மாகு மவர்க்கு. (3)

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா [ங்கி
பொருந்துவன போமினென்றாற் போகா — இருந்தே
நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரந் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். (4)

உள்ள தொழிய ஒருவர்க் கொருவர்சுகம்
கொள்ளக் கிடையா குவலயத்தில் — வெள்ளக்
கடலோடி மீண்டு கரையேறி னாலென்
உடலோடு வாழும் உயிர்க்கு (5)

எல்லாப் படியாலும் எண்ணினா லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை — நல்லார்
அறிந்திருப்பா ராதலினால் ஆங்கமல நீர்போல்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு. (6)

ஈட்டும் பொருண்முயற்சி எண்ணிறந்த வாயினும்ஊழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம் — தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணுந் தனம். (7)

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும் — ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. (8)

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் — வேண்டா
நமக்கும் அதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும். (9)

ஒருநா ளுணவை யொழியென்றா லொழியாய்
இருநாளுக் கேலென்றால் ஏலாய் — ஒருநாளும்
என்னோ வறியாய் இடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது. (10)

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே — ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. (11)

ஆவாரை யாரே யழிப்ப ரதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர் — ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல். (12)

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி யிடித்துண்கை — சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர்விடுகை சால வுறும். (13)

தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணங்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால் — பெண்ணீர்மை
கற்பழியா வாற்றால் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமா மென்றே அறி. (14)

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம் — வையத்
தறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல். (15)

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் எனவேண்டார் — மற்றோர்
இரணங் கொடுத்தா லிடுவர் இடாரே
சரணங் கொடுத்தாலுந் தாம். (16)

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்-
தும், பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும் —
போவிப்பம், பாழி னுடம்பை வயிற்றின் கொடுமை-
யால், நாழி யரிசிக்கே நாம். (17)

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் — கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம். (18)

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே — மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை. (19)

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ் — மாறில்
உடற்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை. (20)

ஆன முதலில் அதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப் — போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானாம் நாடு. (21)

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவமுயர்ச்சி தாளாண்மை — தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம். (22)

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும் — ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல். (23)

உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன — கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்தனையுஞ் சஞ்சலமே தான். (24)

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை — சுரந்தமுதம்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர். (25)

தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே — வேந்தே
ஒறுத்தாரை யென்செயலாம் ஊரெல்லா மொன்றாய்
வெறுத்தாலும் போமோ விதி. (26)

இழுக்குடைய பாட்டின் இசைநன்று சால
ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று — வழுக்குடைய
வீரத்தின் நன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தின் நன்று தனி. (27)

ஆறிடு மேடும் மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் — சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. (28)

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சிற் பாயாது — நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். (29)

கல்லானே யானாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர் — இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்
டாள், செல்லா தவன்வாயிற் சொல். (30)

பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே — தூவா
விரைத்தாலு நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு. (31)

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியுங் — கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர். (32)

ஔவையார் அருளிச்செய்த

II. வாக்குண்டாம்

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நானாழி — தோழி
நிதியுங் கணவனும் நேர்படினும் தந்தம்
விதியின் பயனே பயன். (1)

உடன் பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி — உடன் பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு. (2)

இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின் — இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும். (3)

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப் | த்து
பொற்பிளவோ டொப்பாரும் போல்வரே — விற்பிடி
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம். (4)

நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு — நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். (5)

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொல்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம் — மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண். (6)

சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தங் குறைபடா தாதலால் — தந்தம்
தனஞ்சிறிய ராயினுந் தார்வேந்தர் கெட்டால்
மனஞ்சிறிய ராவரோ மற்று. (7)

III. நீதி வெண்பா

சிற்றுணர்வோ ரென்றுஞ் சிலுசிலுப்பார் நன்றமைந்த
முற்றுணர்வோ ரென்று மொழியாரே-வெற்றிபெறும்
வெண்கலத்தி லோசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தி லுண்டோ வொலி. (1)

பொற்பறிவில் லாதபல புத்திரப்பே றெய்தலினோர்
நற்புதல்வ னைப்பெறுதல் நன்றாமே—பொற்கொடியே
பன்றிபல குட்டி பயந்ததனா லேதுபயன்
ஒன்றமையா தோகரிக்கன் றேது. (2)

ஆபுமலர்த் தேன்வண் டருந்துவது போலிரப்போர்
ஈயு மவர்வருந்தா தேற்றலறம் — தூயவிளம்
பச்சிலையைக் கீடமணம் பற்றி யரிப்பதுபோல்
அச்சமுற வாங்க லகம். (3)

மனம்வேறு சொல்வேறு மன்னுதொழில் வேறு
வினைவேறு பட்டவர்பால் மேவும் — மனமே [றே
மனமொன்று சொல்லொன்று வான்பொருளு மொன்
கனமொன்று மேலவர்தங் கண். (4)

நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே — நிந்தைமிகும்
தாலநிழற் கீழிருந்தான் தான்பா லருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார் (5)

வாக்குநயத் தானறிக கற்றவரை மற்றவரை
யாக்கைநயத் தாலறிய லாகாதே — காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடோசையா லன்றியே
கோலத் தறிவாரோ கூறு. (6)

உத்தமர்தா மீயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாந் தெங்குதனை மானுவரே — முத்தலரும்
ஆங்கமுகு போல்வர் அதமர் அவர்களே
தேங்கதலி யும்போல்வர் தேர்ந்து. (7)

எல்லோர் தமக்கும் இனிதுதவ லன்றியே
நல்லோர் தமக்குதவி நாடாரே — வல்லதரு
நாமநிதி மேகம் நயந்துதவ லன்றியே
தாமுதவி நாடுமோ சாற்று. (8)

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழ்கினுநூல்
வல்லா னொருவனையே மானுவரோ — அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா வாமோ விளம்பு. (9)

I. நல்வழி

[காப்பு] ‘பாலும் தெளிதேனும்’ என்னும் பாட்டு.

கோலம் செய் துங்கம் கரி முகத்துத் தூ மணியே! நான், உனக்கு பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்து தருவேன்; நீ எனக்கு சங்கம் தமிழ் மூன்றும் தா.

கோலம் - அழகு	கரி - யானை
துங்கம் - உயர்வு	தூ - பரிசுத்தம்

1. ‘புண்ணியமாம்’ என்னும் பாட்டு.

புண்ணியம் ஆம்; பாவம் போம்; போனநாள் செய்த அவை மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள்; எண்ணுங்கால், எ சமயத்தோர் சொல்லும், ஈது ஒழிய வேறு இல்லை, தீது ஒழிய, நன்மை செயல்.

சமயம் - மதம்	தீது - கெடுதி
ஈது - இது	செயல் - செய்கை

2. ‘சாதி யிரண்டொழிய’ என்னும் பாட்டு.

சாற்றுங்கால், மேதினியில், சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை; நீதி வழுவா நெறி முறையின், இட்டார் பெரியோர்; இடாதார் இழிகுலத்தோர்; பட்டாங்கில் உள்ளபடி.

சாற்றுதல் - சொல்லுதல்	நெறிமுறை - வழியின் முறை
மேதினி - பூமி	இட்டார் - கொடுத்தவர் [மை
வழுவா - தவறாத	பட்டாங்கு - உண்மையாகிய நூல்

3. ‘எண்ணியொரு’ என்னும் பாட்டு.

யார்க்கும், புண்ணியம் வந்து எய்தும்போது அல்லால், எண்ணி ஒரு கருமம் செய்யவொண்ணாது; கண் இல்லான், மாங்காய் விழ எறிந்த மாத்திரைக் கோல் ஒக்கும்; ஆம் காலம் அவர்க்கு ஆகும்.

எய்தும்போது - சேரும்போ	ஒண்ணாது - முடியாது [கோல்
கருமம் - தொழில் [து	மாத்திரைக் கோல் - அளவு

4. 'வருந்தி யழை' என்னும் பாட்டு.

வருந்தி அழைத்தாலும், வாராத வாரா, பொருந்துவன போமின் என்றால் போகா; இருந்து ஏங்கி, நெஞ்சம் புண் ஆக, நெடுந்தூரம் தாம் நினைந்து, துஞ்சுவதே மாந்தர் தொழில்.

பொருந்துவன - வருபவை	துஞ்சுவது - உறங்குவது
போமின் - போங்கள் [கள்	மாந்தர் - மனிதர்

5. 'உள்ள தொழிய' என்னும் பாட்டு.

உள்ளது ஒழிய, ஒருவர்க்கு ஒருவர் சுகம் கொள்ள கிடையா; குவலயத்தில், உடலோடு வாழும் உயிர்க்கு, வெள்ளம் கடல் ஓடி மீண்டு கரை ஏறினால் என்?

குவலயம் - பூமி	மீண்டு - திரும்பி

6. 'எல்லாப் படியாலும்' என்னும் பாட்டு.

எல்லா படியாலும், எண்ணினால், இ உடம்பு பொல்லா புழு மலி நோய் புன் குரம்பை; நல்லார் அறிந்து இருப்பார்; ஆதலினால், சமலம் ஆம் நீர்போல் பிரிந்து இருப்பார்; பிறர்க்கு பேசார்.

மலி - மிகுந்த	குரம்பை - சிறு வீடு
புன்மை - அற்பமாகிய	சமலம் - தாமரை

7. 'ஈட்டும் பொருள் முயற்சி' என்னும் பாட்டு.

மகிதலத்தீர்! கேண்மின், ஈட்டும் பொருள் முயற்சி எண் இறந்த ஆயினும், ஊழ் கூட்டும்படி அன்றி கூடா; தேட்டம் மரியாதை; தனம் தரியாது.

மகிதலம் - பூமி	ஊழ் - (முன்செய்த) வினை
கேண்மின் - கேளுங்கள்	தேட்டம் - தேடத்தகுவது
ஈட்டும் - தேடுதற்குரிய	தனம் - பொருள்

8. 'ஆற்றுப் பெருக்கற்று' என்னும் பாட்டு.

ஆறு பெருக்கு அற்று, அடிசுடும் அந்நாளும், அவ்வாறு ஊற்று பெருக்கால் உலகு ஊட்டும்; நல்ல குடி பிறந்தார், நல்கூர்ந்தார் ஆனாலும், ஏற்றவர்க்கு இசைந்து இல்லை என மாட்டார்.

பெருக்கு - நீர் மிகுதி	நல்குரவு - தரித்திரம்
உலகு - உலகத்தார்	இசைந்து - மனமார

9. 'ஆண்டாண்டு தோறும்' என்னும் பாட்டு.

மாநிலத்தீர்! ஆண்டு, ஆண்டு தோறும், அழுது புரண்டாலும், மாண்டார் வருவரோ? வேண்டா; நமக்கும் அது வழியே; நாம் போம் அளவும், எமக்கு என் என்று இட்டு, உண்டு இரும்.

மா நிலம் - பெரிய பூமி	மாண்டார் - இறந்தவர்
ஆண்டு - (இறந்த) அவ்விடம்	இட்டு - (பிச்சை) இட்டு
ஆண்டு - வருடம்	உண்டு - சாப்பிட்டு

10. 'ஒரு நாளுணவை' என்னும் பாட்டு.

இடும்பைகூர் என் வயிறே! ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்; இரு நாளுக்கு எல் என்றால் ஏலாய்; என் நோ ஒருநாளும் அறியாய்; உன்னோடு வாழ்தல் அரிது.

இடும்பைகூர் - துன்பம் மிகுதற்கு ஏதுவாகிய	ஏலாய் - ஏற்றுக்கொள்ளாய்
எல் - ஏற்றுக்கொள்	நோ - நோய்

11. 'ஆற்றங் கரையின்' என்னும் பாட்டு.

ஆற்றங் கரையில் மரமும், அரசு அறிய வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே; உழுது உண்டு வாழ்வு ஏற்றம்; அதற்கு ஒப்பு இல்லை; வேறு ஓர் பணிக்கு பழுது உண்டு.

வீற்றிருந்த - பெருமையாயிருந்த	பணி - தொழில்
ஏற்றம் - உயர்வினதாகும்	பழுது - அழிவு

12 'ஆவாரை யாரே' என்னும் பாட்டு.

அம் புவி அதன்மேல், ஆவாரை அழிப்பார் யார்? அது அன்றி சாவாரை தவிர்ப்பவர் யார்? ஓவாமல் ஐயம் புகுவாரை விலக்குவார் யார்? மெய்.

அம் புவி - அழகிய பூமி	ஐயம் - பிச்சை
ஓவாமல் - ஒழியாமல்	புகுவார் - போவார்

13. 'பிச்சைக்கு மூத்த' என்னும் பாட்டு.

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால், இச்சை பல சொல்லி இடித்து உண்கை; சிச்சீ, வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது உயிர் விடுகை சால உறும்.

மூத்த - பெரிய	சால உறும் - மிகப் பயனுள்ளதாம்

14. 'தண்ணீர் நில நல' என்னும் பாட்டு.

தண் நீர் நிலம் நலத்தால், தக்கோர் குணம் கொடையால், கண் நீர்மை மாறா கருணையால், பெண் நீர்மை கற்பு அழியா ஆற்றல், கடல் சூழ்ந்த வையகத்துள் அற்புதம் ஆம் என்று அறி.

நிலநலம் - நிலத்தினது	ஆற்றல் - விதத்திலும்
தக்கோர்-மேலோர் [நன்மை	வையகம் - பூமி [தக்கது
கொடை - கொடுத்தல்	அற்புதம் - ஆச்சரியப்படத்

15. 'செய் தீவினை யிருக்க' என்னும் பாட்டு.

வையத்து, பாவம் அறம் என்ன அறிந்து, அன்று இடார்க்கு, செய் தீவினை இருக்க, இன்று தெய்வத்தை நொந்தக்கால், இரு நிதியம் எய்த வருமோ? வெறும் பானை மேல் பொங்குமோ?

வையம் - பூமி [பாவம்	இரு நிதியம் - மிகுந்த திரவி
செய் தீவினை - செய்த	எய்த - அடைய [யம்

16. 'பெற்றார் பிறந்தார்' என்னும் பாட்டு.

பேர் உலகில், பெற்றார், பிறந்தார், பெரு நாட்டார், உற்றார், உகந்தார் என வேண்டார்; மற்றோர் இரணம் கொடுத்தால் இடுவர்; சரணம் கொடுத்தாலும் இடார்.

பேர் உலகு - பெரியபூமி	வேண்டார் - விரும்பாத லோ
உற்றார் - சுற்றத்தார்	இரணம் - காயம [பிகள்
உகந்தார் - சிநேகர்	சரணம் - அடைக்கலம்

17. 'சேவித்துஞ் சென்றிரந்தும்' என்னும் பாட்டு.

வயிற்றின் கொடுமையால் நாழி அரிசிக்கு, நாம் சேவித்தும், சென்று இரந்தும், தெள் நீர் கடல் கடந்தும், பாவித்தும், பார் ஆண்டும், பாட்டு இசைத்தும், உடம்பை பாழின் போவிப்பம்.

நாழி - படி [செய்தல்	பாவித்தல் - மதித்தல்
சேவித்தல் - சேவகஞ்	பார் - பூமி
இரத்தல் - யாசித்தல்	இசைத்தல் - பாடுதல் [ம்
தெள் - தெளிவாகிய	போவிப்பம் - செலுத்துவோ

18. 'பாடுபட்டுத் தேடி' என்னும் பாட்டு.

பணத்தை, பாடுபட்டு தேடி புதைத்துவைத்து, கேடு கெட்ட மானிடரே! கேளுங்கள், இங்கு கூடுவிட்டு ஆவி

போயின பின்பு, பாவிகாள் அந்த பணம் ஆர் அனுப-விப்பார்?

பாடு - கஷ்டம்	கூடு - சரீரம்
மானிடர் - மனிதர்	ஆவி - உயிர்

19. ‘வேதாளஞ் சேருமே’ என்னும் பாட்டு.

மன்று ஓரம் சொன்னார் மனை, வேதாளஞ் சேரும்; வெண்மை எருக்கு பூக்கும், பாதாளமூலி படரும், மூதேவி சென்று இருந்து வாழ்வள்; சேடன் குடி புகும்.

மன்று - நியாயஸ்தலம்	மனை - வீடு
ஓரம் - பக்ஷபாதம்	சேடன் - பாம்பு

20. ‘நீறில்லா நெற்றி பாழ்’ என்னும் பாட்டு.

நீறு இல்லா நெற்றி பாழ்; நெய் இல்லா உண்டி பாழ்; ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்; மாறு இல் உடன் பிறப்பு இல்லா உடம்பு பாழ்; மடக்கொடி இல்லா மனை பாழே.

நீறு - திருநீறு	மாறுஇல் - மாறுபாடில்லாத
உண்டி - போசனம்	மடக்கொடி - மனைவி

21. ‘ஆன முதலி லதிகம்’ என்னும் பாட்டு.

ஆன முதலில், அதிகம் செலவு ஆனால், மானம் அழிந்து மதிகெட்டு, போன திசை எல்லார்க்கும் கள்ளன் ஆய்; எழ் பிறப்பும் தீயன் ஆய், நல்லார்க்கும் பொல்லன் ஆம்; நாடு.

மானம் - பெருமை	நல்லார் - ஸ்திரீகள்
மதி - புத்தி	நாடு - ஆராய்ந்தறி

22. ‘மானங் குலங் கல்வி’ என்னும் பாட்டு.

பசி வந்திட, மானம், குலம், கல்வி, வண்மை, அறிவு-டைமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, தேனின் கசி வந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும் பறந்து போம்.

வண்மை - கொடுத்தல்	தாளாண்மை - முயற்சி
தானம் - தானஞ் செய்தல்	தேனின்கசிவு - தேன் ஊற்று
உயர்ச்சி - உயர்வு	காமுறுதல் - விரும்புதல்

23. 'ஒன்றை நினைக்கின்' என்னும் பாட்டு.

ஒன்றை நினைக்கின், அது ஒழிந்திட்டு, ஒன்று ஆகும்; அன்றி, அது வரினும் வந்து எய்தும்; ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்; எனை ஆளும் ஈசன் செயல்.

எய்தும் - கிடைக்கும்	ஈசன் - கடவுள்

24. 'உண்பது நாழி' என்னும் பாட்டு.

கண்புதைந்த மாந்தர், உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம்; நினைந்து எண்ணுவன எண்பது கோடி; மண்ணின் கலம்போல சாந்தனையும், குடி வாழ்க்கை சஞ்சலமே.

கண்புதைந்த - (அஞ்ஞானத்தால்) குருடாயிருக்கும்	கலம் - பாத்திரம்
மாந்தர் - மனிதர்	சஞ்சலமே - துன்பமுடையதே

25. 'மரம் பழுத்தால்' என்னும் பாட்டு.

மரம் பழுத்தால், வெளவாலை வா என்று கூவி, இரந்து அழைப்பார் யாவரும் அங்கு இல்லை; கன்று ஆ அமுதம் சுரந்து தரல்போல் கரவாது அளிப்பரேல் உலகத்தவர் உற்றார்.

இரந்து அழைப்பார் - வேண்டி அழைப்பவர்	கரவாது - ஒளிக்காமல்
கன்று ஆ - கன்றையுடைய பசு	அளிப்பரேல் - கொடுப்பாராகில்
	உற்றார் - உறவினர்

26. 'தாந்தா முன்' என்னும் பாட்டு.

வேந்தே! பூந்தாமரையோன் பொறிவழியே, முன் தாம் தாம் செய்த வினை தாமே அனுபவிப்பார்; ஒறுத்தாரை என் செயலாம்? ஊர் எல்லாம் ஒன்றா வெறுத்தாலும் விதி போமோ?

வேந்தே - அரசனே	பொறி - எழுத்து
பூந்தாமரையோன் - தாமரைப் பூவிலிருக்கும் பிரமன்	முன் - முற்பிறப்பில்
	வினை - வினைகள்
	ஒறுத்தார் - தீங்கு செய்தார்

27. 'இழுக்குடைய' என்னும் பாட்டு.

இழுக்கு உடைய பாட்டின் இசை சால நன்று; ஒழுக்கம் உயர் குலத்தின் நன்று; வழுக்கு உடைய வீரத்தின் விடாநோய் நன்று; பழிக்கு அஞ்சா தாரத்தின தனி நன்று.

இழுக்கு - குற்றம்	வழுக்கு - (போரில்) தவறுதல்
இசை - இராகம்	பழி - நிந்தை
ஒழுக்கம் - நடக்கை	தாரம் - மனைவி

28. 'ஆறிடு மேடு' என்னும் பாட்டு.

மா நிலத்தீர்! ஆம் செல்வம், ஆறு இடும் மேடும் மடுவும் போல் மாறிடும்; ஏறிடும்; சோறு இடுமே, தண்ணீரும் வாரும், தருமமே சார்பு ஆக, உள் நீர்மை உயர்ந்து வீறும்.

மா நிலத்தீர் - பெரிய பூமியிலுள்ளவர்களே	சார்பு - துணை
மடு - பள்ளம்	உள் நீர்மை - மனத்தின் பரிசுத்தம்
ஆம் - உண்டாயிருக்கும்	வீறும் - வளரும்

29. 'வெட்டெனவை' என்னும் பாட்டு.

வேழத்தில் பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது; வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம்; நெடுமை இருப்பு பாரைக்கு நெக்கு விடா பாறை பசுமை மரத்தின் வேருக்கு நெக்கு விடும்.

வேழம் - யானை	இருப்புப்பாரை - இரும்பாற் செய்த கட்டப் பாரை
கோல் - அம்பு	நெக்குவிடா - பிளவாத
வெட் டனவை - வலிய வைகள்	பாறை - கருங்கற்பாறை

30. 'கல்லானே யானாலும்' என்னும் பாட்டு.

கல்லானே ஆனாலும், கைப்பொருள் ஒன்று உண்டாயின், எல்லாரும் சென்று எதிர்கொள்வர்; இல்லானை இல்லாளும் வேண்டாள்; ஈன்று எடுத்த தாய் வேண்டாள்; அவன் வாயில் சொல் செல்லாது.

இல்லாள் - மனைவி	செல்லாது - பயன்படாது

31. 'பூவாதே காய்க்கும்' என்னும் பாட்டு.

பூவாதே காய்க்கும் மரமும் உள; ஏவாதே நின்று உணர்-வார் உளர்; தூவா விரைத்தாலும், நன்று ஆகா வித்து என-லே பேதைக்கு உரைத்தாலும், உணர்வு தோன்றாது.

ஏவாதே - தூண்டாமலே	நன்று ஆகா - நன்றாய் விளையாத
உணர்வார் - அறிபவர்	வித்து - விதை
தூவா - தூவி	உணர்வு - அறிவு

32. 'தேவர் குறளும்' என்னும் பாட்டு.

தேவர் குறளும், திருநான் மறை முடிவும், மூவர் தமி-ழும், முனி மொழியும், கோவை, திருவாசகமும், திருமூலர் சொல்லும், ஒரு வாசகம் என்று உணர்.

திருநால் மறை முடிவு - வேதங்களின் முடிவாகிய உபநிடதங்கள்	தேவர் - திருவள்ளுவநாயனார்
	மூவர் தமிழ் - தேவாரங்கள்

PRINTED AT THE 'CAXTON PRESS', MADRAS, E. — 1917.

வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

பாட புத்தகங்கள்

	ரு.	அ.	ப.
முதல் பாட புத்தகம்	0	2	6
இரண்டாம் பாட புத்தகம்	0	[illegible]	0
மூன்றாம் பாட புத்தகம்	0	4	0
நான்காம் பாட புத்தகம்	0	5	0
ஐந்தாம் பாட புத்தகம்	0	[illegible]	0
ஆறாம் பாட புத்தகம்	0	6	0
ஏழாம் பாட புத்தகம்	0	6	0
எட்டாம் பாட புத்தகம்	0	8	0
ஒன்பதாம் பாட புத்தகம்	0	[illegible]	0

திராவிட வாசகங்கள்

திராவிட பால பாடம் ...	0	1	6
முதல் திராவிட வாசகம் ...	0	2	6
இரண்டாம் திராவிட வாசகம் ...	0	[illegible]	0
மூன்றாம் திராவிட வாசகம்	0	[illegible]	[illegible]
நான்காம் திராவிட வாசகம்	[illegible]	[illegible]	0

நூதன வாசக புஸ்தகங்கள்

நூதன முதல் வாசக புஸ்தகம் ..	[illegible]	[illegible]	0
நூதன இரண்டாம் வாசக புஸ்தகம் ...	[illegible]	[illegible]	0
நூதன மூன்றாம் வாசக புஸ்தகம் ...	[illegible]	4	[illegible]
நூதன நான்காம் வாசக புஸ்தகம் ...	[illegible]	[illegible]	[illegible]

கணித புத்தகங்கள்

புதுச் சட்டக் கணிதம் 4 ஆம் வகுப்பு ..	[illegible]	[illegible]	[illegible]
புதுச் சட்டக் கணிதம் 3 ஆம் வகுப்பு ..	0	4	0
புதுச் சட்டக் கணிதம் 1-2 ஆம் வகுப்பு ..	0	[illegible]	0

புத்தக வியாபாரிகள், 35, சின்னதம்பித் தெரு, சென்